


அஷ்ஷஹீத்

# அஹ்மத் லெப்பை

ஹாஜியார்

# வாழ்வும் பணியும்

கவிமணி

மௌலவி எம்.எச்.எம்.புஹாரி

(பலாஹீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்ஷஹீத்

# அஹ்மத் லெப்பை

# ஹாஜியார்

# வாழ்வும் பணியும்

கவிமணி
மௌலவி எம்.எச்.எம்.புஹாரி
(பலாஹீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஷ்ஷஹீத்
## அஹ்மத் லெப்பை ஹாஜியார்
# வாழ்வும் பணியும்

கவிமணி
மௌலவி எம்.எச்.எம்.புஹாரி
(பலாஹீ)

வெளியீடு :

பள்ளிவாயல்கள் முஸ்லிம்
நிறுவனங்களின் சம்மேளனம்,
காத்தான்குடி.
28.03.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை
ஹாஜியார் வாழ்வும் பணியும்

தொகுப்பு : கவிமணி மௌலவி
எம் எச் எம் புஹாரி (பலாஹீ)

முதற் பதிப்பு : மார்ச் - 2014
( ஹிஜ்ரி 1435 ஜமாதுல் அவ்வல் )

பிரதிகள் : 500

பக்கங்கள் : 106

விலை : ரூபா 300.00

வெளியீடு : பள்ளிவாயல்கள் முஸ்லிம்
நிறுவனங்களின் சம்மேளனம்,
காத்தான்குடி

ISBN : 978-955-41143-0-2

அச்சகம் : டொட்லைன் ஓப்செட் பிரிண்டர்ஸ்
பிரதான வீதி, காத்தான்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மக்கள் மனங்கவர்ந்த எமது மாபெரும் தலைவர் அஷ்ஷஹீத் அல்ஹாஜ் ஏ. அஹ்மத் லெப்பை அவர்கள் **06.03.1988**இல் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களது நினைவு தினம் பல வருடங்களாக தொடர்ந்து நினைவுகூரப்பட்டு வந்தது. அனுதாப நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் நிகழ்ச்சியில் அவர்களது நினைவுச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. தேசிய பத்திரிகைகளிலும் நினைவுதினக் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.

அஷ்ஷஹீத் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் கடந்த சில வருடங்களாக, அவர்கள் மறைந்த தினத்தை நினைவுகூர்ந்து அனுதாபக் கூட்டங்களை நடத்தி வருகிறது. அஷ்ஷஹீத் அவர்களது நினைவாக சம்மேளனக் கட்டிடத்தில் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

அம்மண்டபத்தில் **06.03.2013**இல் நடைபெற்ற அஷ்ஷஹீத் அவர்களது நினைவுக் கூட்டத்தின்போது அவர்களது வாழ்க்கை வரலாற்றைக் கொண்ட ஒரு நூல் வெளியிடப்பட வேண்டுமென்ற கருத்து பலராலும் முன்வைக்கப்பட்டது. அஷ்ஷஹீத் அவர்கள் மறைந்து இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு பெறுவதாலும், அவர்களது வரலாறும் பணிகளும் தற்கால சந்ததிக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டியிருப்பதாலும் இந்நூலை **2014**ஆம் ஆண்டில் இடம்பெறும் அவர்களது நினைவு நிகழ்வின்போது வெளியிட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு இதற்கென ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இக்குழு இது தொடர்பான பணிகளை முன்னெடுத்தது. அஷ்ஷஹீத் அவர்களுடன் நெருங்கிப் பழகிய பலரிடமிருந்து தகவல்களைப் பெற்று நூல் தயாரிக்கும் பணியை மேற்கொண்டது. முடியுமான அளவு இந்நூலில் அஷ்ஷஹீத் அவர்களது வாழ்க்கை வரலாறும், அவர்கள் புரிந்த பணிகளும், அவர்களது பண்புகளும், முன்மாதிரிச் செயற்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சம்மேளனத்தின் சிறப்பான ஒத்துழைப்புடனும் நூல் வெளியீட்டுக் குழுவின் அயராத முயற்சியுடனும் இந்நூல் உருவாகியிருக்கிறது. அஷ்ஷஹீத் அவர்களைத் தற்காலச் சந்ததி முழுமையாகத் தெரிந்து கொள்ள இந்நூல் உதவும் என்ற நம்பிக்கையுடன் இதை உங்கள் கரங்களில் தவழச் செய்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை அழகுற அச்சிடுவதில், காத்தான்குடி டொட்லைன் ஓப்செட் பிரிண்டர்ஸ் உரிமையாளர் ஜனாப் ஏ.ஜே. அனீஸ் அஹ்மத் ஜே.பி அவர்கள் காட்டிய ஆர்வமும், அக்கறையும் பெரிதும் குறிப்பிடத்தக்கவை. நூலைக் கவர்ச்சிகரமாக அமைப்பதில் அவர்கள் மிகுந்த கவனஞ்செலுத்தினார்கள். தேவையான புகைப்படங்களை எமதூரிலும் வெளியூர்களில் இருந்தும் சேகரித்து பொருத்தமான இடங்களில் இடம்பெறச் செய்தார்கள். அவர்களுக்கு எமது விசேட நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அஷ்ஷஹீத் அவர்கள் பற்றிய தகவல்களையும், புகைப்படங்களையும் வழங்கிய சகோதரர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அஷ்ஷஹீத் அவர்களுக்கு மறுமைப் பேறுகள் நிறைவாகக் கிடைக்கப் பிரார்த்திப்போம்!

- நூல் வெளியீட்டுக் குழு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தான்குடி

இலங்கையில் சனங்கள் அடர்த்தியாக வாழும் பிரதேசங்களில் ஒன்றாக காத்தான்குடி நகரம் காணப்படுகிது. 14 பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் மாத்திரம் வாழும் ஒரு நகரம் காத்தான்குடி. ஏறத்தாள 6.5 சதுர கிலோ மீற்றர் பரப்பில் 18 கிராம சேவகர் பிரிவைக் கொண்டுள்ளது. இது மட்டக்களப்பு மாநகரத்தின் தெற்கே ஆறு கிலோ மீற்றருக்கப்பால் அமைந்துள்ளது. வடக்கே மஞ்சந்தொடுவாயையும் தெற்கே ஆரையம்பதியையும், கிழக்கே வங்காள விரிகுடாக் கடலையும், மேற்கே மட்டக்களப்பு வாவியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. 2012ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணிப்பீட்டின்படி சுமார் 12500 குடும்பங்களில் 48000க்கு மேற்பட்டோர் இங்கு வசிக்கின்றனர்.

இவ்வூர் 1947ஆம் ஆண்டு பட்டின ஆட்சி மன்ற நிருவாகத்தின் கீழ் வந்தது. இந்தப் பட்டின ஆட்சி மன்றத்தின் முதலாவது தலைவராக மறைந்த எஸ்.எம்.எம்.முஸ்தபா ஜே.பி. தெரிவு செய்யப்பட்டார். இவர் இவ்வூரின் காதி நீதிபதியாகவும், தபால் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். 1947 முதல் 1950 வரை இவர் காத்தான்குடி பட்டின ஆட்சி மன்றத் தலைவராகப் பதவி வகித்தார்.

1950 தொடக்கம் 1974 வரை முறையே, எம்.ஏ.ஆதம்லெப்பை ஆலிம் ஹாஜியார், எம்.ஏ.அப்துஸ்ஸலாம் ஆலிம், அல்ஹாஜ் ஏ.எல்.எம்.இஸ்மாயில், அல்ஹாஜ் எம்.ஐ.எம்.காசிம், அல்ஹாஜ் ஏ.எம்.எம்.இப்றாஹிம் ஆகியோர் பட்டின ஆட்சிமன்றத் தலைவர்களாகப் பதவி வகித்தனர். 1974 தொடக்கம் 1977 வரை நமது பெருந் தலைவர் அஷ்ஷஹீத் அல்ஹாஜ் ஏ. அஹ்மத் லெப்பை அவர்கள் இதன் தலைவராக இருந்தார்கள். அதற்கு முதல் 1958 தொடக்கம் 2ம் வட்டார உறுப்பினராகவும், சிறிது காலம் பட்டின ஆட்சி மன்ற உப தலைவராகவும் பதவி வகித்துள்ளார்கள்.

# பிறப்பு

அஷ்ஷஹீத் அல்ஹாஜ் அஹ்மத் லெப்பை அவர்கள் 14.10.1935 இல் காத்தான்குடி மூன்றாம் குறிச்சியில் பிறந்தார்கள். மர்ஹூம் டாக்டர் இஸ்ஸதீன் அவர்களின் குடும்பத்தினர் தற்போது வசிக்கும் இடம்தான் அஷ்ஷஹீத் அவர்களது பிறப்பிடமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது தந்தை அலியார் லெப்பை ஹாஜியார். தாயார் கதீஜா. அலியார் லெப்பை – கதீஜா தம்பதிக்குப் பிறந்த பிள்ளைகள் ஐவர். இருவர் பெண்கள். ஒருவர் ஆசியா உம்மா, மற்றவர் பாத்திமா. மூவர் ஆண்கள். அவர்கள் அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை, முகம்மது முகிதீன், அப்துல் ஜவாத் ஆகியோர்.

அலியார் லெப்பை ஹாஜியார் அவர்கள் தமது மனைவி கதீஜா அவர்கள் காலமானபின் காத்தான்குடி 4ம் குறிச்சியிலிருந்த ஹலீமா அவர்களை மணமுடித்தார்கள். ஹலீமா அவர்கள் சூபி ஹஸறத் என்று அழைக்கப்படும் முஸ்தபா மௌலவி (பலாஹி) அவர்களது தாயார் ஆவார். சூபி ஹஸறத்தும் அவரது சகோதரர்களும் ஹலீமா அவர்களது முதற் திருமணத்தில் பிறந்தவர்கள். அலியார் லெப்பை ஹாஜியார் அவர்கள் ஹலீமா அவர்களை மணமுடித்தபின் அவர்கள் இருவருக்கும் ஒர் ஆண் பிள்ளை பிறந்தது. பெயர் ஹாஜி முகம்மது. அவர் தற்போது காத்தான்குடி முதலாம் குறிச்சியில் மணமுடித்து வாழ்கிறார். ஆசிரியராகக் கடமை புரிந்து அண்மையில் ஒய்வு பெற்றுள்ளார்.

அலியார் லெப்பை ஹாஜியார் அவர்கள் மட்டக்களப்பு கோட்டை முனையில் சில்லறைக் கடை ஒன்றை நடத்தி வந்தார்கள். அதில் சகல பொருட்களும் சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்கப்பட்டன. அப்பகுதியில் பிரபலமான ஒரு வர்த்தகராக அலியார் லெப்பை ஹாஜியார் அவர்கள் விளங்கினார்கள்.

மட்டக்களப்புக்கும், காத்தான்குடிக்கும் இடையிலுள்ள நொச்சிமுனைக் கிராமத்தில் வாழ்ந்த மதார் ஸாஹிபு என்பவரின் பரம்பரையில் அலியார் லெப்பை ஹாஜியார் பிறந்தவர் என்று குறிப்பிடப்படுகிறது.

## கல்வி

அஷ்ஷஹீத் அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை தற்போது அல்ஹிறா மகா வித்தியாலயம் என்று அழைக்கப்படும் காத்தான்குடி 5ம் குறிச்சி பழைய தெரு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் மேற்கொண்டார்கள். பின்னர் 1948ம் ஆண்டில் காத்தான்குடி மத்திய கல்லூரியில் ஆறாம் வகுப்பிற் சேர்ந்து அங்கு தமது கல்வியைத் தொடர்ந்தார்கள். 1952ம் ஆண்டு ஆங்கில மொழி மூலம் எஸ்.எஸ்.சீ. பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின் அரசாங்க பொது எழுது வினைஞர் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைந்தார்கள். அதனால் செங்கலடி D.R.O. அலுவலகத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றும் வாய்ப்பைப் பெற்றார்கள். இப்பதவியைச் சிறிது காலம்தான் வகிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. தந்தை அலியார் லெப்பை ஹாஜியார் அவர்கள் திடீரென்று பக்கவாத நோயால் பீடிக்கப்பட்டு பாயும், படுக்கையுமாகிவிட்டார்கள். இதனால் வர்த்தக நிலையத்தைக் கவனிக்க ஆளில்லாது போய்விட்டது. அதனைப் பொறுப்பேற்க வேண்டிய நிர்ப்பந்தம் அஷ்ஷஹீத் அவர்களுக்கு ஏற்பட்டது. எனவே, எழுதுவினைஞர் பதவியைத் தாமாகவே துறந்து வர்த்தகத்தை முழுமையாகப் பொறுப்பேற்றார்கள்.

## மார்க்கக் கல்வி

பாடசாலையில் கல்வி பயிலும் போதே பொதுப் பணியில் ஆர்வம் காட்டிய அஷ்ஷஹீத் அவர்கள் மார்க்க விவகாரங்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்கள். சிறுவயதிலேயே அல்குர்ஆனைத் திருத்தமாக ஓதக் கற்றுக்கொண்டார்கள்.

அக்காலத்தில் மார்க்கக் கல்வி போதிக்கும் அறபுக் கல்லூரிகள் காத்தான்குடியில் இருக்கவில்லை. சிலர் வெளியூர்களுக்கும், இந்தியாவுக்கும் சென்றுதான் மார்க்கக் கல்வி கற்றுவந்தார்கள். அவ்வாறு வெளியூர் சென்று மார்க்கக் கல்வி பயிலும் சந்தர்ப்பம் அஷ்ஷஹீத் அவர்களுக்கு இருக்கவில்லை.

அச்சந்தர்ப்பத்தில் இவ்வூரில் சிறந்த மார்க்க அறிஞராக விளங்கிய மர்ஹூம் அப்துல் ஜவாத் ஆலிம் ஸாஹிப் அவர்கள் மார்க்கக் கல்விப் போதனையை காத்தான்குடியில் வழங்கிக் கொண்டிருந்தார்கள். அதில் வளர்ந்தோரும், மாணவர்களும் சேர்ந்து பயின்றார்கள். அஷ்ஷஹீத் அவர்களும் அங்கேயே மார்க்கக் கல்வி பயின்றார்கள்.

இதனால் அஷ்ஷஹீத் அவர்கள் இளமையிலேயே மார்க்க அறிவைச் சிறப்பாகப் பெற்றிருந்தார்கள். அதனால் எல்லா விடயங்களையும் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் நோக்குபவர்களாக இருந்தார்கள். இஸ்லாமிய அறிவு நிரம்பப் பெற்றிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமணம்

**1955** ஆம் ஆண்டு இருபதாவது வயதில் இல்லறத்தில் நுழைந்தார்கள். அஷ்ஷஹீத் அவர்களுக்கு மச்சான்மார் இருவர் இருந்தனர். ஒருவர் ஈ.எல்.எம். இப்றாஹீம். அவருக்கு ஏறாவூரில் ஒரு கடையும் அரிசி ஆலையும் இருந்தன. அத்துடன் விவசாயத்திலும் ஈடுபட்டார். மற்றவர் காத்தான்குடியின் மூத்த கல்விமானும், பாடசாலை பலவற்றில் சிறந்த அதிபராகக் கடமையாற்றியவருமான எம்.கே.எம்.இஸ்மாயில் அவர்கள்.

அஷ்ஷஹீத் அவர்கள் தமது மாமா சுலைமா லெப்பை ஆலிமின் மகளை மணமுடிக்க வேண்டுமென மூத்த மச்சான் விரும்பினார். யூசுப் ஹாஜியாரின் மகளை மணமுடிக்க வேண்டுமென்று இளைய மச்சான் எம்.கே.எம்.இஸ்மாயில் அதிபர் விரும்பினார். இளைய மச்சானின் விருப்பப்படி யூசுப் ஹாஜியாரின் மகள் கதீஜா அவர்களையே அஷ்ஷஹீத் அவர்கள் தமது இல்லறத் துணைவியாய் ஏற்றார்கள். இவர்களுக்கு ஐந்து பிள்ளைகள். மூவர் ஆண்கள். ஒருவர் அல்ஹாஜ் ஏ.எல்.எம்.மன்சூர் மற்றவர் அல்ஹாஜ் மர்சூக் அஹ்மத் லெப்பை அடுத்தவர் மௌலவி மக்பூல் (பலாஹி). பெண்பிள்ளைகளில் மூத்தவர் சித்தி ஜெஸீமா இவரை அல்ஹாஜ் எம்.ஐ.எம்.ஸலீம் மணமுடித்துள்ளார். இளையவரை ஜனாப் தௌபீக் ஆசிரியர் மணமுடித்துள்ளார். இவரது பெயர் சித்தி மாஜிதா. இவர் கடந்த **20.12.2013** வெள்ளிக் கிழமை காலமானார்.

## மட்டக்களப்பு வர்த்தகர் சங்கம்

மட்டக்களப்பில் வர்த்தக நிலையத்தை நடத்திக்கொண்டிருக்கும் போதே பொதுப்பணிகளிலும் அஷ்ஷஹீத் அவர்கள் முனைப்புக் காட்டினார்கள். மட்டக்களப்பு மாநகரில் வர்த்தகம் செய்துவந்த முஸ்லிம்களை ஒன்றிணைத்து மட்டக்களப்பு முஸ்லிம் வர்த்தக சங்கத்தைத் தொடங்கினார். இவரது இம் முயற்சிக்கு அல்ஹாஜ் எம்.ஐ.ஏ. முகிதீன் ஜே.பி., அல்ஹாஜ் ஏ.எல்.எம்.இஸ்மாயில், அல்ஹாஜ் எம்.பீ.அப்துல் மஜீத் ஜே.பி. ஆகியோர் பெரிதும் துணை நின்றனர்.

**1955**ம் ஆண்டு இச்சங்கம் உதயமானது. அதன் தலைவராக எம்.முகம்மது காசிம் ஹாஜியார் அவர்களும் உப தலைவர்களாக பி.எம்.எம்.அபூபக்கர் ஹாஜியார், ஏ. நூஹு லெப்பை ஹாஜியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Nolimit முபாறக் ஹாஜியாரின் தந்தை) ஆகியோரும், இணைச் செயலாளர்களாக அஷ்ஷஹீத் அல்ஹாஜ் ஏ.அஹ்மத் லெப்பை, அல்ஹாஜ் எம்.ஐ.ஏ.முகிதீன் ஜே.பி ஆகியோரும், பொருளாளராக ஏ.பி.எம்.நூகு லெப்பை ஹாஜியார் (Tip Top) அவர்களும் பதவி வகித்தனர்.

அஷ்ஷஹீத் அவர்களது பொதுப் பணிக்கு உரமூட்டிய பெருமை இச்சங்கத்தையே சாரும். இச்சங்கம் முஸ்லிம் வர்த்தகர்களைக் கொண்டிருந்தாலும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் இனத்தையும் அரவணைத்துச் சென்றது.

இச்சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு முற்ற வெளியில் ஆண்டு தோறும் நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தையொட்டிய மீலாத் விழாக்கள் விமர்சையாக நடைபெற்றன. உள் நாட்டிலும், வெளிநாடுகளிலும் புகழ்பூத்து விளங்கிய அறிஞர்ப் பெருமக்கள் பலர் இவ்விழாக்களில் பேச்சாளர்களாகக் கலந்து பேருரைகள் வழங்கினர். இறையருட் கவிமணி பேராசிரியர் கா.அப்துல் கபூர் எம்.ஏ., அவரது சகோதரர் பேராசிரியர் கா. முகம்மது பாறூக், திருப்பூர் முகிதீன், சொற்கொண்டல் சீ.கஸ்ஸாலி, பேரறிஞர் எம்.ஏ.கனி, மணிமொழி மௌலானா கலீலுர் ரஹ்மான் ஹஸறத் போன்ற தென்னிந்தியப் பேரறிஞர்களும், இலங்கையைச் சேர்ந்த மர்ஹூம் மஸ்ஊத் ஆலிம் ஸாஹிப், பேராசிரியர் சு.வித்தியானந்தன், சொல்லேறுழவர் - முன்னாள் மட்டு நகர் முதல்வர் செல்லையா இராசதுரை போன்றோரும் குறிப்பிடத்தக்கவர்கள். இஸ்லாமியச் செழுமையும், இலக்கியச் சுவையும் பொதிந்த இவர்களது தமிழ்ச் சொற்பொழிவுகளைக் கேட்க ஓட்டமாவடி தொடக்கம் பொத்துவில் வரையுள்ள முஸ்லிம்களும், தமிழ் மக்களும் பல்லாயிரக் கணக்கில் திரண்டிருப்பர். அவ்வேளையில் மட்டுமாநகரே விழாக் கோலம் பூண்டிருக்கும்.

இத்தகைய மீலாத் விழாக்கள் பிற்காலத்தில் காத்தான்குடியிலும் தொடர்ந்து நிகழ்ந்தன. காத்தான்குடி மௌலானா கபுறடியில் அப்போது விசாலமான நிலப்பரப்பு இருந்தது. அவ்விடத்தில் மீலாத் விழாக்களும், வேறு பல சமய, இலக்கிய, அரசியல் விழாக்களும் விமர்சையாக நிகழ்வுற்றன. அஷ்ஷஹீத் அவர்களே இவ்விழாக்களையெல்லாம் முன்னின்று நடத்தினார்கள். அவர்களே தலைமை வகித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு முஸ்லிம் வர்த்தகர் சங்கத்தின் குறிப்பிடத்தக்க - காலத்தால் மறக்க முடியாத ஒரு சேவையாக காத்தான்குடியில் ஒரு கல்வி மானை உருவாக்கியதைக் குறிப்பிட்டாக வேண்டும். காத்தான்குடி முதலாம் குறிச்சியில் வறிய குடும்பத்திற் பிறந்த ஜனாப் மீராசாகிப் உயர் கல்விக்காக ஜப்பான் நாட்டுக்குச் செல்லவேண்டி ஏற்பட்டது. அவர் மிகவும் வறியவர். பொருளாதாரப் பலம் அற்றவர். அவரை ஜப்பானுக்கு அனுப்ப வேண்டுமென்று அஷ்ஷஹீத் அவர்கள் உறுதி பூண்டார்கள். மட்டக்களப்பு முஸ்லிம் வர்த்தகர் சங்கத்தின் செயலாளர் என்ற வகையில் அச்சங்கப் பிரமுகர்களுடன் இணைந்து செயற்பட்டு அவரை ஜப்பானுக்கு அனுப்பி வைத்தார்கள். அவர் தனது உயர் கல்வியை வெற்றிகரமாக மேற்கொண்டு பொறியியலாளராகப் பட்டம் பெற்றார். அவர் தற்பொழுதும் வெளிநாடுகளில் நல்ல நிலையில் வாழ்கிறார். கல்விச் செல்வத்துடன் பொருட் செல்வமும் பெற்றுள்ளார். மிகவும் நன்றியுணர்வுள்ள அவர் காத்தான்குடியிலும், வெளியூர்களிலும் உயர் கல்வி பெறும் வறிய மாணவர்களுக்கு பொருளாதார உதவிகளை வழங்கியுள்ளார்.

## தல்கொடபிட்டிய தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு

**1947**ம் ஆண்டு இலங்கையின் முதலாவது பாராளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதில் மர்ஹூம் முதலியார் சின்னலெப்பை அவர்கள் மட்டுமே முஸ்லிம்கள் சார்பில் போட்டியிட்டார்கள். தமிழர் சார்பில் திரு.கே.வி.எம்.சுப்ரமணியம், திரு.என்.எஸ்.இராசையா, திரு.ஈ.இராசையா ஆகிய சட்டத்தரணிகளும் வேறு சிலரும் போட்டியிட்டனர். இதனால் தமிழ் மக்களின் வாக்குகள் சிதறுண்டு போயின. முஸ்லிம்களின் வாக்குகள் அனைத்தும் முதலியார் சின்னலெப்பை அவர்களுக்கே கிடைத்தன. அதனால் முதலியார் சின்னலெப்பை பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

**1952**ம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலிலும் தமிழர்களின் வாக்குகள் சிதறுண்டதால் முஸ்லிம் ஒருவரே தெரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டார். தொடர்ந்து இரு தடவைகளிலும் தமிழர்கள் தமது பிரதிநிதியை இழந்துவிட்டதால் அவர்கள் ஆத்திரமுற்றனர். தமிழ் முஸ்லிம் கலவரம் வெடித்தது. முஸ்லிம்களின் கடைகள் கொள்ளையிடப்பட்டன. காத்தான்குடி மக்கள் வெளியிடங்களுக்குச் சென்று வியாபாரம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் முஸ்லிம்கள் மிகவும் வேதனையடைந்தனர். இது அஷ்ஷஹீத் அவர்களது உள்ளத்தைக் கடுமையாகக் காயப்படுத்தியது. தமது நண்பர்களுடன் கலந்தாலோசித்தார்கள். இந்தப் பெரும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது எப்படி என்று இரவு பகலாகச் சிந்தித்தார்கள்.

இவ்வேளையில் 1958ம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க ஆட்சியில், தல்கொடபிட்டிய தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. தேர்தல் தொகுதிகள் தொடர்பாக விசாரணை செய்து ஆவனசெய்யும் ஆணைக்குழு இது. இச்சந்தர்ப்பத்தில் காத்தான்குடியைக் கொக்கட்டிச்சோலையுடனும் ஏறாவூரை மட்டக்களப்புடனும் சேர்த்து முஸ்லிம்களது அரசியல் உரிமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் முயற்சியில் சிலர் ஈடுபட்டிருந்தனர். இவ்வேளையில்தான் இக்குழு மட்டக்களப்புக்கு வருகை தந்தது. இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்த அஷ்ஷஹீத் அவர்கள் முற்பட்டார்கள். மட்டக்களப்பு முஸ்லிம் வர்த்தகர் சங்கத்தின் முக்கியஸ்தர்களைக் கூட்டி ஆலோசித்தார்கள். இம்முயற்சிக்கு அல்ஹாஜ் எம்.ஐ.ஏ. முகிதீன் ஜே.பி. அவர்களும், மர்ஹூம் ஏ.எல்.எம். இஸ்மாயில் (ராசா) ஹாஜியார் அவர்களும் உறுதுணையாக நின்றார்கள். மட்டக்களப்புத் தொகுதியில் முஸ்லிம்களுக்கென்று தனியான முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கான ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்ற உணர்வை இத்தொகுதியிலுள்ள முஸ்லிம்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக அஷ்ஷஹீத் தலைமையில் இரவு பகலாக முயற்சி செய்யப்பட்டது.

இதன்படி மேற்படி ஆணைக்குழுவை மட்டக்களப்பு நகர மண்டபத்தில் சந்தித்து தமது கோரிக்கையை முன்வைத்தார்கள். நியாயமான இக்கோரிக்கை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. இதன்படி 1960ஆம் ஆண்டு மட்டக்களப்புத் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் மூலம் தமிழ் மக்கள் ஒரு தமிழ்ப் பிரதிநிதியையும் முஸ்லிம்கள் ஒரு முஸ்லிம் பிரதிநிதியையும் தொடர்ந்து தெரிவு செய்யும் அரிய வாய்ப்புக் கிடைத்தது. இது அஷ்ஷஹீத் அவர்களது பெரிய சாதனையாகும். மட்டக்களப்புத் தொகுதியில் முஸ்லிம் பிரதேசங்களை உள்ளடக்கிய ஒரு தொகுதியை அமைப்பது தொடர்பான முயற்சியிலும் அஷ்ஷஹீத் அவர்கள் ஈடுபட்டார்கள். இதில் கலாநிதி ஏ.சி.எல்.அமீரலி, அல்ஹாஜ் ஏ.எல்.அப்துல் ஜவாத் பி.ஏ, எல்.எல்.பி, போன்றோரும் பங்குகொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தன்னிகரற்ற தலைவர் அவர்களின் கம்பீரத் தோற்றம்



நமது தலைவர் அவர்களின் தளராத முயற்சியினால் தோன்றிய மட்டக்களப்பு வர்த்தகர் சங்கம், காத்தான்குடியைச் சேர்ந்த ஜனாப் மீராசாஹிபு அவர்களை, உயர்கல்விக்காக ஜப்பானுக்கு அனுப்பியது. ஜனாப் மீராசாஹிபு அவர்களும் வர்த்தகர் சங்க நிருவாகிகளும் நமது தலைவருடன் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் மட்டுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இராஜன் செல்வநாயகம் அவர்களுக்கு நமது தலைவர் அவர்கள் தலைமையில் காத்தான்குடி ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது.



நிந்தவூரில் இடம்பெற்ற மாபெரும் அரசியற்கூட்டத்தில் உணர்ச்சி ததும்ப உரை நிகழ்த்தும் நமது தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியற் பிரவேசம்

துள்ளித்திரியும் பள்ளிப்பருவத்திலேயே அஷ்ஷஹீத் அவர்களிடம் அரசியல் உணர்வு துளிர்விட்டது. காத்தான்குடி மத்திய கல்லூரியில் கற்கும் போதே அவர் அரசியல் சிந்தனையுடன் காணப்பட்டார். தமது நண்பர்களுடன் எப்பொழுதும் அரசியலே பேசுவார். அதனால் அவர் "அரசியல்வாதி" என்று சகமாணவர்களால் அழைக்கப்பட்டார்.

1958ம் ஆண்டு தீவிர அரசியலிற் பிரவேசித்தார். அப்போது நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் காத்தான்குடி இரண்டாம் வட்டாரத்தில் போட்டியிட்டார். அவருடன் அஸ்ஸெய்யித் ஸெயின் மௌலானாவும் போட்டியிட்டார். அதில் அஷ்ஷஹீத் வெற்றி பெற்றார். பின்னர் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலெல்லாம் அவ்வட்டாரத்திற் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். இதனால் அவர் 'இரண்டாம் வட்டார அஹ்மத் லெப்பை' என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார். பின்னர் பட்டின ஆட்சிமன்றத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு பணி செய்தார். 1975ம் ஆண்டு தொடக்கம் 1977ம் ஆண்டு வரை (பட்டின ஆட்சி மன்ற முறை நீக்கப்படும் வரை) அதன் தலைவராகப் பதவி வகித்தார். தனது அறிவாலும், ஆற்றலாலும், அனுபவத்தாலும் காத்தான்குடிப் பட்டினத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றார். இதனால் அவர் 'சேர்மன்' என்ற அடைமொழியால் எல்லோராலும் வாய் நிறைய அழைக்கப்பட்டார்.

1960ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதில் ஜனாப் லத்தீப் சின்னலெப்பை அவர்கள் தமிழரசுக்கட்சியில் மட்டக்களப்புத் தொகுதியில் போட்டியிட்டார்கள். இதனால் முஸ்லிம்கள் சார்பில் அல்ஹாஜ் ஏ.எச்.மாக்கான் மாக்கார் அவர்களை நமது மக்கள் போட்டியிடச் செய்தார்கள். அத்தேர்தலில் மாக்கான் மாக்கார் வெற்றி பெற்று நாடாளுமன்றப் பிரதிநிதியானார்.

கொழும்பிலுள்ள மாக்கான் மாக்கார் மட்டக்களப்பு எம்.பீ. ஆக இருப்பதை நமது பிரதேச மக்கள் பெருத்த அவமானமாகக் கருதினர். அவரை சந்தித்துத் தமது காரியங்களை முடித்துக் கொள்ள கொழும்புக்குச் சென்று சிரமப்பட்டனர். இதனால் ஊரவர் ஒருவரே எம்.பீ. ஆக இருக்க வேண்டும் என்ற உணர்வு நமது பகுதி மக்களிடம் மேலோங்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே 1965ம் ஆண்டு பொதுத் தேர்தலில் உள்ளூரவர் ஒருவரை வேட்பாளராக நிறுத்தும் நோக்கில் மக்கள் செயற்பட்டனர். அப்போது அல்ஹாஜ் எம்.ரீ.எம்.காலித் ஜே.பி. அவர்களைப் போட்டியிடுமாறு சிலர் கேட்டுக் கொண்டதால் காலித் ஹாஜியார் அவர்கள் சுயேச்சையாகப் போட்டியிடக் கட்டுப்பணம் செலுத்தினார்கள்.

அஷ்ஷஹீத் அவர்களும் போட்டியிட வேண்டும் என்ற விருப்பமும் மக்களிடம் இருந்தது. அதனால் அவர்களும் போட்டியிட முன்வந்தார்கள். இதனையறிந்த காலித் ஹாஜியார் அவர்கள் அஷ்ஷஹீத் அவர்களுக்கு விட்டுக் கொடுக்க முன்வந்தார்கள். இதேவேளை ஏ.எச்.மாக்கான் மாக்கார் அவர்களும் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட முன்வந்திருந்தார்கள். உள்ளூர் வாசியே எம்.பீ.யாக வரவேண்டும் என்ற உணர்வு மக்களிடம் மேலோங்கியிருந்ததைக் கவனத்திற் கொண்ட மாக்கான் மாக்கார் அவர்களும் போட்டியிலிருந்து விலகிக் கொண்டார்கள்.

இதனால் ஐ.தே.க. சார்பில் அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை ஹாஜியார் அவர்களைப் போட்டியிடச் செய்ய காத்தான்குடிப் பிரமுகர்கள் விரும்பினர். இதனடிப்படையில் அஷ்ஷஹீத் அவர்களை அழைத்துக் கொண்டு அல்ஹாஜ் ஏ.எல்.எம்.இஸ்மாயில் (ராசா ஹாஜியார்), அல்ஹாஜ் எம்.அப்துல் மஜீத், அல்ஹாஜ் எம்.ரீ.எம்.காலித் ஆகியோர் கொழும்பு சென்று திரு ஜே.ஆர்.ஜெயவர்தன அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தார்கள். அஷ்ஷஹீத் அவர்களுக்கு ஐ.தே.க. சார்பில் போட்டியிடும் சந்தர்ப்பத்தைக் கொடுத்து அதற்கான டிக்கட்டைக் கோரினார்கள். ஆனால் இவர்கள் செல்வதற்கு முன்னர் சில பிரமுகர்கள் சென்று ஜனாப் லத்தீப் சின்னலெப்பை அவர்களுக்கு டிக்கற்றைப் பெற்றுச் சென்றதாக ஜே.ஆர். கூறினார்.

இதனால் அஷ்ஷஹீத் 1965ம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் திகதி நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் மட்டக்களப்புத் தொகுதியில் குடைச் சின்னத்தில் சுயேச்சையாகப் போட்டியிட்டார். அவருடன் செ.இராசதுரை, அப்துல் லத்தீப் சின்னலெப்பை, ஏ.எச்.மாக்கான் மாக்கார், ஜே.எல்.திசவீரசிங்கம், எஸ்.நடராஜா, எஸ்.வினாயகமணி ஆகியோரும் போட்டியிட்டனர். இது இரட்டை அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பம். அதன்படி இத்தேர்தலில் செ.இராசதுரை 29,023 வாக்குகளைப் பெற்று முதலாவது பிரதிநிதியாகவும், அப்துல் லத்தீப் சின்ன லெப்பை 12,010 வாக்குகளைப் பெற்று இரண்டாவது பிரதிநிதியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். அஷ்ஷஹீத் அவர்கள் இதில் வெற்றிபெற வில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் அவர் தளர்ந்துவிடவில்லை. தோல்வி கண்டு துவண்டு போகவில்லை. பாராளுமன்றத்தின் படிக்கட்டுகளில் பாதத்தைப் பதித்திராத அவர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் பாடம் படிப்பிக்கும் அரசியல் ஞானியாக மிளிர்ந்தார்.

மட்டக்களப்புத் தொகுதியின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் அனைவருடனும் இணைந்து ஒத்துழைத்து அவர்கள் மூலம் தமது சமூகத்துக்கு அளப்பரிய பணிகளைச் செய்தார் மட்டக்களப்பின் முடிசூடா மன்னன் செல்லையா இராசதுரை அஷ்ஷஹீதின் அருமை நண்பர். மட்டக்களப்புப் பிரதிநிதியாக இருந்த இராஜன் செல்வநாயகமும் அவரது அன்புக்குப் பாத்திரமானவர். மற்றொரு பிரதிநிதியான அல்ஹாஜ் ஏ.எச்.மாக்கான் மாக்கார் அவர்களாலும் அஷ்ஷஹீத் பெரிதும் நேசிக்கப்பட்டார். அப்துல் லத்தீப் சின்னலெப்பை, பரீத் மீரா லெப்பை, றிஸ்வி சின்ன லெப்பை ஆகியோர் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக இருந்த போது அவர்களுடன் நட்புபேணி இணைந்து பணிபுரிந்தார்.

நமது மாவட்டப் பாரளுமன்ற உறுப்பினரும் தற்போதைய பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சருமான தாஜுல் மில்லத் அல்ஹாஜ் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் எம்.ஏ, எம்.பீ. அவர்கள் அப்போது இளைஞராக இருந்தார்கள். அவர்களுடனும் அஷ்ஷஹீத் அவர்கள் நெருக்கமான தொடர்பை வைத்திருந்தார்கள். அஷ்ஷஹீத் அவர்களது ஒத்துழைப்பும் ஆசிர்வாதமும் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அவர்களுக்கு இருந்தன.

தாஜுல் மில்லத் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் அவர்களது சிறப்பான பணிகளால் நமது பிரதேசம் பாரிய அபிவிருத்தியைக் கண்டிருக்கிறது. இவற்றிற் பல அஷ்ஷஹீத் அவர்கள் கண்ட கனவுகளாகும். அவற்றைப் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அவர்கள் தற்போது நனவாக்கிக் கொண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

1973ம் ஆண்டில் முன்னாள் கல்வி அமைச்சர் மர்ஹூம் அல்ஹாஜ் பதிஉத்தீன் மஹ்மூத் அவர்கள் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்தார்கள். அப்போது கிழக்கின் பல பகுதிகளிலும் அவர்களுக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த வரிசையில் அம்பாரை மாவட்டத்திலிருந்து அவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வரும் பொழுது காத்தான்குடியில் மகத்தான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்பு அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஏற்பாடுகளை அஷ்ஷஹீத் அவர்கள் முன்னின்று கவனித்தார்கள்.

பதியுதீன் மஹ்மூத் அவர்கள் காத்தான்குடி பிரதான வீதியினால் திறந்த வாகனத்தில் வரும் போது காத்தான்குடியில் அவர்களை இறங்கவிடாமல் உடன் வந்தவர்கள் ஏறாவூருக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். இதனால் காத்தான்குடி மக்கள் பெரிதும் அதிருப்தி அடைந்தார்கள். அஷ்ஷஹீத் அவர்கள் கடும் ஆத்திரமடைந்தார்கள்.

இந்தக் குறையை நிவர்த்திக்குமுகமாக பிறிதொரு தினத்தில் கலாநிதி பதிஉத்தீன் மஹ்மூத் அவர்களைக் காத்தான்குடிக்கு வரவழைத்து மாபெரும் வரவேற்பு அளிப்பதற்கு அஷ்ஷஹீத் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். அதன்படி காத்தான்குடி மௌலானா கபுறடியில் மாபெரும் வரவேற்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. பதியுதீனின் நிறைக்கு நாணயத்தால் நிறுக்கப்பட்டு “காயிதே மில்லத்” பட்டம் வழங்கி அவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை ஹாஜியாரின் தலைமையில் இவ்விழா கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்வு வரலாற்றுச் சிறப்பு மிக்கது. கௌரவிக்கப்படும் ஒருவரை நாணயத்தால் நிறுத்துப் பெருமைப்படுத்திய நிகழ்வு இந்நாடு முழுவதும் சிலாகித்துப் பேசப்பட்டது. பாக்கிஸ்தான் சிற்பி காயிதே அஃழம் முகம்மத் அலி ஜின்னா அவர்களுக்குப் பின் இத்தகைய கௌரவம் காத்தான்குடியில்தான் இடம்பெற்றதாக எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

1977ம் ஆண்டு மட்டக்களப்புத் தொகுதி முஸ்லிம்களைப் பொறுத்தவரை ஒரு முக்கியமான கால கட்டம். அப்போது பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுவிட்டது. ஏற்கனவே இரட்டை அங்கத்தவர் தொகுதி மூலம் முஸ்லிம்களுக்குக் கிடைத்த முஸ்லிம் பிரதிநிதித்துவம் அவர்களது ஒற்றுமையீனத்தால் இழக்கப்பட்ட நிலையும் இருந்தது. இப்போது நடைபெறப் போகும் பொதுத் தேர்தலிலும் அந்தத் துர்ப்பாக்கிய நிலை தோன்றிவிடக்கூடாது என்பதிலே முக்கியஸ்தர்கள் தீவிர கவனம் செலுத்தினர். அஷ்ஷஹீத் அவர்கள் இதில் அதீத அக்கறை காட்டினார்கள். காத்தான்குடிப் பகுதி முஸ்லிம்களும் ஏறாவூர்ப் பகுதி முஸ்லிம்களும் ஒன்றுபட்டு ஒரு முஸ்லிம் வேட்பாளருக்கு வாக்களித்தால் மாத்திரமே முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்ற முடியும் என்ற நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது இருந்தது. எனவே அஷ்ஷஹீத் அவர்களது வழிகாட்டலில் காத்தான்குடி ஏறாவூர் பிரமுகர்கள் ஆலோசித்து இலங்கை முஸ்லிம்களின் மாபெரும் தலைவரும், முன்னாள் கல்வியமைச்சருமான கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்களை 1977 பொதுத் தேர்தலில் மட்டக்களப்புத் தொகுதியில் அபேட்சகராக நிறுத்த முடிவு செய்தனர். முஸ்லிம்கள் சார்பில் அவர்கள் மாத்திரமே போட்டியிடுவதென்றும் விரும்பினர். பதியுதீன் மஹ்மூத் அவர்களைக் காத்தான்குடிக்கு அழைத்து வந்தனர். தேர்தல் காலம் முழுவதும் பதியுதீன் காத்தான்குடியிலேயே தங்கியிருந்தார். தேர்தல் பிரச்சாரத்தில் மும்முரமாக ஈடுபட்டார். காத்தான்குடி ஏறாவூர் மக்கள் ஒன்றுபட்டு பதியுதீனின் வெற்றிக்காக அயராது உழைத்தனர். இவ்வேளையில் காத்தான்குடி ஏறாவூர் பிரதேச இளைஞர்களுக்கு பதியுதீனின் அவர்கள் அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்றுக் கொடுத்தார்கள். நூற்றுக் கணக்கானோருக்கு ஆசிரிய நியமனம் வழங்கினார்கள். பதியுதீனை எதிர்த்து பரீத் மீராலெப்பை அவர்களும் போட்டியிட்டார்கள்.

கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்கள் இத்தேர்தலில் வெற்றிபெறவில்லை. அத்துடன் அவரது அரசியல் வாழ்வும் அஸ்தமித்தது. மர்ஹூம் பரீத் மீரா லெப்பை அவர்கள் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராகவும் பிரதியமைச்சராகவும் பதவி வகித்தார்கள். அஷ்ஷஹீத் அவர்களுக்குப் பக்க துணையாகச் செயற்பட்டார்கள்.

இத்தேர்தலில் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்களுக்கு முஸ்லிம் பிரதேசங்களில் பலத்த ஆதரவு இருந்தும் அவர்கள் தோல்வியுற்றதற்குக் காரணம் உண்டு. பதியுதீன் மஹ்மூத் தெரிவு செய்யப்பட்டால் மட்டக்களப்புத் தொகுதியில் அவர் மிகுந்த செல்வாக்குப் பெற்றுவிடுவார். இதனால் முஸ்லிம் பிரதேசங்கள் பெரு நன்மை அடையும். தமிழ்ப் பிரதேசங்கள் பாதிப்புறலாம் என்று தமிழ் மக்கள் அஞ்சினர். அதனால் அதிகளவு தமிழ் வாக்குகள் பரீத் மீரா லெப்பை அவர்களுக்குக் கிடைத்தன. இதனால் அவர் வெற்றி பெற்றார். பதியுதீன் தோல்வியுற்றார்.

மர்ஹூம் பரீத் மீரா லெப்பை எம்.பீ. அவர்கள் ஏறாவூரைப் பிறப்பிடமாகவும் காத்தான்குடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்ததால் காத்தான்குடிக்கும் ஏறாவூருக்குமிடையே சிற்சில வேளைகளில் ஏற்பட்டிருந்த கசப்புணர்வுகள் நீங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீத் மீராலெப்பை அவர்கள் பயங்கரவாதம், இனக்கலவரங்கள் நிலவிய நெருக்கடியான காலகட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பிரதியமைச்சராகவும் இருந்தார்கள். அக்கால கட்டத்தில் அவர்கள் கடுமையாக சுகவீனமுற்று இயங்கமுடியாதிருந்தார்கள். இந்நிலையில் அவர்கள் அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை அவர்களுடன் மிகவும் நெருக்கமான தொடர்பை வைத்திருந்தார்கள்.

நெருக்கடி நேரத்தில் இரவு பகலாகப் பாடுபட்டுக் கொண்டிருந்த அஷ்ஷஹீத் அவர்களுக்கு பரீத் மீராலெப்பை அவர்கள் மிகவும் உதவியாக இருந்தார்கள். அப்போது பரீட் எம்.பி. இன் செயலாளராக இருந்த அல்ஹாஜ் எம்.சி.எம் அமீனுல்லாவிடம் "சேர்மன் அவர்களுக்கு உதவியாயிருந்து கொள்ளுங்கள்" என்று கூறி தனது கடிதத் தலைப்பைக் கூட கொடுக்குமாறு பணித்தார்கள்.

## அஷ்ஷஹீதும் அரசியல் தலைவர்களும்.

முன்னாள் பிரதமர் டட்லி சேனாநாயக்கா, திருமதி சிறிமாவோ பண்டார நாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்தன ஆகியோரை காத்தான்குடிக்கு வரவழைத்து இப்பகுதி மக்களின் தேவைகளை எடுத்துக் கூறி அவ்வப்போது அரும்பணி செய்தார்கள். திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க மட்டக்களப்புக்கு விஜயம் செய்த போது மட்டக்களப்பு விமான நிலையம் வரை சென்று வரவேற்று காத்தான்குடிக்கு அழைத்து வந்து மாபெரும் வரவேற்புபசாரம் வழங்கி, நமது மக்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தினார்கள். ஜே.ஆர்.ஜெயவர்தன அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் அவரது ஆங்கிலச் சொற்பொழிவை அழகு தமிழில் பெயர்த்து வழங்கிய நிகழ்வு இன்றும் நமது நினைவில் நிற்கிறது. முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.சி.எஸ்.ஹமீது அவர்களை இங்கு வரவழைத்து பல பணிகளுக்கு வித்திட்டார்கள். காத்தான்குடி அரசினர் வைத்தியசாலை இத்தொடர்பு மூலம் கிடைத்ததாகும்.

மர்ஹூம் ஏ.எச்.மாக்கான் மாக்கார் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது அவர் மூலம் காத்தான்குடி மத்திய கல்லூரியில் பல அபிவிருத்திகளைச் செய்தார்கள். புதிய காத்தான்குடியின் அபிவிருத்திகள் பலவும் இவர்களது தொடர்பு மூலம் மேற்கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் விடிவெள்ளிகளான சேர் ராசிக் பரீட், டாக்டர் எம்.சீ.எம்.கலீல், அமைச்சர் அல்ஹாஜ் எம்.எச்.முகம்மத், அமைச்சர் ஏ.ஆர்.மன்சூர், அமைச்சர் எம்.எம்.முஸ்தபா, பாராளுமன்ற உறுப்பினர் ஹலீம் இஸ்ஹாக், முதலியார் எம்.எஸ்.காரியப்பர் போன்றோருடன் நெருங்கிய தொடர்பினைத் தொடர்ந்து பேணிய அஷ்ஷஹீத் இவர்கள் மூலமாக நமது சமூகத்துக்குப் பாரிய பங்களிப்பை வழங்கினார்கள்.

இலங்கை முஸ்லிம்களின் தானைத் தளபதி அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபுக்கும் இவருக்கும் இருந்த தொடர்பு பிரசித்தமானது. இலங்கை முஸ்லிம்களுக்கென்று தனிக்கட்சி உதயமாவதற்கு அஷ்ஷஹீத் அவர்களே உறுதுணையாக நின்றார்கள் என்பது மறக்கமுடியாத வரலாறு.

அஷ்ஷஹீத் அவர்கள் மறைந்த துன்பியல் நிகழ்வு இவர்களையெல்லாம் எவ்வளவு தூரம் பாதித்தது என்பதை அவர்களது மறைவின்போது இவர்கள் தெரிவித்த அனுதாபச் செய்திகள் மூலம் கண்டுகொள்ளலாம்.

"அல்ஹாஜ் அஹ்மத் லெப்பை எனது நெருங்கிய நண்பர். தனது பகுதிமக்களின் நலனில் பெரிதும் அக்கறை கொண்டு அவர்களது தேவைகளை நிறைவு செய்வதற்காக அரும்பாடுபட்ட பெருந் தலைவர். என்னைச் சந்திக்க வரும்போதெல்லாம் தனது பகுதிப் பொதுமக்களின் பல்வேறு தேவைகளைப்பற்றி எடுத்துக் கூறுவார். கஷ்ட நஷ்டங்கள் பற்றி முறையிடுவார். என்போன்றவர்களால் செய்யவேண்டிய உதவிகள் பற்றிப் பிரஸ்தாபிப்பார். மிகச் சிறந்த சமூகசேவகராக அவரை நான் கண்டேன்." என்று முன்னாள் அமைச்சர் ஏ.சீ.எஸ்.ஹமீத் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"கிழக்கிலங்கை வாழ் தமிழ்,முஸ்லிம் மக்களின் நலனுக்காகப் பாடுபட்ட ஒரு நல்ல மனிதர் அல்ஹாஜ் அஹ்மத் லெப்பை. தமிழ் மக்களுடன் நேசமனப்பாங்கோடு வாழ்வதையே இலட்சியமாகக் கொண்டவர். அவரின் மறைவால் கிழக்கிலங்கை முஸ்லிம்கள் அனாதைகளாகிவிட்டனர். பல முஸ்லிம் அமைப்புக்களும், நிறுவனங்களும் அவரின் பிரிவால் இன்று அனாதைகளாகிவிட்டன." என்றார் காயிதே மில்லத் அமைச்சர் கலாநிதி பதியுதீன் மஹ்மூத்.

அஷ்ஷஹீதின் நண்பர் அமைச்சர் அஷ்ரப் "காத்தான்குடி பட்டின சபையின் முன்னாள் தலைவர் அல்ஹாஜ் ஏ.அஹ்மத் லெப்பையின் மறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அவர் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர். அவரின் மரணம் முஸ்லிம் காங்கிரசுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை முஸ்லிம்களுக்காக தனியான ஒரு அரசியல் கட்சியின் அவசியத்தை அல்ஹாஜ் அஹ்மத் லெப்பை பல்லாண்டு காலம் வலியுறுத்தி வந்தார். அதற்காகப் பலமான முறையில் குரல் கொடுத்தார். முஸ்லிம் சமூகத்தில் ஐக்கியம் நிலவ வேண்டும் என்று வற்புறுத்தினார்.

அண்மைக் காலங்களில் கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பாரிய பிரச்சினைகளுக்குத் தைரியமாக முகங்கொடுத்த தலைவர் அவர். ஒரு சமூகசேவையாளனையும், தமிழ் முஸ்லிம் ஒற்றுமையின் சின்னத்தையும் நாம் இழந்துள்ளோம். இம்மரணத்தினால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை இலகுவில் நிரப்பிட முடியாது." என்று தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தார்.

மிகப் பெரும் முஸ்லிம் தலைவர் டாக்டர். எம்.சீ.எம் கலீல் "காத்தான்குடி முன்னாள் பட்டின சபைத் தலைவர் அல்ஹாஜ் ஏ.அஹ்மத் லெப்பை முஸ்லிம் சமூக வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட ஒரு சேவகர். தனது வாழ்வைச் சமூகத்துக்காகவே அர்ப்பணித்தவர். தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் இணைப்புப் பாலமாகத் திகழ்ந்தவர். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அவரின் மறைவு ஒரு பேரிழப்பாகும்." என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம்.ஹலீம் இஸ்ஹாக் "பல வருட காலமாக என்னோடு நெருங்கிப் பழகிய அல்ஹாஜ் அஹ்மத் லெப்பை சமுதாயப் பிரச்சினைகளில் மிக்க ஆர்வத்தோடு உழைத்தார். நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது கிழக்கிலங்கைப் பிரச்சினைகளை உடனுக்குடன் எனது கவனத்துக்குக் கொண்டுவந்து அவைகளுக்கான நிவாரணங்களைச் செய்யக் கோரினார்.

பணத்துக்கும், பதவிகளுக்கும் மயங்கி சமூகத்தைக் காட்டிக் கொடுத்து வாழும் மனிதர்கள் உள்ள இக் காலத்தில் மர்ஹூம் அஹ்மத் லெப்பை அவர்களை நினைக்கும் போது நான் பெருமைப் படுகிறேன். தான் கொண்ட கொள்கைக்காகவே தனது உயிரை நீத்த அவர் கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்குச் சிறந்த தலைமைத்துவத்தைக் கொடுத்தார். தீர்க்கமாகச் சிந்தித்து அரசியல் ரீதியான முடிவுகளை எடுப்பதில் அவருக்கு மிகத்திறமை இருந்தது" என்று குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் அமைச்சர் ஜனாப் ஏ.ஆர்.மன்சூர் "அல்ஹாஜ் அகமது லெப்பை எல்லா இன மக்களாலும் எல்லா சமயத்தவர்களாலும் மதிக்கப்பட்டவர். மக்களின் நன்மைக்காக உழைத்தவர். எவ்வேளையும் மக்கள் தொண்டையும், மதத் தொண்டையும் கருத்திற் கொண்டு அயராது உழைத்தவர். எல்லா மக்களும் சமாதானமாக வாழ வேண்டுமென்று இருபத்து நான்கு மணி நேரமும் அரும்பணி செய்தவர். இன ஐக்கியத்துக்காக அரும்பாடுபட்டு உழைத்த அல்ஹாஜ் அஹ்மத் லெப்பையின் பிரிவு சகித்துக் கொள்ள முடியாத பேரிழப்பாகும்." என்றார்.

அஷ்ஷஹீத் அவர்கள் இலங்கை அரசியலில் எவ்வளவு ஆழமாகத் தடம்பதித்திருந்தார் என்பதற்கு மேற்கண்ட மூத்த அரசியல் தலைவர்களின் கருத்துக்கள் சிறந்த சான்றுகளாகின்றன. அரசியல் துறையில் உயர்ந்த பதவிகளை வகிக்காதவர். போதிய அரசியல் பலம் அற்றவர். ஆனால் பெரும் பெரும் தலைவர்களையெல்லாம் தன்வயப்படுத்தியிருந்தார். அதன்மூலம் அரசியலில் மிகப் பெரிய சாதனைகளைப் புரிந்தார். அவரது அரசியற் பயணம் மிக மிக அற்புதமானது.

## அஷ்ஷஹீத் அவர்களும், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசும்.

இலங்கையில் இனப்பிரச்சினை உருவான பின்பு இங்கு வாழும் ஒவ்வோர் இனமும் தத்தமது இனரீதியாகச் சிந்திக்கின்ற நிலை ஏற்பட்டது. இது காலவரை அரசியலைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் பெரும்பான்மையினக் கட்சிகளைச் சார்ந்தே இருந்தனர். இனரீதியான சிந்தனை வலுப் பெற்றதும் முஸ்லிம்கள் மத்தியில் தனிக்கட்சியொன்றின் அவசியம் உணரப்பட்டது.

இலங்கையில் சர்வகட்சி மாநாடுகள் கூட்டப்பட்டபோது முஸ்லிம்களுக்கென்று தனிக்கட்சியொன்று இல்லாததால் முஸ்லிம்கள் தனித்துவமாக இவற்றில் கலந்து கொள்ள முடியாதிருந்தது.

இது அஷ்ஷஹீத் அவர்களது உள்ளத்தைக் கடுமையாகப் பாதித்தது. இவற்றில் எப்படியாவது முஸ்லிம்களும் தனித்தரப்பாகக் கலந்து கொள்ள வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். இந்தக் கவலையுடன் செயற்பட்டார்கள். இதன் பலனாக அஷ்ஷஹீத் அவர்களின் வழிகாட்டலில் பல முஸ்லிம் தலைவர்கள், தமிழ்த் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தினர். இதன் காரணமாக அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முஸ்லிம் கௌன்சிலின் கீழ் ஒரு குழு பங்கு கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. இக்குழுவில் மர்ஹூம்களான பதியுதீன் மஹ்மூத், எம்.எச்.எம்.அஷ்ரப் உட்படப் பலர் இடம்பெற்றனர். இவ்வேளையிலும் முஸ்லிம் தனிக்கட்சியின் அவசியம் பலராலும் உணரப்பட்டது. இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதும் இவ்வுணர்வு இன்னும் மேலோங்கியது.

தேசிய அரசியலில் பெரிதும் ஈடுபாடு கொண்ட அஷ்ஷஹீத் அவர்களிடமும் இந்த சிந்தனை மிகவும் தீவிரமாக இருந்தது. அதனால் மற்றவர்களைவிட இவ்விவகாரத்தில் அவர்கள் அதிகம் அக்கறை காட்டினார்கள்.

அஷ்ஷஹீத் அவர்களின் ஏற்பாட்டில் காத்தான்குடியில் மர்ஹூம் டாக்டர் யூ.அப்துர் ரஹ்மான் அவர்களது பாலர் பாடசாலையில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில் முஸ்லிம் தனிக்கட்சி தொடர்பாக ஆராயப்பட்டது. இக்கட்சியின் பெயர் பற்றி ஆலோசிக்கப்பட்ட போது, சட்டத்தரணி அல்ஹாஜ் ஏ.எல்.அப்துல் ஜவாத் பி.ஏ. அவர்கள் "சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்" என்ற பெயரைப் பிரேரித்தார்கள். முஸ்லிம் காங்கிரசின் முக்கிய பிரமுகரான ஜனாப் வை.எல்.எஸ்.ஹமீத் அவர்கள் அதனை ஆமோதித்தார்கள்.

இதன் பின்னர், காத்தான்குடி 1ம் குறிச்சியில் மர்ஹூம் ஏ.எம்.கலந்தர் லெப்பை (ஜின்னா) ஹாஜியாரின் அரிசி ஆலையில் 21.09.1980இல் ஒரு முக்கிய கூட்டம் நடைபெற்றது. அஷ்ஷஹீத் அவர்கள் இதற்குத் தலைமை வகித்தார்கள். இக் கூட்டத்தில்தான் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடக்கி வைக்கப்பட்டது.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றத்திற்கு அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை ஹாஜியார் அவர்களே உந்து சக்தியாக இருந்தார்கள் என்பதை அக்கட்சியின் தலைவர் அமைச்சர் அஷ்ரப் அவர்கள் அஷ்ஷஹீதின் மறைவின்போது விடுத்த அனுதாபச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.

"காத்தான்குடி பட்டின சபையின் முன்னாள் தலைவர் ஜனாப் ஏ.அஹ்மத் லெப்பை அவர்களின் மறைவு முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அவர் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர் அவரின் மரணம் முஸ்லிம் காங்கிரசுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை முஸ்லிம்களுக்காகத் தனியான ஓர் அரசியல் கட்சியின் அவசியத்தை ஜனாப் அஹ்மத் லெப்பை பல்லாண்டு காலம் வலியுறுத்தி வந்தார். அதற்காகப் பலமான முறையில் குரல் கொடுத்தார்." சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும், அமைச்சருமான மர்ஹூம் அல்ஹாஜ் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களது இக்கூற்று அஷ்ஷஹீத் அவர்கள் முஸ்லிம் காங்கிரசின் தோற்றத்துக்குப் பாரிய பங்களிப்புச் செய்துள்ளார்கள் என்பதை நன்கு உணர்த்தி நிற்கிறது.

"முஸ்லிம் காங்கிரஸ் காத்தான்குடியில், அதன் முன்னாள் பட்டின சபைத் தலைவர் ஏ.அஹ்மத் லெப்பையின் தலைமையில் ஏ.எம்.கலந்தர் லெப்பை (ஜின்னா) ஹாஜியாரின் அரிசி ஆலையில் 21.09.1980இல் ஆரம்பிக்கப்பட்டது" என்று அதன் பொதுச் செயலாளரும், அதன் மஜ்லிஸுஷ்ஷூறா பிரதித் தலைவரும், உயர்பீட உறுப்பினருமான சிரேஷ்ட சட்டத்தரணி ஜனாப் எஸ்.எம்.ஏ.கபூர் குறிப்பிடுவதாக முஸ்லிம் முரசு 11 – 17.12.2013 இதழில் பிரசுரமாகியுள்ளது.

மேற்கண்ட குறிப்புக்கள் அஷ்ஷஹீத் அவர்கள் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றத்துக்கு உந்து சக்தியாக இருந்துள்ளார்கள் என்பதையும் அக்கட்சி காத்தான்குடியில் தான் உதயமாகியது என்பதையும் நிரூபிக்கின்றன.

## அஷ்ஷஹீத் அவர்களது குறிப்பிடத்தக்க அரசியற் செயற்பாடுகள்.

01) அஷ்ஷஹீத் அவர்கள் தமிழ் மக்களுடன் நெருக்கமான தொடர்பைப் பேணிவந்தார்கள். தமிழ் அரசியற் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டார்கள். 1956 முதல் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து, அது மேற்கொண்ட செயற்பாடுகளுக்குத் துணை நின்றார்கள். தமிழ் மொழிக்கு சம அந்தஸ்துக் கிடைக்க வேண்டுமென்ற போராட்டத்தில் தீவிர பங்கெடுத்தார்கள்.

02) "சிறீ எதிர்ப்புப் போராட்டம்" தமிழ் அரசியற் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட போது அதிலும் பங்கு கொண்டார்.

03) மட்டக்களப்புக் கச்சேரியின் முன்பாக 1960இல் மறியல் போராட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தலைவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டு அப்போராட்டத்திற்கு ஆதரவளிக்குமுகமாக, காத்தான்குடியிலிருந்து முஸ்லிம்களை அழைத்துச் சென்றார். அப்பேரணி கால்நடையாகச் சென்று அம்மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டது.

04) முன்னாள் கல்வி அமைச்சர் மர்ஹூம் கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்கள், "இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி" என்ற அமைப்பை உருவாக்கி, அதன்மூலம் நாடு முழுவதிலுமுள்ள முஸ்லிம்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். அரசியல், சமூக, கல்விப் பணிகளை மேற்கொண்டார்கள். நமது பெருந் தலைவர் அஷ்ஷஹீத் அகமது லெப்பை ஹாஜியார் அவர்கள் இந்த அமைப்புடன் நெருக்கமான தொடர்பினை வைத்திருந்தார்கள். பதியுதீன் மஹ்மூத் அவர்களுடன் இணைந்து இதன் மூலம் நமது பிரதேச மக்களுக்குத் தொண்டாற்றினார்கள்.

05) 1986ல் கொழும்பில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் அரசியற் சந்திப்பொன்றில் அஷ்ஷஹீத் பிரதான அங்கம் வகித்தார். தனி முஸ்லிம் மாகாணம் பற்றியும், இணைந்த வட-கிழக்கில் முஸ்லிம்களுக்கான பங்கு பற்றியும், மட்டக்களப்பு மாவட்டத் தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்று அங்கு வலியுறுத்தினார். இதன்போது வட-கிழக்கு இணைந்த மாநிலத்தில் பாதிக்கப்படும் முஸ்லிம்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ப கிழக்கில் கூடிய உரிமைகள் முஸ்லிம்களுக்கு வழங்கப்படும் என்று கூட்டணியினர் உத்தரவாதமளித்தனர். இச்சந்திப்பில் மர்ஹூம் அல்ஹாஜ் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

06) வடக்கையும் கிழக்கையும் இணைத்து வட-கிழக்கு மாகாணம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை தமிழ்த் தரப்பினால் விடுக்கப்பட்ட போது அவ்வாறு வடக்கும் கிழக்கும் இணைக்கப்படுவதாயின் முஸ்லிம்களுக்கு முஸ்லிம் மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முஸ்லிம் தலைவர்களால் முன்வைக்கப்பட்டது.

*10.08.1986*இல் அம்பாரை மாவட்டப் பள்ளிவாயல்கள் சம்மேளனம் அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலையில் நடத்திய மாநாட்டில் இது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. இம்மாநாட்டில் அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை ஹாஜியார் தலைமையில் காத்தான்குடிப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அஷ்ஷஹீத் அவர்கள் இங்கு ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்தார்கள்.

உத்தேச முஸ்லிம் மாகாணம் அம்பாறை முஸ்லிம் பிரதேசங்களைக் கொண்டதாக அமைய வேண்டும் என்ற கருத்தை மர்ஹூம் எம்.எச்எம்.அஷ்ரப் இம்மாநாட்டில் தெரிவித்தார். காத்தான்குடி சார்பில் சென்ற குழுவில் இடம்பெற்ற சட்டத்தரணி அல்ஹாஜ் ஏ.எல்.அப்துல் ஜவாத் பி.ஏ. அவர்கள் இக்கருத்தை ஆட்சேபித்தார்கள். வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாகவே முஸ்லிம் மாகாணம் அமைய வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். இதனை அமைச்சர் அஷ்ரப் அவர்கள் ஏற்றுக் கொண்டு "ஜவாத் சேர் சொன்னபடியே தீர்மானிப்போம்" என்று கூறினார்கள்.

இந்த முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை தேசிய ரீதியில் முஸ்லிம்கள் ஆதரித்தனர். இத்தீர்மானத்தை ஆதரித்து அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, தெமட்டகொட வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் ஒரு முழுநாள் கருத்தரங்கை நடத்தியது. இதில் அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை ஹாஜியார் அவர்கள், முஸ்லிம் மாகாணத்தின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்கள்.

*07)* ஐக்கிய தேசியக் கட்சி, அஷ்ஷஹீதின் அரசியற் பணிகளைக் கண்டு அவரை அரவணைத்தது. அதன் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக அவரை நியமிக்க முடிவெடுத்தது. அதற்கு அவர் மறுத்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08) கிழக்கிலங்கை முஸ்லிம் மஜ்லிஸைத் தோற்றுவித்தார். அதன் செயலாளர் நாயகமாகப் பணியாற்றினார். இதன்மூலம் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகளை நாடறியச் செய்து தீர்வுகாணத் தொண்டாற்றினார்.

09) காத்தான்குடியோடு மட்டும் அல்லது மட்டக்களப்பு மாவட்டத்தோடு மட்டும் அஷ்ஷஹீதின் அரசியற் பணிகள் முடங்கிக் கிடக்கவில்லை. ஏறாவூர், ஓட்டமாவடி, நிந்தவூர், அட்டாளைச்சேனை, சம்மாந்துறை போன்ற இலங்கையின் பல பகுதிகளிலும் பல மேடைகளிலும் அவரது அரசியற் குரல் ஓங்கி ஒலித்தது.

10) **13.11.1981**ல் 'தினபதி' தினசரியில் 'முஸ்லிம் சமூகத்துக்குப் பிரச்சினை இல்லையா?' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார். அதில்

(அ) தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஜனாதிபதி அக்கறை காட்டி வருவதைப் போன்று முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் அவர் அக்கறை செலுத்தவேண்டும்.

(ஆ) முஸ்லிம் மாணவர்களது பல்கலைக் கழக அனுமதி அவர்களது விகிதாசாரத்துக்கு ஏற்ப வழங்கப்பட வேண்டும். இன்றேல், எதிர்காலத்தில் உயர்கல்வியைப் பொறுத்தளவில் முஸ்லிம்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவே இருக்கும்.

(இ) முஸ்லிம்களின் சனத்தொகை கருத்திற்கொள்ளப்பட்டு அதற்கேற்ப முஸ்லிம்களுக்கு உத்தியோகம் வழங்கப்பட வேண்டும். இன்றேல், வேலையற்றோர் எண்ணிக்கை முஸ்லிம்கள் மத்தியில் மிகவும் அதிகரித்துவிடும்.

(ஈ) சமீபத்திய வெள்ளையறிக்கையின் படி முஸ்லிம் பாடசாலைகளின் தனித்துவம் அற்றுப் போய்விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. எனவே சமயச் சூழலுக்கு ஏற்ப மத்திய கல்லூரிகளில் - உயர் வகுப்புக்களில் ஆண்களும், பெண்களும் கூட்டாகக் கற்பது தவிர்க்கப்பட்டு முஸ்லிம் பெண்களுக்கென்று தனியான மகா வித்தியாலயங்கள் அமைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) முஸ்லிம்களுக்கென்று தனியான குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

(ஊ) வீடுகள், காணிகள், சொத்துக்களை உடைமையாக்கிக் கொள்வதில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் நிவர்த்திக்கப்பட வேண்டும்.

(எ) முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் தட்டுப்பாடு நிவர்த்திக்கப்பட வேண்டும். இன்றேல் கல்வியில் பின் தங்கியுள்ள முஸ்லிம் சமூகத்தின் பல்கலைக்கழகப் பிரவேசம் வெகுவாகப் பாதிக்கப்படும்.

(ஏ) மௌலவி ஆசிரியர் நியமனம் கிட்டத்தட்ட நிறுத்தப்பட்டே விட்டது. இது முஸ்லிம் மாணவர்களை வெகுவாகப் பாதித்துள்ளது. உடனடியாக மௌலவி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

(ஐ) அம்பாறை மாவட்டத்தில் புனிதப் பிரதேசத்துக்காக முஸ்லிம்களின் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன. இது தொடர்பான முறைப்பாடுகள் தட்டிக் கழிக்கப்படுகின்றன. இதற்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

(ஒ) முஸ்லிம்கள் கணிசமான அளவு விவசாயத்தில் ஈடுபடுவதால் இதற்கு வசதியாக நீர்ப்பாய்ச்சல் வசதியுள்ள பகுதிகளில் முஸ்லிம்களுக்குக் காணிகள் ஒதுக்கப்பட வேண்டும். வேலையற்றிருக்கும் முஸ்லிம் இளைஞர்கள் இக்காணிகளில் விவசாயம் செய்வதற்கு வசதியளிக்கப்பட வேண்டும்.

(ஓ) மட்டக்களப்பு மாவட்டத்தில் அடிக்கடி ஏற்படும் தமிழ் - முஸ்லிம் கலவரங்கள் தொடராதவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஔ) மாவட்ட சபைகளின் கீழ் ஊர்காவல் படைகள் அமைப்பது பற்றிய பேச்சுக்கள் அடிபடுகின்றன. இது முஸ்லிம்களை வெகுவாகப் பாதிக்கும். இது தொடர்பில் முஸ்லிம்களுக்கு சகல பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும்.

(ஃ) அண்மையில் இடம்பெற்ற மாவட்ட சபைத் தேர்தல்கள் விகிதாசாரப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதித்துவ அடிப்படையில் நடைபெற்றதால் முஸ்லிம்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டது. முப்பது சதவீதம் முஸ்லிம்கள் வாழும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு பிரதிநிதித்துவம் கூட முஸ்லிம்களுக்குக் கிடைக்கவில்லை. அம்பாறையிலும் பிரதிநிதித்துவம் குறைந்துள்ளது. இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்

என்றெல்லாம் அக்கட்டுரையில் எழுதி முஸ்லிம்களை மட்டுமல்ல சகல அரசியல் தலைவர்களையும் சிந்திக்கத் தூண்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நமது தலைவரின் அரிய முயற்சியினால் காத்தான்குடிக்கு கிடைத்த அரசினர் வைத்திய சாலையின் பழைய தோற்றம்.



காத்தான்குடி பட்டின ஆட்சி மன்றப் பொது நூலக முன்றலில் நடைபெற்ற பாலர் விளையாட்டு விழாவின்போது நமது தலைவர் அவர்கள் தேசியக் கொடி ஏற்றுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முஸ்லிம் சமூகப் பிரச்சினைகள் தொடர்பான முக்கிய கூட்டமொன்றில் உரையாற்றும் நமது தலைவர்.



திருமதி சிறீமாவோ பண்டார நாயக்கா அவர்கள் காத்தான்குடிக்கு வருகை தந்தபோது அன்னாருக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் பங்குகொண்ட நாமது தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப்பணி

செங்கலடி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் எழுதுவினைஞர் பதவி வகிக்கும்போதே அஷ்ஷஹீத் அவர்கள் சமூகப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டார்கள். பின்னர் மட்டக்களப்பில் முஸ்லிம் வர்த்தகர் சங்கத்தைத் தொடங்கி அதன்மூலம் தனது சமூகப் பணியை வளர்த்துக் கொண்டார்கள். காத்தான்குடி பட்டின ஆட்சிமன்ற இரண்டாம் வட்டார உறுப்பினராகவும், அதன் தலைவராகவும் பதவி வகித்த காலங்களில் அவர்களது சமூகப் பணி மேலும் விரிந்து காணப்பட்டது.

பாராளுமன்றப் பிரதிநிதியாகப் பதவி வகிக்கும் வாய்ப்புக் கிடைக்காத போதிலும் உள்ளூராட்சி மன்றப் பதவி மூலம் அளப்பரிய பணிகளைச் செய்தார்கள். பட்டின ஆட்சி மன்ற முறை நீக்கப்பட்டபின் அரசியல் ரீதியான பதவிகளில் அவர்கள் அமரவில்லை. எனினும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் முழு இலங்கையிலும் அவ்வப்போது அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அரச அதிகாரிகள் போன்றோருடன் நெருங்கிய தொடர்பைப் பேணிவந்தார்கள். அதன்மூலம் பாரிய அளவில் சமூகத்துக்குப் பணியாற்றினார்கள். அமைச்சுக்களுக்கும், அரச அலுவலகங்களுக்கும் நேரில் சென்றால் அங்கெல்லாம் இவர்களுக்கு பெரிய மரியாதை கிடைக்கும். தனி நபர்களுக்கும், சமூகத்துக்கும் தேவையான விடயங்களையெல்லாம் இலகுவாகப் பெற்றுக் கொடுப்பார்கள்.

இவ்வாறு சமூகப் பணியாற்றிக் கொண்டிருந்த அஷ்ஷஹீத் அவர்கள் செல்வாக்குள்ள ஒரு பொது நிறுவனத்தைத் தொடங்கி அதன்மூலம் தனது பணியை மேலும் விரிவாக்க விரும்பினார்கள். இயற்கை அனர்த்தங்கள், இனக்கலவரங்கள் போன்றவற்றாலும் பல்வேறு பொதுத் தேவைகள் நிறைவேறாத சந்தர்ப்பங்களாலும் மக்கள் பாதிப்புறுவதும் அஷ்ஷஹீத் அவர்களது உள்ளத்தைத் தைத்தன.

குறிப்பாக காத்தான்குடி மக்களது துன்ப துயரங்களின் போது சகலரையும் ஒன்றிணைத்த ஒரு நிவாரண நிறுவனம் அமைக்கப்படுவது அவசியம் என்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள்.

**1978** சூறாவளியின் தாக்கத்தின் பின் வெளியிடங்களிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நிவாரணப் பொருட்கள் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தன. காத்தான்குடிக்கு அத்தகைய நிவாரணங்கள் வந்தபோது அவற்றை யார் பொறுப்பேற்பது? எங்கு வைத்திருப்பது? யார் விநியோகிப்பது? என்ற கேள்விகள் எழுந்தன. இதற்கான ஒரு பொது நிறுவனத்தின் அவசியம் எல்லோராலும் உணரப்பட்டது.

இதன் பின்னணியில் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் உதயமானது. இதைத் தோற்றுவிக்கக் குரல் கொடுத்து உந்து சக்தியாகச் செயற்பட்டார்கள் அஷ்ஷஹீத் அவர்கள். காத்தான்குடியின் புத்தி ஜீவிகளும், உலமாக்களும், வர்த்தகப் பிரமுகர்களும் இணைந்து இதைத் தொடக்கி வைத்தார்கள்.

**1985**ம் ஆண்டு இது உதயமானது. இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இத்தகைய ஒரு பொது நிறுவனம் இதற்கு முதல் வேறெங்கும் இருந்ததில்லை. காத்தான்குடிப் பிரதேசத்திலுள்ள சகல பள்ளிவாயல்களையும் பொது நிறுவனங்களையும் உள்ளடக்கியதாக இந்த சம்மேளனம் அமைக்கப்பட்டது. இதற்குப் பின்னர்தான் இலங்கையில் குறிப்பிடத்தக்க சில பகுதிகளில் இத்தகைய சம்மேளனங்கள் தோற்றம் பெற்றன.

## காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம்

**1985**ஆம் ஆண்டு இது ஆரம்பிக்கப்பட்டது. அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை ஹாஜியார் அவர்களே இதனை ஆரம்பித்து வைத்தார்கள். காத்தான்குடி முஹ்யித்தீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப் பள்ளிவாயலிலேயே ஆரம்பமுதல் அண்மைக் காலம் வரை இது இயங்கி வந்தது. காத்தான்குடியையும் அதனைச் சூழவுள்ள பாலமுனை, காங்கேயனோடை, சிகரம், ஒல்லிக்குளம், கீச்சான் பள்ளம், மஞ்சந்தொடுவாய், பூநொச்சிமுனை, கோட்டைமுனை, மட்டக்களப்பு ஆகிய ஊர்களையும் உள்ளடக்கியதாக இதன் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இவ்வூர்களைச் சேர்ந்த பள்ளிவாயல்களதும், நிறுவனங்களதும் பிரதிநிதிகள் இதன் அங்கத்தவர்களாவர்.

தற்போது **62** பள்ளிவாயல்களும், **160** சமூக,சமய நிறுவனங்களும் இதில் அங்கத்துவம் பெற்றுள்ளன. இதன் தலைமைப் பதவியை காத்தான்குடியிலுள்ள மூன்று பிரதான ஜும்ஆப் பள்ளிவாயல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகிக்கின்றன. உப தலைவர்கள் பொருளாளர் பதவிகளை புதிய காத்தான்குடியிலுள்ள ஜும்ஆப் பள்ளிவாயல்களின் பிரதிநிதிகள் வகிக்கின்றனர். செயலாளர் பதவி காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமாவைச் சார்ந்தது. கல்விமான்களான பட்டதாரிகள் சார்பில் ஒருவர் பிரதித் தலைவராகச் செயற்படுவதென்ற யாப்பின்படி சட்டத்தரணி அல்ஹாஜ் ஏ.எல்.அப்துல் ஜவாத் பி.ஏ அவர்கள் தொடர்ந்து பிரதித் தலைவராகப் பதவி வகித்து இதைச் சிறப்புற வழிநடத்துகிறார்கள். அஷ்ஷஹீத் அவர்களது வெற்றிடத்தை சட்டத்தரணி ஜவாத் சேர் அவர்கள் நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் பள்ளிவாயல்களாலும், நிறுவனங்களாலும் ஒவ்வொருவர் தெரிவு செய்யப்பட்டு அவர் இதன் நிருவாக உறுப்பினராகச் செயற்படுகின்றார். நிருவாக சபைக் கூட்டம் பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் காலை 7.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை மஷூரா அடிப்படையில் நடைபெறும். இப்பிரதேசத்திலுள்ள மக்களின் அனைத்துப் பிரச்சினைகளும் சம்மேளனத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும். அவ்வாறு வரும் பிரச்சினைகள் தொடர்பாக ஞாயிற்றுக் கிழமைக் கூட்டத்தில் ஆராயப்பட்டு அவற்றுக்குரிய விரிவான விசாரணைகள், கலந்துரையாடல்கள் ஏனைய தினங்களில் நடத்தப்படும். இது சம்பந்தமான அவசரக் குழுக் கூட்டங்கள் தினமும் நடந்துகொண்டிருக்கும்.

சம்மேளனத்தில் பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை: அவசரக் குழு, கூட்டு சகாத் குழு, ஹஜ் குழு, முஅல்லபதுல் குலூப் நலன்பேணும் அமைப்பு, திருமண நல்லிணக்க சபை, கொடுக்கல் வாங்கல் பிணக்குத் தீர்ப்புக் குழு, பாரிய நோய் நிவாரண நிதியம், கல்விக் குழு, எல்லைப்புறக் காணிகளைப் பாதுகாப்பதற்கான காணிக்குழு, மொடர்ன் பாம் (Modern Farm) சுனாமி வீட்டுத்திட்டக் குழு, கலை கலாசாரக் குழு, பள்ளிவாயல்கள் நிருவாகத் தெரிவுக் குழு, கூட்டு உழ்ஹிய்யாக் குழு ஆகியவை.

இக்குழுக்கள் மூலம் சம்மேளனம் காத்திரமான சமூகப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. இப்பகுதி மக்கள் தமது சகல பிரச்சினைகளையும் இங்கு கொண்டுவந்து திருப்திகரமான முறையில் தீர்வு பெற்றுக் கொள்கின்றனர். மிகவும் பயங்கரமான — துன்பகரமான காலகட்டங்களிலெல்லாம் இந்நிறுவனம் ஆற்றிய தன்னிகரற்ற பணிகள் காலத்தால் அழியாதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் பிரமுகர்களும், புத்திஜீவிகளும் இங்கு வந்து சம்மேளனத்தின் செயற்பாடுகளை அறிந்து சென்று தமது பகுதிகளிலும் நடைமுறைப்படுத்த முற்படும் அளவுக்கு இந்நிறுவனம் நாடளாவிய ரீதியில் பிரபலம் பெற்றுள்ளது.

அஷ்ஷஹீத் அகமது லெப்பை ஹாஜியார் அவர்களின் நீங்கா நினைவுச் சின்னமாக இந்த சம்மேளனம் விளங்குகிறது. இதற்கென்று தனியான இரண்டு மாடிக் கட்டிடம் ஊரின் மத்தியில் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

அஷ்ஷஹீத் அவர்களது பெயரிலேயே இதன் இரண்டாவது மாடி அமையப் பெற்றுள்ளது. "அஷ்ஷஹீத் அஹமது லெப்பை ஹாஜியார் நினைவு மண்டபம்" என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இம்மண்டபம் சுமார் 150 பேர் அமர்ந்திருக்கக்கூடியதான சகல வசதிகளுங் கொண்ட ஒரு மாநாட்டு மண்டபமாகும். இம்மண்டபம் 17.01.2013 இல் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

## மாவட்ட, மாகாண சம்மேளனங்கள்

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தைத் தோற்றுவித்து காத்தான்குடிப் பிரதேச மக்களுக்குப் பெரும்பணி செய்த அஷ்ஷஹீத் அவர்கள், மட்டக்களப்பு மாவட்ட சம்மேளனத்தையும், கிழக்கிலங்கை முஸ்லிம் மஜ்லிசையும் தோற்றுவித்தார்கள்.

மாவட்ட சம்மேளனத்தின் மூலம் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடிப் பிரதேசங்களை இணைத்து மாவட்டம் முழுவதற்கும் தொண்டாற்றினார்கள். சில சந்தர்ப்பங்களில் காத்தான்குடிக்கும் ஓட்டமாவடிப் பிரதேசத்துக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றின. இது இம்மாவட்ட முஸ்லிம்களின் ஒற்றுமைக்குப் பாதகமாக அமைந்தது. இந்தத் துர்ப்பாக்கிய நிலையை அஷ்ஷஹீத் அவர்கள் முற்றாக நீக்கி வைத்தார்கள். பயங்கரவாதம் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களைப் பெரிதும் பாதித்த வேளைகளில் மூன்று பிரதேசப் பிரமுகர்களையும் ஒன்றிணைத்துச் செயற்பட்டார்கள். மாவட்ட சம்மேளனத்தின் சந்திப்புக்களை அடிக்கடி மூன்று பிரதேசங்களிலும் நடத்தினார்கள். மாவட்ட சம்மேளனத்தின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியற் தலைவர்களையும், அரசாங்க அதிகாரிகளையும் அடிக்கடி சந்தித்தார்கள். மூன்று பிரதேச மக்களும் வேறுபாடுகளை மறந்து ஒருமித்துச் செயற்படும் பாரிய முயற்சியில் அஷ்ஷஹீத் அவர்கள் பெருவெற்றி கண்டார்கள்.

கிழக்கிலங்கை முஸ்லிம் மஜ்லிஸை முன்னின்று வழிநடத்தி கிழக்கு மக்களுக்குப் பெருந் தொண்டாற்றினார்கள். மாகாணத்தின் பல பகுதிகளிலும் இம்மஜ்லிஸின் கூட்டங்களை நடத்தினார்கள். இதன் செயலாளர் நாயகமாகச் செயற்பட்டு கிழக்கில் வாழும் மக்களுக்காக பல அரங்குகளில் உரத்துக் குரல் கொடுத்தார்கள். இதன் மூலம் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் தளபதியாக மக்கள் மனங்களில் நீங்கா இடம்பிடித்தார்கள்.

1985ல் பயங்கரவாதத் தாக்குதல்கள் கிழக்கில் தொடங்கின. மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதேசங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. தமிழ், முஸ்லிம் கலவரம் தலை தூக்கியது. இப்போது அஷ்ஷஹீத் அவர்கள் உஷாரடைந்தார்கள். இரவு பகலாக உழைத்தார்கள். தினமும் கூட்டங்கள் நடத்தினார்கள். முஸ்லிம்கள் தமது ஊர்களை விட்டு வெளியிடங்களுக்குப் பயணிப்பது பாதுகாப்பற்றதாக இருந்த நிலையிலும் தைரியமாக பல இடங்களுக்கும் பயணித்தார்கள். ஏறாவூர், ஓட்டமாவடி மக்களை சந்தித்தார்கள். அவர்களது துன்ப துயரங்களைக் கேட்டறிந்தார்கள். அடிக்கடி கொழும்புக்குச் சென்று அமைச்சர்களைச் சந்தித்தார்கள். அமைச்சர்களையும், பாதுகாப்பு அதிகாரிகளையும் மட்டக்களப்புக்கு வரவழைத்தார்கள். காத்தான்குடி மெத்தைப் பள்ளியிலும், ஜாமிஅதுல் பலாஹிலும் கூட்டங்களை நடத்தி மக்களது துன்ப துயரங்களையெல்லாம் எடுத்துக் கூறினார்கள். தளர்ந்து போயிருக்கும் மக்களுக்கு தைரியம் கொடுக்கும் ஒரு தளபதியாகச் செயற்பட்டார்கள்.

## காத்தான்குடி மக்கள் வங்கிக் கொள்ளை.

பயங்கரவாத வன்செயல்கள் உக்கிரமடைந்திருந்த காலப்பகுதியில் காத்தான்குடி மக்கள் வங்கி, பயங்கரவாதிகளால் கொள்ளையிடப்பட்டது. சுமார் நான்கு கோடி ரூபா மதிப்புள்ள நகைகள் கொள்ளையிடப்பட்டன. காத்தான்குடி மக்களது பொருளாதாரம் இதனால் நசுங்கிப் போனது. இது கண்டு அஷ்ஷஹீத் அவர்கள் துடித்தெழுந்தார்கள். அரசியற் பலமோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிகளோ இல்லாதிருந்த அவர்கள் அப்போது அமைச்சராக இருந்த அல்ஹாஜ் ஏ.சீ.எஸ்.ஹமீத் அவர்களை அணுகினார்கள். தமது மக்களது துன்பியல் நிலைமையை எடுத்துரைத்தார்கள். அப்போதைய அரசில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த அமைச்சர் அவர்களது பெரு முயற்சியால் நகைகளை இழந்த மக்களுக்கு முழுமையான நஷ்டஈடு கிடைத்தது. இந்தப் பேருதவியைத் தன்னந் தனியாக நின்று நமது மக்களுக்குப் பெற்றுக் கொடுத்த பெருமை அஷ்ஷஹீத் அவர்களையே சாரும்.

## காத்தான்குடி ஆறாம் குறிச்சி அனர்த்தம்

அது இந்திய அமைதிகாக்கும் படையினரின் கட்டுப்பாட்டில் இப்பகுதி இருந்த காலம். காத்தான்குடி **6**ம் குறிச்சி பிரதான வீதியில் காத்தான்குடி – ஆரையம்பதி எல்லையில் இந்திய அமைதிகாக்கும் படை வீரர்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது படை வீரர் ஒருவர் துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதனால் படையினர் ஆத்திரமுற்று ஆறாம் குறிச்சி பிரதான வீதிப் பகுதியிலிருந்த பொது மக்களைத் தாக்க முற்பட்டனர். ஆண்களையும், பெண்களையும் துப்பாக்கி முனையில் தடுத்து வைத்திருந்தனர். கடும் பதற்றம் நிலவியது. அஷ்ஷஹீத் அவர்கள் சங்கைக்குரிய ஷைகுல் பலாஹ் அவர்களை அழைத்துக் கொண்டு அவ்விடத்துக்குச் சென்றார்கள். இந்திய அமைதிகாக்கும் படை அதிகாரிகளுடன் நேரில் பேசினார்கள். உடனே படையினர் தமது முற்றுகையைக் கைவிட்டனர். பதற்றம் நீங்கி அமைதி நிலவியது. இதனை ஆறாம் குறிச்சிப் பகுதி மக்கள் இப்போதும் நினைவு கூர்கிறார்கள். அஷ்ஷஹீத் அவர்கள் படுகொலை செய்யப்பட்ட போது இப்பகுதி மக்கள் ஆறாத் துயரில் மூழ்கியிருந்ததைக் காணமுடிந்தது.

## கடத்தப்பட்டோரை விடுவிக்கும் முயற்சிகள்

பயங்கரவாதம் மும்முரமடைந்திருந்த **1985 – 1988** காலப் பகுதியில் கடத்தல் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்தன. காத்தான்குடிப் பகுதியினர் பலர் போராளிகளால் கடத்தப்பட்டனர். இதனால் கடத்தப்பட்டோரின் உறவினர்களும், ஊர் மக்களும் மிகவும் கவலையடைந்தனர். இவ்வேளைகளில் அனைவரும் அஷ்ஷஹீத் அவர்களையே நாடினர். அஷ்ஷஹீத் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பிரமுகர்களுடன் நல்ல முறையில் நட்பைப் பேணி வந்ததால், தமிழ்ப் பிரமுகர்களுடனும், அதிகாரிகளுடனும், தமிழ்ப் பிரஜைகள் குழுவினருடனும் தொடர்புகொண்டு கடத்தப்பட்டோர் விடுவிக்கப்படுவதற்கு துணிகரமாகக் கருமமாற்றினார்கள். அஷ்ஷஹீத் அவர்கள் கொலை செய்யப்பட்ட இரவுங்கூட கடத்தப்பட்ட ஒரு சகோதரரை விடுவிக்கும் முயற்சியிலேயே மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். அவர் விடுவிக்கப்படுவார் என்ற நம்பிக்கையுடன் ஜாமிஅதுல் பலாஹில் நடந்த கூட்டத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பும் போதுதான் வீதியில் சுட்டு வீழ்த்தப்பட்டார். கடத்தப்பட்ட ஒரு சகோதரரின் உயிரைக் காப்பாற்றும் முயற்சியை மேற்கொண்டு போன அஷ்ஷஹீத் அந்த உணர்வுடனே தனது இன்னுயிரை இழந்தார்.

## தமிழ் - முஸ்லிம் நல்லுறவுப் பாலம்

மட்டக்களப்பு மாவட்டம் முஸ்லிம்களும், தமிழர்களும் பின்னிப் பிணைந்து வாழும் ஒரு பிரதேசம். முன்னாள் அமைச்சர் செ.இராசதுரை அடிக்கடி சொல்வது போல் இரு சமூகத்தாரும் பிட்டும் தேங்காய்ப்பூவும் போல வாழும் பகுதி. இடைக்கிடை சிறு சிறு விரிசல்கள் ஏற்பட்டாலும் கூட அன்றும், இன்றும் ஈரினத்தாரும் இதயத்தால் இணைந்தே வாழ்கின்றனர். புலவர் மணி பெரியதம்பிப் பிள்ளை கூறுவதைப் போன்று "இருதயத்தின் ஈரிதழ் போல் இங்கு தமிழ் முஸ்லிம் ஒரு வயிற்றுப் பிள்ளை"யெனத் திகழ்கின்றனர். அஷ்ஷஹீத் அவர்கள் இந்தப் பிணைப்பைத் தொடர்ந்து பேணுவதில் அதிக சிரத்தைக் காட்டினார்கள்.

செங்கலடி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றிய அஷ்ஷஹீத் அவர்கள் தமிழ் மக்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை இளமைப் பருவத்திலேயே பெற்றிருந்தார்கள். செங்கலடி ஒரு தமிழ்க் கிராமம். அந்த ஊரின் அரச அலுவலகத்தில் பணியாற்றிய இவர்களிடம் வருவோர் பெரும்பாலும் தமிழர்களே. அங்கு பணி செய்வோரும் தமிழர்கள்தான். இவர்களுடன் அன்பாகவும், நேசமாகவும் பழகி அனைவரதும் நல்லபிமானத்தையும் அஷ்ஷஹீத் அவர்கள் பெற்றிருந்தார்கள்.

அரச பதவியைத் துறந்து மட்டக்களப்பில் தந்தையின் வர்த்தக நிலையத்தை நடத்திய சந்தர்ப்பத்திலும் பின்னர் இளம்பிறை அச்சகத்தை நடத்திய வேளைகளிலும் தமிழ் மக்களுக்குப் பெரும்பணியாற்றினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது வர்த்தக நிலையங்களுக்கு முஸ்லிம்களும் தமிழர்களும் வந்து தமது தேவைகளைப் பற்றி எடுத்துக்கூறும் போது தமது சாதாரண துவிச்சக்கர வண்டியிலேயே மட்டக்களப்புக் கச்சேரி, கல்வி அலுவலகம் போன்ற அரச பணிமனைகளுக்குப் பயணித்து உரியவர்களுடன் பேசி அனைவரது தேவைகளையும் நிறைவேற்றிக் கொடுப்பார்கள்.

அரச அதிபர்கள், அரச அலுவலக அதிகாரிகள் அனைவருமே அஷ்ஷஹீத் அவர்களது நெருங்கிய நண்பர்களாயிருந்தனர். அவர்களையெல்லாம் அஷ்ஷஹீத் அவர்கள் அணுகும் போது அவர்கள் அஷ்ஷஹீதுக்கு எழுந்து மரியாதை செய்வார்கள். அவர்கள் கேட்பதையெல்லாம் முடித்துக் கொடுப்பார்கள்.

பயங்கரவாதப் பிரச்சினை உச்ச நிலையில் இருந்த காலத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் பிரசைகள் குழுக்கள் இயங்கின. அஷ்ஷஹீத் அவர்கள் அக்குழுக்களுடன் அடிக்கடி தொடர்புகொண்டு சுமுக நிலை ஏற்பட வழிசெய்தார்கள். தமிழர்களும் முஸ்லிம்களும் மோதிக்கொள்ளாதவாறு நிதானமாகச் செயற்பட்டார்கள். தமிழ்ப் பிரமுகர்களுடனான சந்திப்பின் போதெல்லாம். அமைதிக்கும் நல்லுறவுக்குமாக உரத்துக் குரல் கொடுத்தார்கள். அஷ்ஷஹீத் அவர்கள் எதைச் சொன்னாலும் தமிழ்த் தலைவர்கள் அதை ஏற்றுச் செயற்படும் அளவுக்கு அவர்களெல்லாம் அஷ்ஷஹீத் அவர்கள் மீது வைத்திருந்த மதிப்பும், மரியாதையும் காணப்பட்டன.

அரச அதிகாரிகள், அமைச்சர்கள், படையினர் மத்தியிலும் முஸ்லிம்களுக்காக மட்டுமல்ல தமிழ் சகோதரர்களுக்காகவும் அஷ்ஷஹீத் அவர்கள் குரலெழுப்பினார்கள்.

பிரசைகள் குழுக் கூட்டம் ஒன்றில், இந்திய அமைதி காக்கும் படையின் பிரிகேடியர் ஒருவர், கிறிஸ்தவ மதப் பெரியார் சந்திரா பெர்னான்டோவையும், பிரசைகள் குழுவினரையும் புலிகளின் ஆதரவாளர்கள் என்று குற்றஞ்சாட்டினார். அங்கு எவரும் இதனை ஆட்சேபித்துப் பேசவில்லை. அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை ஹாஜியார் மாத்திரமே துணிந்து எழுந்து அக்குற்றச்சாட்டை மறுத்துப் பேசினார். தமிழ் மக்களுக்காகத் தனித்து நின்று தைரியமாகக் குரல் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது துணிவும், ஆங்கில மொழிப் புலமையும் அனைவரையும் ஈர்த்தன. அமைச்சர்கள், அதிகாரிகள், படையினர் மத்தியில் ஆங்கிலத்தில் பேசும்போது அனைவருமே அதிசயித்து நிற்பார்கள். அடங்கிப் போவார்கள். அத்தகைய அற்புத சக்தி அஷ்ஷஹீத் அவர்களிடம் இயற்கையாகவே அமைந்திருந்தது.

அஷ்ஷஹீத் அவர்களது பரிதாப இழப்பு முஸ்லிம்களை மட்டுமல்ல தமிழ் மக்களையும் வெகுவாகப் பாதித்தது. அவர்கள் மறைந்த நாளில் தமிழ் மக்களெல்லாம் கதறிக் கண்ணீர் சிந்திய காட்சி எமது உள்ளங்களை நெகிழ வைத்தது.

"அஹ்மத் லெப்பையின் இழப்பு சகலருக்கும் ஏற்பட்ட இழப்பு. தமிழ் - முஸ்லிம் இணைப்புப் பாலமாக மட்டுமல்ல, இருசமூகங்களுக்குமிடையே பிரச்சினைகள் உருவாகும் போதெல்லாம் வழிகாட்டும் கலங்கரை விளக்காகவும் அவர் திகழ்ந்தார்." என்று அப்போதைய மட்டக்களப்பு திருமலை மாவட்ட பேராயரும் தற்போதைய திருமலை மாவட்டப் பேராயருமான கிங்ஸ்லி சுவாம் பிள்ளை அஷ்ஷஹீதின் மறைவு குறித்து தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

"அல்ஹாஜ் அஹ்மத் லெப்பை இக்கட்டான சூழ்நிலைகளிலெல்லாம் தமிழ் - முஸ்லிம் மக்களின் நலனுக்காக உழைத்த பெருமகன். எத்தகைய பிரச்சினைகள் உருவானாலும் தராசுபோல் நின்று செயற்படுவார். இப்பெருமகனின் இழப்பு காத்தான்குடி மக்களுக்கு மட்டும் ஏற்பட்ட இழப்பு அல்ல. சகல மக்களுக்கும் ஏற்பட்ட இழப்பாகும்" என்று மட்டக்களப்பு இராம கிறிஷ்ண மிஷன் முதல்வர் சுவாமி – ஜீவானந்தாஜீ தனது அனுதாபத்தைத் தெரிவித்தார்.

"அல்ஹாஜ் ஏ.அஹ்மத் லெப்பை அவர்களின் மறைவு கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கும் ஒரு பேரிழப்பாகும். இரண்டு இன மக்களுக்கும் மத்தியில் அவர் ஒரு சமாதானப் புறாவாகவே திகழ்ந்தார். தமிழினத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் காத்தான்குடியில் தினமும் தொழில் செய்து வாழ்கின்றனர். அவ்வாறே முஸ்லிம்களும் தமிழ்ப்பகுதிகளில் தொழில்களிலும், வியாபாரத்திலும் ஈடுபடுகின்றனர். இந்த ஒற்றுமைக்கு வித்திட்ட ஒருவர் அஹ்மத் லெப்பை. அவர் நல்ல தமிழ்ப் பேச்சாளர். அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைவால் அந்த நல்ல தமிழையே இழந்துவிட்ட உணர்வு எமக்கு ஏற்படுகிறது." என்று மட்டக்களப்பு நகைக்கடை உரிமையாளர் சங்கத்தினர் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கவலைப்பட்டனர்.

மட்டக்களப்பில் இயங்கிய மகாத்மாகாந்தி சேவா மன்றம், பாரதி மன்றம் ஆகியவற்றின் உறுப்பினராக அஷ்ஷஹீத் அவர்கள் இருந்தார்கள். தமிழ் விழாக்களில் பங்குபற்றி இனிய தமிழில் உரையாற்றினார்கள். மட்டக்களப்பில் கோலாகலமாக நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளில் முக்கிய பங்கு வகித்தார்கள். மட்டக்களப்பில் அஷ்ஷஹீத் அவர்கள் கடைசியாகக் கலந்து கொண்ட பொது நிகழ்ச்சி மகாத்மா காந்தி நினைவுக் கூட்டமாகும். அக்கூட்டத்தில் அவர் ஆற்றிய சிறப்புரை எல்லாரையும் பெரிதும் கவர்ந்தது. அஷ்ஷஹீத் அவர்களது மறைவையொட்டி 13.03.1988 இல் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்ற ஏற்பாட்டில் இரங்கக் கூட்டம் நடைபெற்றது.

## பொது நிறுவனங்கள்

அஷ்ஷஹீத் அவர்கள் காத்தான்குடி பட்டின ஆட்சி மன்றத் தலைவராகப் பதவி வகித்த காலத்தில் செய்த பணிகள் குறிப்பிடத் தக்கவை. இன்றும் நினைவு கூரப்படுபவை. காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், பாலர் பாடசாலை, கமத் தொழில் சேவை நிலையம், பொது நூலகம் போன்றவற்றை நிறுவியதுடன் அவற்றுக்கு நிலம் பெறுவதிலும் முன்னின்று உழைத்தார்கள்.

தபால் அலுவலகத்தைத் தரமுயர்த்துவதில் முக்கிய பங்காற்றினார்கள். பட்டின ஆட்சி மன்றத்துக்குச் சொந்தமான நிலத்தைப் பெற்றுக் கொடுத்தார்கள். விளையாட்டு மைதானத்தை விசாலப்படுத்தினார்கள். கிராமிய வங்கியை நிறுவி விவசாயிகள் விவசாயக் கடன் பெற வழி சமைத்தார்கள்.

குப்பைகளை அகற்றுவதற்கு மாட்டு வண்டிகள் உபயோகிக்கப் பட்டன. அதனை மாற்றி உழவு இயந்திரங்கள் மூலம் குப்பைகளை அகற்றும் முறையை அஷ்ஷஹீத் அவர்களே தமது பட்டின ஆட்சிமன்றத் தலைமைத்துவத்தின் போது ஏற்படுத்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய காத்தான்குடிப் பிரதேசம் மணற்பாங்கான இடமாகவே அப்போது இருந்தது. எவ்வித அபிவிருத்தியும் அப்போது காணப்படவில்லை. மரங்கள் வளர்ந்து காட்டுப் பகுதியாகக் காணப்பட்டது. அஷ்ஷஹீத் அவர்களது காலத்தில் இப்பிரதேசம் அபிவிருத்தி செய்யப்பட்டது. பள்ளிவாசலும், பாடசாலையும் அபிவிருத்தி செய்யப்பட்டன. இதைத் தொடர்ந்துதான் அங்கு குடியேற்றமும் இடம்பெற்றது. இங்கு மின் இணைப்புக் கிடைப்பதற்கும் அஷ்ஷஹீத் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். காத்தான்குடியின் அயற் கிராமங்களும் மின் இணைப்பைப் பெற வழி சமைத்தார்கள்.

காத்தான்குடி மக்களுக்குச் சொந்தமான ஆயிரக் கணக்கான ஏக்கர் விவசாய நிலம் படுவான்கரை எனப்படும் உன்னிச்சை நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழுள்ள பகுதியில் உள்ளது. இந்த நிலத்தில் விவசாயம் செய்யும் காத்தான்குடி விவசாயிகளின் நலன் கருதி காத்தான்குடியில் விவசாயிகள் சங்கமொன்றை அஷ்ஷஹீத் அவர்கள் உருவாக்கினார்கள். இது தொடர்பாக கமநல சேவை நிலையத்தைத் தோற்றுவித்தார்கள்.

1976,1977 காலப் பகுதியில் இலங்கையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தால் சகல பகுதிகளிலும் இணக்க சபைகள் அமைக்கப்பட்டன. கிராமங்களில் ஏற்படும் சமூகப் பிணக்குகளைத் தீர்த்து வைப்பது தொடர்பாகவே இவை நிறுவப்பட்டன. இந்தச் சபை காத்தான்குடிப் பகுதியிலும் நடைமுறையிலிருந்தது. 1978 இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்த போது இணக்க சபைகளைக் கலைத்துவிட்டது. அப்போது அஷ்ஷஹீத் அவர்கள் உத்தியோகப் பற்றற்ற முறையில் சமரசசபையை நமது பகுதியில் அமைத்தார்கள். இணக்க சபை செய்து வந்த சேவையை சமரச சபை மிகச் சிறப்பாகச் செய்துவந்தது.

1978 ஆம் ஆண்டு கிழக்கைச் சிதைத்த சூறாவளியின் போது காத்தான்குடி மக்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இவ்வேளையில் இம்மக்களுக்கு உதவுவதற்காக சூறாவளி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஒன்றை நிறுவி அளப்பரிய உதவிகளை வழங்கினார்கள். ஜனாப் ஏ.எச்.முஹம்மத் ஜே.பி. அவர்களின் தலைமையில் இயங்கிய 'தினபதி' வாசகர் மன்றத்தின் காப்பாளராக இருந்து பல பணிகள் செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தான்குடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

அஷ்ஷஹீத் அவர்கள் கூட்டுறவுத் துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டார்கள். காத்தான்குடி இரண்டாம் வட்டார கூட்டுறவுச் சங்கக் கிளையின் தலைவராகப் பதவி வகித்துள்ளார்கள். அவரது முயற்சியால் கிளைச் சங்கங்கள் புனரமைக்கப்பட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் எனும் தாய்ச் சங்கம் அமைக்கப்பட்ட பின்னர் அதன் தலைவராகவும் பதவி வகித்தார்கள். இவர்களது காலத்தில் பல கிளைச் சங்கங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. மாதிரிக் கடைகள் திறக்கப்பட்டன. தாய்ச்சங்கத்துக்குத் தளபாடங்கள், வாகனங்கள் போன்றவை வாங்கப்பட்டன. இச்சங்கத்தின் மூலம் பொதுமக்களுக்குத் துணிகள் விநியோகிக்கப்பட்டன. கிராமிய வங்கி முறை அறிமுகம் செய்யப்பட்டது. பெருவெள்ளம், சூறாவளி போன்ற அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு இச்சங்கத்தின் மூலம் நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்தார்கள். இச்சங்கத்துக்கான நிலத்தில் கட்டிடம் அமைக்கும் பணி இவர்களாலேயே தொடங்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் பற்றி மக்கள் அவநம்பிக்கை கொண்டிருந்த நிலையை மாற்றி மக்களின் நிறைந்த நம்பிக்கையுடன் ஊழலின்றி கூட்டுறவுச் சங்கத்தை நடத்திய பெருமை அஷ்ஷஹீத் அவர்களையே சாரும்.

மிகத் திறம்பட கூட்டுறவுச் சங்கத் தலைமைப் பதவியை அஷ்ஷஹீத் அவர்கள் வகித்துவந்த வேளை இவர்கள் மீது காழ்ப்புணர்வு கொண்டவர்களது சதி முயற்சியால் இவர்களுக்குப் பதவி நீக்கக் கடிதம் அனுப்பப்பட்டது. கூட்டுறவுச் சங்கத்தில் வழமை போன்று கருமமாற்றும் வேளையில் தமக்கு வந்த கடிதங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு கடிதம் அவர்களது கண்ணிற் பட்டது. அது பதவி நீக்கக் கடிதம். அவ்வளவுதான், அடுத்த கடிதங்களைப் படிக்கவில்லை. உடனேயே தனது ஆசனத்தை விட்டு எழுந்து அக்கணமே வெளியேறிவிட்டார்கள். பின்னர் பல சந்தர்ப்பங்களில் அப்பதவியை ஏற்குமாறு பலரும் வேண்டியுங்கூட அதனை அவர்கள் ஏற்கவில்லை. எனினும் தொடர்ந்து வந்த நிருவாகங்களுக்கு ஆலோசனைகள் வழங்கி ஆதரவு நல்கினார்கள். அஷ்ஷஹீத் அவர்கள் மரணிக்கும் வரை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பெரும்பாலும் அன்னாரது கட்டுப்பாட்டிலேயே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*1981*இல் நடைபெற்ற யுனைட்டட் விளையாட்டுக் கழக 10ம் ஆண்டு நிறைவு விழாவில், சிறந்த உதைப்பந்தாட்ட வீரர்களுக்கான விருது அல்ஹாஜ் N.M. ஸல்மான் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் நமது தலைவர் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்கள்.



காத்தான்குடி முஸ்லிம் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழாவில் நமது தலைவர் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1982ம் ஆண்டு ஸ்ரீலங்கா இஸ்லாமிய இளைஞர் கலாச்சார பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நூலக வாரத்தின்போது திரட்டப்பட்ட சுமார் 75,000 ரூபாய் பெறுமதியான புத்தகங்களை காத்தான்குடி பொது நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யும் நிகழ்வில் நம் தலைவர் பிரதம அதிதியாக கலந்துகொண்ட நிகழ்வில் காத்தான்குடி உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் திருவாளர் யோகநாதன் உரையாற்றுவதையும் பேரவயின் தலைவர் SLA. கபூர் அதிபர், பன்நூலாசிரியர் MMM. மஃறூப் கரீம் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.



காங்கேயனோடையில் உப-தபாலகம் அமைவதற்கு முக்கிய காரணகர்த்தாவாக இருந்த நமது தலைவர் அவர்கள் அதன் திறப்புவிழாவின்போது உரையாற்றுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுச் சின்னங்கள்.

அஷ்ஷஹீத் அவர்களது முயற்சியால் தொடங்கப்பட்ட பல நிறுவனங்கள் இன்றும் காத்தான்குடியில் அவர்களது நினைவுச் சின்னங்களாக நிமிர்ந்து நிற்கின்றன. அனாதை இல்லம், முதியோர் இல்லம், வலது குறைந்தோர் இல்லம் போன்ற சமூக நிறுவனங்களும் அவர்களது முயற்சியாலேயே உருவாக்கப்பட்டன.

## காத்தான்குடி அரசினர் வைத்தியசாலை

காத்தான்குடியில் அரசினர் வைத்தியசாலை ஒன்றின் தேவை உணரப்பட்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் முதலியார் சின்னலெப்பை அவர்களின் முயற்சியினால் அது அமைக்கப்பட்டது. சுகாதார நலன்கருதி ஊருக்கு வெளியே மக்கள் குடியிருப்புக்கள் இல்லாத இடத்தில் வைத்தியசாலை அமைய வேண்டும் என்று கருதப்பட்டதால் அயற்கிராமமான ஆரையம்பதியில் மக்கள் வசிக்காத வெற்றுநிலப் பகுதியில் 1913ம் ஆண்டு அந்த வைத்தியசாலை அமைக்கப்பட்டது. அது காத்தான்குடி வைத்தியசாலை என்றே அழைக்கப்பட்டு வந்தது.

காத்தான்குடியிலும் ஆரையம்பதியிலும் சனத்தொகை அதிகரிப்புக் காரணமாகவும், சில சந்தர்ப்பங்களில் இரண்டு ஊர்களுக்குமிடையில் சிறு சிறு பிணக்குகள் தோன்றியதாலும், தமிழ் - முஸ்லிம் நல்லுறவில் விரிசல்கள் ஏற்பட்டதாலும் காத்தான்குடி மக்கள் ஆரையம்பதியிலுள்ள வைத்தியசாலைக்குச் செல்வதில் தடங்கல்கள் ஏற்பட்டன. இதனால் காத்தான்குடி எல்லைக்குள் ஓர் அரசினர் வைத்தியசாலை நிறுவவேண்டியதன் அவசியம் உணரப்பட்டது.

இந்நிலையில் காத்தான்குடி கடற்கரைப் பகுதியில் ஜனாப் எம்.எல்.எம்.காசிம் அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஒரு நிலத்தில் காத்தான்குடியில் பெண்களுக்கான ஓர் அறபுக் கல்லூரி அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்நிலம் காத்தான்குடி வர்த்தகர்களின் முயற்சியால் பெறப்பட்டது.

கடற்கரைப் பிரதேசம் பெண்களுக்கான அறபுக் கல்லூரிக்குப் பொருத்தமற்றது என்று கருதப்பட்டதால் காத்தான்குடி ஐந்தாம் குறிச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாமிஉழ்ழாபிரீன் ஜும்ஆப் பள்ளிவாயலுக்குச் சொந்தமான அப்பள்ளிவாயலுக்கு எதிரிலுள்ள நிலத்தில் பெண்கள் அறபுக் கல்லூரியை அமைத்து, கடற்கரையிலுள்ள நிலத்தில் அரசினர் வைத்தியசாலைக்கான கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. அவ்விடத்தில்தான் தற்போதைய வைத்தியசாலை நவீன கட்டிடத்தில் கம்பீரமாகக் காட்சி தருகின்றது. இந்த வைத்தியசாலையின் தோற்றத்திற்கு மிகவும் பாடுபட்டவர்கள் அஷ்ஷஹீத் அவர்கள்.

பதவியிலிருந்த எல்லா அரசியல்வாதிகளது ஒத்துழைப்பையும் பெற்று இந்த வைத்தியசாலையை அஷ்ஷஹீத் அவர்கள் அமைத்துத் தந்தார்கள்.

இவ்வைத்தியசாலையின் திறப்புவிழா 27.06.1986ல் மிகக் கோலாகலமாக நடைபெற்றது. அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஜனாப் அஹ்மத் றிஸ்வி சின்னலெப்பை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அஷ்ஷஹீத் அவர்கள் முக்கிய அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் உரை நிகழ்த்த எழுந்ததும் பொதுமக்களிற் பலர் முண்டியடித்துக் கொண்டு மேடையில் ஏறி மாலைகள் சூடி அன்னாரைக் கௌரவித்த நிகழ்வு என்றுமே மறக்க முடியாதது.

இவ் வைத்தியசாலை 1985 காலப்பகுதியில் காத்தான்குடி மக்களுக்கு மிகப் பெரிய உதவியாகவும், நிவாரணமாகவும் அமைந்தது. அப்போது இங்கு வைத்திய அதிகாரியாகக் கடமையாற்ற ஒரு வைத்திய நிபுணர் தேவைப்பட்டார். அக்காலகட்டத்தில் டாக்டர் எம்.ஐ. அஹ்மத் பரீத் அவர்கள் அம்பாறை வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்கள். அவரை காத்தான்குடி வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாக நியமிப்பதற்கு அஷ்ஷஹீத் அகமது லெப்பை ஹாஜியார் அவர்கள் விரும்பினார்கள்.

அப்போது டாக்டர் பரீத் அவர்களின் மாமனார் அல்ஹாஜ் எம்.ரீ.எம்.காலித் ஜே.பி அவர்கள் பசறையில் தனது வர்த்தக நிலையத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். அஷ்ஷஹீத் அவர்கள் காலித் ஹாஜியாருடன் சேர்ந்து அம்பாறைக்குச் சென்று டாக்டர் அகமது பரீத் அவர்களைச் சந்திக்க விரும்பி காலித் ஹாஜியாரை அழைத்தார்கள். அவரும் அதற்குச் சம்மதித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசறையிலிருந்து அம்பாறைக்குச் சென்றார். அஷ்ஷுஹீத் அவர்களும், காத்தான்குடிப் பிரமுகர்கள் சிலரும் இங்கிருந்து அம்பாரைக்குச் சென்றார்கள்.

அஷ்ஷுஹீத் அவர்கள் டாக்டர் அஹ்மத் பரீத் அவர்களிடம், "டாக்டர், நீங்கள் தற்போது ஒரு பெரிய வைத்தியசாலையான அம்பாரை வைத்தியசாலையில் தலைமை வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றுகிறீர்கள். இவ்வேளையில் காத்தான்குடியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு சிறிய வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரியாகக் கடமையாற்ற வருமாறு உங்களை அழைப்பதற்கு எங்களுக்கு வெட்கமாக இருக்கிறது. எனினும் தற்போதைய கலவரத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட நமது சமூக மக்களுக்குச் சேவை செய்ய வேண்டிய கடப்பாடு உங்களுக்கு இருக்கிறது. காத்தான்குடி மக்கள் ஊருக்கு வெளியேயுள்ள வைத்திய சாலைகளுக்குப் போக முடியாத நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். எனவே, நமது சமூகநலனுக்காக நீங்கள் தியாகம் செய்து காத்தான்குடிக்கு வரச் சம்மதித்து கடிதம் தரவேண்டும்." என்று கேட்டுக் கொண்டார்கள். பரீத் டாக்டர் அவர்கள் அதற்குச் சம்மதித்துக் கடிதமும் கொடுத்தார்கள்.

அஷ்ஷுஹீத் அவர்கள் அக்கடிதத்துடன் தமது நண்பர்களையும் அழைத்துக் கொண்டு உடனடியாக கொழும்பு சென்று அமைச்சர் ஏ.சீ.எஸ்.ஹமீது அவர்களைச் சந்தித்து டாக்டர் அஹ்மத் பரீத் அவர்களுக்கு அம்பாரையிலிருந்து காத்தான்குடி வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுத்தார்கள். இது, அஷ்ஷுஹீத் அவர்களது மகத்தான சேவையாகும்.

இவ்வாறு அஷ்ஷுஹீத் அவர்களது பொதுப்பணிகள் பலதரப்பட்டன. இன்று காத்தான்குடிப் பிரதேசத்தில் இயங்கும் பொது நிறுவனங்களிற் பெரும்பாலானவற்றின் தோற்றத்தில் அஷ்ஷுஹீத் அவர்களுக்குப் பெரும் பங்குண்டு. அவை அனைத்தும் அவர்களது நினைவுச் சின்னங்களேயாகும்.

காத்தான்குடி 6ம் குறிச்சியில் ஜனாப் ஏ.எச்.முகம்மது அவர்களது தலைமையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் அஷ்ஷுஹீத் அவர்கள் உரையாற்றும் போது "எனது வாழ்நாளில் ஒரு நாளையாவது பொதுப்பணி ஒன்றையேனும் செய்யாமல் கழித்ததில்லை – கழிக்க விரும்பவுமில்லை. ஒரு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையும் இல்லாவிட்டால் தலையில் தொப்பியைப் போட்டுக் கொண்டு வீதியில் நடந்து வருவேன். வழியில் வருபவர் தனக்கு ஏதாவது வேலை ஒன்றைச் செய்து உதவுமாறு கோருவார் என்று எதிர்பார்த்து நடந்தே வருவேன். அவரது வேலையை முடித்துக் கொடுப்பேன்." என்று கூறினார்கள். இவ்வாறுதான் அவர்களது வாழ்நாள் கழிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மட்டக்களப்பில் நடைபெற்ற மாபெரும் மீலாத் விழாவில் உரைநிகழ்த்தும் நமது தலைவர்.



காத்தான்குடி முஸ்லிம் பாலர் பாடசாலை விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் நமது தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக நிறுவனங்களின் மாநாட்டில் உரையாற்றும் நமது தலைவர்.



காத்தான்குடியில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டமொன்றில் உரை நிகழ்த்தும் நமது தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயப்பணி

அஷ்ஷஹீத் அவர்கள் சிறுவயதிலிருந்தே இஸ்லாமிய சமய நெறிமுறைகளை நன்கு பேணும் பழக்கமுடையவர்கள். சிறு பராயத்தில் குர்ஆன் ஓதுவதற்கு நன்கு பயிற்சி பெற்றிருந்தார்கள். உலமாக்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணிவந்தார்கள். அஷ்ஷஹீத் அவர்கள் வாழ்ந்த பகுதி காத்தான்குடி இரண்டாங் குறிச்சி கிழ்ரிய்யாத் தைக்காப் பகுதியாகும். இப்பகுதியில் அக்காலத்தில் தலைசிறந்த மார்க்க அறிஞர்களாக விளங்கிய உலமாக்கள் வாழ்ந்து வந்தார்கள்.

'ஓடைக்கரை ஆலிம்' என்று அழைக்கப்படும் அல்ஹாஜ் அஹ்மத் லெப்பை ஆலிம், ஷம்சுதீன் ஆலிம், அப்துஸ்ஸலாம் ஆலிம், யாஸீன் பாவா ஆலிம் ஹாஜியார் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுடன் அஷ்ஷஹீத் அவர்கள் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்கள். கிழ்ரிய்யாத் தைக்காப் பள்ளிவாயலில் இந்த உலமாக்களது மார்க்க விளக்கங்களையும், சொற் பொழிவுகளையும் கேட்பார்கள். இவ்வாறு உலமாக்களின் நெறிப்படுத்தலில் அஷ்ஷஹீத் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

இதனால், அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை அவர்கள் சமய அறிவை நன்கு பெற்றிருந்தார்கள். மர்ஹூம் அப்துல் ஜவாத் ஆலிம் அவர்களிடம் மார்க்க அறிவைப் பயின்றதன் மூலம், மார்க்கச் சட்டங்கள், ஹதீஸ்கள், அல்குர்ஆன் விளக்கம் போன்றவற்றிலும் அஷ்ஷஹீத் அவர்களுக்குப் போதிய அறிவு இருந்தது. இஸ்லாம் சம்பந்தமாக உரை நிகழ்த்தும் போது அவர்கள் மிகத் தெளிவான விபரங்களை எடுத்துரைப்பார்கள்.

அஷ்ஷஹீத் அவர்களது நடை, உடை, பாவனையிலும் இஸ்லாமிய விழுமியங்கள் மேலோங்கியிருந்தன. அழகிய தாடி அவர்களது முகத்தை அலங்கரித்தது. எப்போதும் தலையில் தொப்பி அணிந்திருப்பார்கள். நீளக்கைச் சட்டையும், வெள்ளை சாரனும் அணிந்திருப்பார்கள்.

ஐங்காலத் தொழுகையையும் ஜமாஅத்துடன் நிறைவேற்றுவதில் மிகவும் கவனம் செலுத்துவார்கள். எப்போதும் வுழூவுடன் இருப்பார்கள். சுன்னத்தான தொழுகைகளையும் கிரமமாக நிறைவேற்றுவார்கள். 'பொதுப்பணியே தன் வாழ்வு' என்றிருந்த அவர்கள் தனது பணிகளை 'இஸ்திகாராத்' தொழுகையின் பின்னரே ஆரம்பிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலிருக்கும் போது அவர்களது வீட்டின் முன்னாலுள்ள கிழ்ரிய்யாத் தைக்காப் பள்ளிவாயலில் தொழுவார்கள். அப்பள்ளிவாயல் நிருவாக சபையில் அங்கத்துவம் வகித்தார்கள். செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்கள். அதன் நிருவாக சபைத் தலைவராக உலமாக்களில் ஒருவரே இருக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்து வைத்தார்கள். பல்லாண்டு காலம் இந்நடைமுறை வழக்கிலிருந்தது. இப்பள்ளிவாயலின் நிருவாகம் சீராக அமையவும், அங்கு நடைபெறும் நிகழ்வுகள் சிறப்புறவும் ஆலோசனை வழங்கி நெறிப்படுத்தினார்கள். இப்பள்ளிவாயலைப் புனரமைப்புச் செய்ய வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள். அவர்கள் வாழ்ந்த காலத்தில் அது சாத்தியப்படவில்லை. எனினும் அவர்களது மறைவின் பின் அவர்களது விருப்பம் நிறைவேறி தற்போது அப்பள்ளிவாயல் புனரமைப்புச் செய்யப்பட்டு அழகுறக் காட்சி தருகிறது.

அஷ்ஷஹீத் அவர்களது தொழில் நிறுவனம் மட்டக்களப்பு இளம்பிறை அச்சகம். அவர்கள் பகல் வேளையில் அங்கு இருப்பார்கள். இதன்போது ளுஹர், அஸ்ர் தொழுகைகளுக்காக மட்டக்களப்பு – கோட்டைமுனை யூசுபிய்யாப் பள்ளிவாயலுக்குச் செல்வார்கள். இத் தொழுகைகளை அங்கு முதல் ஜமாஅத்தில் நிறைவேற்றுவார்கள். அதனால் இப்பள்ளிவாயல் விவகாரத்தில் கூடிய கவனம் செலுத்தினார்கள். இதன் நிருவாகம், பரிபாலனம், சமயச் செயற்பாடுகள், வருமானம் போன்றவற்றில் அக்கறை கொண்டு ஆலோசனை வழங்கி உதவி புரிந்தார்கள்.

இலங்கையில் மிகவும் பிரபலமான பள்ளிவாயல் மெத்தைப் பள்ளிவாயல். இதன் செயலாளராகக் கடமையாற்றி இதன் வளர்ச்சியில் அதீத கவனம் செலுத்தினார்கள். இதன் புனரமைப்புப் பணியில் பெரும் பங்காற்றினார்கள்.

இப்பகுதியின் சமய, சமூக, கல்வி, கலாசார, அரசியல் விவகாரங்களுக்கெல்லாம் இப்பள்ளிவாயல் கேந்திர நிலையமாக விளங்கச் செய்தார்கள். முக்கிய கூட்டங்கள், கருத்தரங்குகள், சமய விழாக்கள் போன்றவற்றை இங்கு நடத்தினார்கள்.

இப்பள்ளிவாயலுக்கு வருமானம் பெறும் வழிமுறைகளை வகுத்தார்கள். கடைகள், சந்தைகள் போன்றவற்றைஅமைப்பதற்கும், அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் வருமானத்தைப் பெருக்குவதற்கும் இவர்களே காலாக நின்றார்கள். வள்ளற் பெருந்தகை மர்ஹூம் நளீம் ஹாஜியார் அவர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களை இப்பள்ளிவாயலுக்கு அழைத்துவந்து வரவேற்று உபசரித்து அவர்களது உதவிகள் மூலம்பள்ளிவாயல் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டார்கள்.

இப்பள்ளிவாயல் மஹல்லாவிலுள்ள சிறிய பள்ளிவாயல்களுக்கும், குர்ஆன் மத்ரஸாக்களுக்கும் இதன்மூலம் நிதியுதவி செய்வதற்கு ஏற்பாடு செய்தார்கள். இந்நடைமுறை தற்போதும் சிறப்பாக இடம்பெறுகிறது. இந்த முன்மாதிரியை காத்தான்குடியிலுள்ள ஏனைய ஜும்ஆப் பள்ளிவாயல்களும் பின்பற்றுகின்றன.

பகல் வேளையில் மட்டக்களப்பில் தனது தொழிலகமான இளம்பிறை அச்சகத்தில் இருக்கும் அஷ்ஷஹீத் அவர்கள், அங்கும் பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்வதில் கவனஞ்செலுத்துவார்கள். மாலையில் காத்தான்குடிக்கு வந்து மஃரிபுத் தொழுகைக்கு அல்லது மஃரிபுத் தொழுகையை முடித்துவிட்டு ஜாமிஅதுல் பலாஹுக்கு வருவார்கள். அங்கிருந்தே தனது பொதுப்பணிகளை மேற் கொள்வார்கள்.

ஜாமிஅதுல் பலாஹின் உப தலைவராகப் பதவி வகித்தார்கள். அதற்குப் பணி செய்வதைப் பெரும் பேறாகக் கருதினார்கள். “சந்தர்ப்பம் வரும் போது சமூகப் பணிகள் அனைத்திலிருந்தும் ஒதுங்கிக்கொள்வேன். ஆனால் எனது இறுதி மூச்சுவரை ஜாமிஅதுல் பலாஹுக்கும், மெத்தைப் பள்ளிவாயலுக்கும் பணி செய்து கொண்டே இருப்பேன்.” என்று அடிக்கடி கூறிக் கொள்வார்கள்.

மார்க்கப் பிரச்சினை, பயங்கரவாதக் கலவரங்கள் நிலவிய நெருக்கடியான கால கட்டங்களில் தினமும் ஜாமிஅதுல் பலாஹில் அதிக நேரத்தைச் செலவிடுவார்கள். கடிதங்கள், அறிக்கைகள் தயாரிப்பார்கள். ஆலோசனைக் கூட்டங்களை நடத்துவார்கள். முக்கிய பிரமுகர்கள், அதிகாரிகள், படைத் தரப்பினர் போன்றோருடனான சந்திப்புக்களை நடத்துவார்கள். **06.03.1988** இல் ஜாமிஅதுல் பலாஹில் மிக முக்கியமான பரபரப்பான ஒரு கூட்டத்தை நடத்திவிட்டு வீட்டுக்குச் செல்லும்போதுதான் வீதியில் சுட்டு ஷஹீதாக்கப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஜாமிஆவில் தமது பொதுப்பணிகள் தொடர்பான அலுவல்களில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாலும், ஜாமிஆவின் அன்றாட நடவடிக்கைகள் பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்வார்கள். அதன் நிருவாகமும், செயற்பாடுகளும் செம்மையாக நடைபெறும் வண்ணம் மிகவும் அவதானமாகக் கவனிப்பார்கள். அறிவும், அனுபவமும் மிக்க விரிவுரையாளர்களை நியமிப்பதில் மிகவும் கவனஞ் செலுத்தினார்கள். அதன் அதிபர் சங்கைக்குரிய 'ஷைகுல் பலாஹ் அவர்களைப் பெரிதும் மதித்தார்கள். அவர்களது நலனில் மிகவும் அக்கறை கொண்டு அவர்களுக்கான சகல வசதிகளையும் செய்து கொடுத்தார்கள். இங்கு தரமான உலமாக்களையும், திறமையான ஹாபிழ்களையும் உருவாக்க வேண்டுமென்ற நோக்குடன் செயற்பட்டார்கள்.

பெண்களின் மார்க்கக் கல்வி வளர்ச்சியில் அதிகம் அக்கறை கொண்ட அஷ்ஷஹீத் அவர்கள், காத்தான்குடி சித்தீக்கியா மகளிர் அறபுக் கல்லூரியை ஆரம்பித்து அதன் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டார்கள்.

காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமாவின் செயற்பாடுகளுக்கு மிகவும் ஊக்கங்கொடுத்தார்கள். மார்க்கப் பிரச்சினையின் போது ஜம்இய்யதுல் உலமாவுக்குப் பக்க பலமாக நின்று செயற்பட்டார்கள்.

காத்தான்குடியில் முன்னர் இரண்டு பள்ளிவாயல்களிலேயே ஜும்ஆ குத்பா நடைபெற்றது. ஒன்று முஹ்யித்தீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப் பள்ளிவாயல். மற்றது ஜாமிஉழ் ழாபிரீன் ஜும்ஆப் பள்ளிவாயல்.

இந்நிலையில் காத்தான்குடி முதலாங் குறிச்சி பள்ளிவாசல் பகுதியில் ஷாதுலிய்யாத் தரீக்காவைச் சார்ந்தோர் அதிகமாக வாழ்ந்தனர். அவர்களின் கலீபாவாக மர்ஹூம் சகாப்தீன் ஆலிம் இருந்தார். இவர் மெத்தைப் பள்ளிவாயல் மஹல்லாவில் வசித்து வந்தார்.

இவர் மரணித்த போது முதலாங் குறிச்சிப் பள்ளியில் ஜனாஸாத் தொழுவித்து அப்பகுதியில் அவரை நல்லடக்கம் செய்ய வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரினர். அவர் மெத்தைப் பள்ளி மஹல்லாவில் வசித்ததால் அப்பள்ளியில் தொழுவித்து அம்மஹல்லாவில் நல்லடக்கம் செய்ய வேண்டுமென்று இவர்கள் கோரினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்போது ஜும்ஆப் பள்ளிவாயலில் ஜனாஸாத் தொழுவிப்பதுதான் ஏற்றமானது எனக்கூறி மெத்தைப் பள்ளியில் தொழுவிக்கப்பட்டு அடக்கஞ் செய்யப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த 1ம் குறிச்சிப் பகுதியினர் 1ம் குறிச்சியிலும் ஜும்ஆக் குத்பாவை ஆரம்பித்தனர். இதனால் ஒரே நாளில் இரண்டு ஜும்ஆக்கள் நடைபெற்றன. இது சுமார் 22 வருடங்களாக இடம்பெற்றது. இதனால் காத்தான்குடியில் அடிக்கடி முரண்பாடுகளும் பிளவுகளும் ஏற்பட்டன.

இப்பிரச்சினையைத் தீர்த்து ஒற்றுமைப்படுத்த வேண்டுமென்று அஷ்ஷஹீத் அவர்கள் கடுமையாக முயற்சித்தார்கள். அவர்கள் பட்டின ஆட்சிமன்றத் தலைவராக இருக்கும் போது மூன்று பள்ளி நிருவாகிகளையும் சேர்த்து ஆலோசனை செய்து ஒற்றுமைப்படுத்தி மூன்று பள்ளிவாயல்களிலும் முறை வண்ணமாக ஜும்ஆ குத்பா நடைபெற ஏற்பாடு செய்தார்கள். மர்ஹூம் சட்டத்தரணி எம்.எச்.எம்.அஷ்ரப் முன்னிலையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு பிரச்சினை சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

அஷ்ஷஹீத் அவர்களது பாரிய முயற்சியாலேயே இப்பிரச்சினை முடிவுக்கு வந்தது.

பள்ளிவாயல்களை மையமாகக்கொண்டுதான் ஊரின் சகல விவகாரங்களும் செயற்படுத்தப்பட வேண்டும் என்பது அஷ்ஷஹீத் அவர்களின் எண்ணம். எனவேதான் பள்ளிவாயல்கள் அனைத்தையும் இணைத்து, சமூக, சமய நிறுவனங்களையும் சேர்த்து சம்மேளனத்தைத் தோற்றுவித்தார்கள். சகல பள்ளிவாயல்களும் ஒரே குடையின் கீழ் ஒற்றுமையாகச் செயற்படுவதற்கு இம்முயற்சியே வழிவகுத்தது.

முதலாங்குறிச்சி மஸ்ஜிதுல் மீரா ஜும்ஆப் பள்ளிவாயலைப் புதுப்பித்துக் கட்டும் பணியில் பெரும் பங்கு வகித்தார்கள். காத்தான்குடி 4ஆம் குறிச்சியில் அமைந்துள்ள முஹ்யித்தீன் தைக்காப் பள்ளிவாயல் அடிக்கடி பல நெருக்கடிகளைச் சந்தித்தது. அவ்வப்போது அதன் நிருவாகிகளாக இருந்தவர்கள் வக்பு சபையினதும் நீதி மன்றத்தினதும் விசாரணைகளுக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அத்தகைய நெருக்கடி நிலைகளின் போதெல்லாம் அஷ்ஷஹீத் அவர்கள் இப்பள்ளிவாயலுக்குப் பல உதவிகளைச் செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தான்குடி அநாதை இல்லத்தைத் தோற்றுவிப்பதில் பெரும் பங்கு வகித்து, அது திறம்பட இயங்குவதற்குத் திட்டங்கள் பல தீட்டிச் செயற்பட்டார்கள்.

காத்தான்குடிப் பிரதேசத்தில் ஸகாத் விநியோகத்தை சீரமைக்க வேண்டுமென்ற கருத்து உலமாக்களாலும், முக்கியஸ்தர்களாலும் **1982**ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்டது. குறிப்பிட்ட சிலர் அஷ்ஷஹீத் அவர்களிடம் இக்கருத்தைத் தெரிவித்த போது அவர்களும் அதற்கு உடன்பட்டார்கள். இது தொடர்பாக அஷ்ஷஹீத் அவர்களது தலைமையில் பல ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. வீடுகளில் சனங்களை அடைத்து வைத்து அவர்களை வருத்தி ஸகாத் பணம் கொடுக்கப்படும் வழக்கம் மாற்றப்பட்டு, **1982** ஆம் ஆண்டு றமழான் மாதத்தில் இரு தினங்களில் மெத்தைப் பள்ளியில் ஆண்களுக்கு ஒரு தினத்திலும், பெண்களுக்கு ஒரு தினத்திலுமாக ஸகாத் பணம் விநியோகிக்கப்பட்டது. இந்த ஏற்பாடு அஷ்ஷஹீத் அவர்களது தலைமையிலே நடைபெற்றது. செல்வந்தர்களிடமிருந்து ஸகாத் நிதி சேகரிக்கும் பணியில் அஷ்ஷஹீத் அவர்கள் பங்குகொண்டு செல்வந்தர்களின் வீடுகளுக்கெல்லாம் சென்று நிதி சேகரித்தார்கள்.

இம் முயற்சி சம்மேளனத்தால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு இன்று மிகப் பெரிய வளர்ச்சி கண்டுள்ளது. இதற்கு முக்கிய காரண கர்த்தாவாக அஷ்ஷஹீத் அவர்கள் விளங்குகிறார்கள்.

**1982** ஆம் ஆண்டிலேயே கூட்டு உழ்ஹிய்யாத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. சங்கைக்குரிய ஷைகுல் பலாஹ் அவர்கள் இதனை ஆரம்பித்து வைத்தார்கள். அஷ்ஷஹீத் அவர்கள் இத்திட்டத்தை வரவேற்று ஊக்குவித்து வந்தார்கள். இதுவும் இன்றுவரை சம்மேளன ஏற்பாட்டில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

குர்ஆன் மத்ரஸாக்களின் செயற்பாட்டைச் சீராக்கவேண்டுமென்பதில் அஷ்ஷஹீத் அவர்கள் அதிக கவனஞ்செலுத்தினார்கள். அவர்களது ஆலோசனையின் பேரில் குர்ஆன் மத்ரஸாக்கள் புனரமைப்புச் சபை நிறுவப்பட்டது. இதன்மூலம் எல்லா மத்ரஸாக்களுக்கும் பொதுவான பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. கற்பித்தல் முறை சீரமைக்கப்பட்டது. பொதுப் பரீட்சை நடத்தப்பட்டது. பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டனர். முஅல்லிம்களுக்கான பயிற்சி வகுப்புக்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன. இலங்கையில் வேறெங்கும் இல்லாதவாறு காத்தான்குடியிலேயே இந்நடைமுறை முதன்முதல் மேற்கொள்ளப்பட்டது. அஷ்ஷஹீத் அவர்களது பங்களிப்பு இப்பணியில் மிகக்கூடுதலாக இருந்தது. இன்று குர்ஆன் மத்ரஸாக்கள் அபிவிருத்திச் சபை தனியான ஒரு குழுவின் நிருவாகத்தில் மிகச் சிறப்பாகச் செயற்படுகிறது.

புனித றமழான் மாதத்தின் இறுதி வெள்ளிக் கிழமையில் சர்வதேச ரீதியில் 'குத்ஸ் தினம்' அனுஷ்டிக்கப்படுகிறது. முஸ்லிம்களின் புனிதத் தலமான பைத்துல் முகத்தஸை அன்னியரிடமிருந்து மீட்பதற்கான பிரார்த்தனைகள் இத்தினத்தில் புரியப்பட்டு விஷேட நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. ஒருமுறை இத்தினத்தையொட்டிய நிகழ்ச்சிகளைக் காத்தான்குடியில் நடத்துவது பற்றிய ஆலோசனைக் கூட்டம் அஷ்ஷஹீத் தலைமையில் ஜாமிஅதுல் பலாஹில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பைத்துல் முகத்தஸ் தொடர்பான வரலாறுகளை அவர்கள் விரிவாகக் கூறினார்கள். "பைத்துல் முகத்தஸ்" விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் வீரர்களின் தியாகம் பற்றியும், அவர்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் பற்றியும் கூறிக்கொண்டிருந்த அவர்கள் கண்ணீர் சிந்தி அழத் தொடங்கிவிட்டார்கள்.

அஷ்ஷஹீத் அவர்கள் புனித தப்லீஃ பணியிலும் ஈடுபாடு காட்டினார்கள். அவர்கள் தமது நண்பர்களுடன் முடியுமான அளவு அப்பணியில் பங்குகொண்டார்கள். ஜுமைறாத் நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டிருக்கிறார்கள். ஜாமிஅதுல் பலாஹில் பயின்றுமுடித்து வெளியேறும் மௌலவிகள் நான்குமாத காலம் தப்லீஃ பணியில் ஈடுபடவேண்டுமென்று திட்டம் வகுத்துச் செயற்படுத்தினார்கள்.

காத்தான்குடியின் அயற் கிராமங்களிலுள்ள பள்ளிவாயல்கள், குர்ஆன் மத்ரஸாக்களிற் கவனஞ்செலுத்தி அவற்றின் சிறப்பான செயற்பாட்டுக்கு வழிவகைகள் வகுத்துக் கொடுத்தார்கள்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் முஸ்லிம் கைதிகளின் நலன்பேணவும் அவர்களுக்கு சமய போதனைகள் வழங்கவும் ஏற்பாடு செய்தார்கள்.

காத்தான்குடிப் பிரதேசத்தில் குடும்பக் கட்டுப்பாடு தொடர்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, குடும்பக் கட்டுப்பாட்டுச் சங்கம் அமைக்கச் சிலர் முனைந்த போது அஷ்ஷஹீத் அவர்கள் அதற்கு உடன்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பக் கட்டுப்பாட்டை இஸ்லாம் அனுமதிக்கவில்லை என்பதை வலியுறுத்திக்கூறி இம்முயற்சியைத் தடுத்தார்கள். இஸ்லாம் குடும்ப ஒழுங்கு பேணுவதைத் தடைசெய்யவில்லை என்பதால், குடும்ப சுகநலன் பேணும் அமைப்பு என்ற ரீதியில் இஸ்லாமிய வரம்பினுள் நின்று குடும்ப ஒழுங்கு பற்றிய சிந்தனையை மக்களுக்கு வழங்கினார்கள்.

காத்தான்குடியில் நீண்டகாலம் நிலவிய மார்க்கப் பிரச்சினையிலும் அஷ்ஷஹீத் அவர்கள் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார்கள். அப்பிரச்சினையை மிக நுணுக்கமாக அணுகி அது தொடர்பாக ஊரில் நிலவிய முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதில் கூடிய கவனஞ்செலுத்தினார்கள்.

சமூக விவகாரங்களில் மிகவும் கவனஞ்செலுத்திய அவர்கள் அவ்வேளைகளில் ஈமானுடன் தொடர்புபட்ட இந்த மார்க்க விடயம் சம்பந்தப்பட்டபோது மார்க்கத்திற்கே முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

புலிப் பயங்கரவாதிகளது நெருக்கடிகள் காத்தான்குடியை நசுக்கிய வேளைகளிலும், இந்த மார்க்கப் பிரச்சினையைக் கவனித்தே கருமமாற்றினார்கள். பயங்கரவாதக் கலவரம், தலைபோகும் நெருக்கடிகள் என்பதற்காக மார்க்கத்தை விட்டுக் கொடுக்க அவர்கள் ஒருபோதும் முற்பட்டதில்லை.


இஸ்லாமிய விழாக்கள் வைபவங்களிலெல்லாம் சிறப்புச் பேச்சாளராகக் கலந்து கொண்டு இஸ்லாம் சம்பந்தமாக சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். அவர்கள் கூறும் கருத்துக்களும் விளக்கங்களும் அவர்களிடமிருந்த இஸ்லாமிய அறிவின் ஆழத்தை உணர்த்தி நின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தினபதி வாசகர் மன்றத்தால் நடாத்தப்பட்ட கல்பந்தாட்டப் போட்டியின் போது இடம்பெற்ற பரிசளிப்பு வைபவத்தில்.



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இராஜன் செல்வநாயகம் அவர்களுக்கு காத்தான்குடியில் அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரத்தில் நமது தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*1982*இல் திருமதி சிறீமாவோ பண்டார நாயக்கா அவர்கள் மட்டக்களப்புக்கு வருகை தந்தபோது நமது தலைவர் அவர்களை வரவேற்கிறார்கள்



முன்னாள் பிரதமர் திருமதி சிறீமாவோ பண்டார நாயக்கா அவர்களை மட்டக்களப்பு விமானநிலையத்தில் நமது தலைவர் வரவேற்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப்பணி

அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை அவர்கள் சிறந்த ஒரு கல்விமான். நல்ல சிந்தனையாளர். சகல விடயங்களையும் அறிவு பூர்வமாக அணுகுபவர். சிறுவயதிலேயே அறிவும், ஆற்றலும் வாய்க்கப்பெற்றவர்.

தற்போதுள்ள அல்ஹிறா மகா வித்தியாலயம் அப்போது ஐந்தாங் குறிச்சி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை என்று அழைக்கப்பட்டது. அதில்தான் அஷ்ஷஹீத் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றார்கள். அங்கு ஐந்தாம் வகுப்பு வரைதான் இருந்தது. அதற்கு மேற்பட்ட வகுப்புக்கள் அப்போது காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்தன. எனவே அஷ்ஷஹீத் அவர்கள் 1948ஆம் ஆண்டு அவ்வித்தியாலயத்தில் ஆறாம் வகுப்பில் சேர்ந்தார்கள். அங்கு மதியூகமும், சுறுசுறுப்புமுள்ள மாணவனாக அஷ்ஷஹீத் அவர்கள் திகழ்ந்தார்கள். எல்லா ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் ஈர்க்கப்பட்டார்கள். பள்ளிப் பருவத்திலேயே சமூக சிந்தனையாளராகக் காணப்பட்டார்கள். எப்போதும் நூல்களை வாசித்துக் கொண்டிருப்பார்கள். அறிவு நூல்களுடனும் பத்திரிகைகளுடனும் பாடசாலைக்கு வருவார்கள்.

மாணவர் மன்றக் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார்கள். அக்கூட்டங்களில் உணர்ச்சி ததும்ப உரையாற்றுவார்கள். அரசியல் விடயங்களில் அதிக அக்கறை காட்டுவார்கள் அரசியல் பற்றியே அதிகம் கதைத்துக் கொண்டிருப்பார்கள். இதனால் பாடசாலையில் மாணவர்களெல்லாம் இவரை “அரசியல்வாதி அகமது லெப்பை” என்று அழைத்தார்கள்.

ஆங்கில மொழியில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார்கள். ஆங்கில மொழி மூலமே கல்வி கற்றார்கள். ஆங்கிலத்திலேயே எஸ்.எஸ்.ஸீ. பரீட்சை எழுதி அதில் திறமையாகச் சித்தி பெற்றார்கள். அதனால் அரச அலுவலகமொன்றில் எழுது வினைஞராகப் பதவி வகிக்கும் வாய்ப்பைப் பெற்றார்கள்.

இவ்வாறு இளமையிலேயே கல்வி, கேள்விகளிற் சிறந்து விளங்கியதால் இயற்கையாகவே அவர்களுக்குக் கல்விப் பணியில் மிகுந்த ஆர்வம் இருந்தது. எனவே தனது அரசியல், சமய சமூகப் பணிகளோடு கல்விப் பணியிலும் ஆர்வத்தோடு ஈடுபட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்குக் காலம் பதவியிலிருந்த அரசியல் தலைவர்களுடன் இணைந்து காத்தான்குடி கல்வி அபிவிருத்திக்குப் பெருந் தொண்டாற்றினார்கள். புதிதாகப் பல பாடசாலைகளைத் தோற்றுவித்தார்கள். பாடசாலைகளுக்கு ஆசிரியர்களையும், கட்டிட, தளபாட வசதிகளையும் பெற்றுக் கொடுத்தார்கள்.

காத்தான்குடி மாணவர்கள் முன்னர் க.பொ.த. சாதாரண, உயர்தரப் பரீட்சைகள் எழுதுவதற்கு காத்தான்குடிக்கு வெளியே உள்ள பரீட்சை நிலையங்களுக்கே செல்லவேண்டி இருந்தது. இதனால் மாணவர்கள் அடையும் சிரமங்களை உணர்ந்த அஷ்ஷஹீத் அவர்கள் அப்பரீட்சை நிலையங்களை காத்தான்குடியில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள்.

1977ம் ஆண்டில் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அப்போது கல்வி அமைச்சராக இருந்த மர்ஹூம் கலாநிதி பதிஉத்தீன் மஹ்மூத் அவர்களை மட்டக்களப்புக்கு அழைத்து வந்தார்கள். அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கலாநிதி பதிஉத்தீன் மஹ்மூத் அவர்கள் மூலம் நூற்றுக் கணக்கானவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கச் செய்தார்கள். வேறுபல தொழில் வாய்ப்புக்களையும் இளைஞர்களுக்குப் பெற்றுக் கொடுத்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கலாநிதி பதிஉத்தீன் மூலம் காத்தான்குடியைத் தனியான ஒரு கல்வி வட்டாரமாகப் பிரித்துக் கொடுத்தார்கள். அப்போது காத்தான்குடி வட்டாரக் கல்வி அதிகாரியாக அல்ஹாஜ் எம்.ஐ.சின்ன லெப்பை பி.ஏ. நியமிக்கப்பட்டார்கள்.

ஜாமிஆ நளீமிய்யாவின் சிற்பி கல்வித் தந்தை மர்ஹூம் நளீம் ஹாஜியார் அவர்கள் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தை நிறுவி, தேசிய ரீதியில் கல்விப் பணி செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுடன் நெருங்கிய தொடர்பை வைத்திருந்த அஷ்ஷஹீத் அவர்கள் நளீம் ஹாஜியாரின் உதவியுடன் காத்தான்குடியில் பல கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். வறிய மாணவர்களுக்கு நிதியுதவிகளைப் பெற்றுக் கொடுத்தார்கள்.

காத்தான்குடி முதலாங் குறிச்சியைச் சேர்ந்த ஜனாப் மீராசாகிபு அவர்கள் அப்போது கல்வியில் தேர்ச்சிமிக்க ஒருவராக இருந்தார். பொறியியற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையில் உயர் கல்வி பெறுவதற்கு ஜப்பான் செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அவர் வறிய குடும்பத்தினராக இருந்ததால் அதற்கான பொருளாதார வசதி இல்லாதவராக இருந்தார். இவ்விடயம் அஷ்ஷஹீத் அவர்களது கவனத்துக்கு வந்தது. ஜனாப் மீராசாகிப் அவர்களை உயர்கல்விக்காக ஜப்பானுக்கு அனுப்புவதற்குரிய உதவிகளை அஷ்ஷஹீத் அவர்கள் பலரது ஒத்துழைப்புடன் செய்து கொடுத்தார்கள். ஜனாப் மீராசாகிபு அவர்கள் தனது படிப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்தார்கள். பொறியியலாளராகப் பட்டம் பெற்று கனடா, சவூதி அரேபியா போன்ற நாடுகளில் பணியாற்றினார்கள். தற்போதும் வெளிநாட்டிலேயே வசிக்கிறார்கள்.

நன்றியுணர்வுள்ள மீராசாகிபு அவர்கள் வெளிநாடுகளிலுள்ள தனது நண்பர்களுடன் சேர்ந்து நிதியைத் திரட்டி காத்தான்குடிப் பகுதி வறிய மாணவர்களது கல்விக்காக உதவி செய்து கொண்டிருந்தார்கள். இந்த நிதியுதவியை உரியவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் ஏற்பாடுகளை அஷ்ஷஹீத் அவர்களே கவனித்தார்கள். இதற்காக ஜாமிஅதுல் பலாஹில் ஒரு குழுவினரை நியமித்து அதன் அதிபர் சங்கைக்குரிய ஷைகுல்பலாஹ் அவர்களின் மேற்பார்வையில் அந்நிதியை விநியோகிக்க ஏற்பாடுகள் செய்தார்கள்.

ஜனாப் மீராசாகிபு அவர்களைப் போல வேறுசில மாணவர்களும் வெளிநாடுகளில் உயர்கல்வி பெற உதவிகள் பெற்றுக் கொடுத்தார்கள். அவர்களில் ரஷ்யாவில் கல்வி கற்று வைத்தியக் கலாநிதிப் பட்டம் பெற்ற டாக்டர் நஸீர்தீன், வெளிநாடுகளில் இலங்கையின் தூதுவராகக் கடமையாற்றிய ஜனாப் எம்.எம். மஹ்ரூப் எஸ்.எல்.ஓ.எஸ். ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

பாலர்கல்வியின் தந்தை என்றுகூட அஷ்ஷஹீத் அவர்களைக் குறிப்பிடலாம். காத்தான்குடியில் முதன்முதலில் பாலர் பாடசாலையை அமைத்தவர் அஷ்ஷஹீத் அவர்கள்தான். அஷ்ஷஹீதின் தூண்டுதலால் அவரது நண்பர் டாக்டர் மர்ஹூம் யூ.ஏ. றஹ்மான் அவர்களது மேற்பார்வையில் காத்தான்குடி பிரதான வீதியில் இப்பாலர் பாடசாலை இயங்கி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வீட்டுக்குப் பக்கத்திலுள்ள கிழ்றிய்யா வித்தியாலயத்தின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டினார். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராகப் பணி செய்தார். போதிய ஆசிரியர்களையும், பௌதீக வளங்களையும் பெற்றுக் கொடுத்தார். கட்டிடங்களை அமைத்தல், நில வளத்தை ஏற்படுத்தல் போன்றவற்றையும் கவனித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துள்ளித்திரியும் பருவத்தில் நமது தலைவர்



ஏழைகளுக்கான இலவச உணவுப் பங்கீட்டில் எமது தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அல்ஹாஜ் எம் எம் எம் மஹ்றூப் கரீம் அவர்களின் நூல் வெளியீட்டு விழா காத்தான்குடியில் அஷ்ஷஹீத் அஹமது லெவ்பை ஹாஜியார் அவர்களது தலைமையின் நடை பெற்றபோது முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட கல்விப் பணிப்பளார் ஜனாப் AMA. மஜீத் அவர்கள் சட்டத்தரணி அல்ஹாஜ் AL. அப்துல் ஜவாத் B.A. LLB அவர்களுக்கு நூலின் பிரதியொன்றை வழங்குவதையும், இந்நிகழ்வில் மட்டக்களப்பு தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. வி . த. குமாரசாமி அதிபர் அவர்கள் உரை நிகழ்த்துவதையும் கவிஞர் திலகம் மர்ஹூம் அப்துல் காதர் லெவ்வை, நூலாசிரியர் எம் எம் எம் மஹ்றூப் கரீம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய ஈடுபாடு

அஷ்ஷஹீத் அல்ஹாஜ் அஹ்மத் லெப்பை அவர்கள் அரசியல், சமூகப் பணிகளில் இரவு பகலாக ஈடுபட்டிருந்த போதிலும் சமய, கல்விச் சேவைகளிலும் கவனங் செலுத்தினார்கள். இலக்கியத் துறையையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டிருந்த அவர்கள் அது தொடர்பான பணிகளிலும் காற்பதித்திருந்தார்கள்.

பாடசாலைக் காலத்திலேயே அவர்கள் இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள். பாடசாலையில் மாணவர் மன்றக் கூட்டங்களில் இலக்கியச் சுவைபட உரையாற்றியுள்ளார்கள். பாடசாலைக்கு வெளியே தமது நண்பர்களைச் சேர்த்து சனசமூக நிலையம் ஒன்றை நடத்தினார்கள். அவர்களது வீட்டுக்குப் பக்கத்திலிருந்த ஒரு முதிய பெண்மணியின் வீட்டில் மாணவர் சங்கத்தை நடத்தினார்கள். மாணவர் சங்கத்தின் மூலமும், சனசமூக நிலையத்தின் மூலமும் கல்வியுடன் இலக்கிய முயற்சிகளையும் மேற்கொண்டார்கள்.

இந்த சனசமூக நிலையத்தில் வானொலி கேட்கும் வசதி ஏற்படுத்தப்பட்டது. இங்குதான் முதன் முதலாக காத்தான்குடியில் வானொலி வசதி கிடைக்கப்பெற்றது.

சனசமூக நிலையத்தில் தினசரிப் பத்திரிகைகளும் வாசிப்பதற்கு வசதி செய்யப்பட்டது. அஷ்ஷஹீத் அவர்கள் தமது இலக்கியத்தாகம் காரணமாக இந்தியாவிலிருந்து வெளிவந்த தாறுல் இஸ்லாம், முஸ்லிம் முரசு, மணிவிளக்கு போன்ற சஞ்சிகைகளையும் தொடராகப் பெற்று சனசமூக நிலையத்தில் வாசிக்க வழி செய்தார்கள்.

காத்தான்குடியைச் சேர்ந்தவரும், தற்போது வெலிகமவில் வசிப்பவருமான பிரபல முறிவு வைத்தியர் - இலக்கியவாதி ஜனாப் ஏ.பி. அப்துர் ரஹ்மான் அவர்களால் எழுதப்பட்ட "மலர்ந்த வாழ்வு" எனும் நாடகத்தில் பிரதான பாத்திரம் ஏற்று அஷ்ஷஹீத் அவர்கள் நடித்தார்கள்.

மட்டக்களப்பில் இளம்பிறை அச்சகத்தை நடத்தினார்கள். அப்போது காத்தான்குடியில் அச்சகங்கள் இல்லாத நிலையில் தனது இலக்கிய உணர்வினாலேயே துணிந்து அச்சகத்தைத் தொடங்கினார்கள். இந்த அச்சகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் இருந்ததால் முஸ்லிம்கள் மட்டுமல்ல தமிழ் மக்களும் தமது அச்சுத் தேவைகளை இங்கு நிறைவேற்றிக் கொண்டார்கள்.

காத்தான்குடியைச் சேர்ந்த பலரது நூல்கள் இங்கு அச்சிடப்பட்டன. ஜாமிஅதுல் பலாஹ் அறபுக் கல்லூரியின் இருபதாண்டுப் பூர்த்தி சிறப்புமலரான "நூறுல் பலாஹ்" அஷ்ஷஹீத் அவர்களது கடும் உழைப்பினால் இளம்பிறை அச்சகத்தில் அச்சிடப்பட்டது. வேறுபல நூல்களும் அஷ்ஷஹீத் அவர்களது மேற்பார்வையில் இந்த அச்சகத்திலேயே அச்சிடப்பட்டன.

அஷ்ஷஹீத் அவர்கள் காத்தான்குடி பட்டின ஆட்சி மன்றத் தலைவராகப் பதவி வகித்த காலத்தில் காத்தான்குடி பொதுநூலகம் மிகச் சிறப்பாகச் செயற்பட்டது. காத்தான்குடி இலக்கிய வாதிகளுக்கு அவர்களது இலக்கிய முயற்சிகளுக்குத் துணை நல்கும் சிறந்த ஒரு களமாக இப்பொது நூலகம் அமைந்தது. அப்பொழுது காத்தான்குடியிலிருந்து பல கையெழுத்துப் பத்திரிகைகள் வெளிவந்தன. அவை பொது நூலகத்தில் வாசிப்பதற்கு வைக்கப்பட்டிருந்தன.

அஷ்ஷஹீத் அவர்களது காலத்தில் பொதுநூலக ஆலோசனை சபை ஒன்று செயற்பட்டது. அதன் மேற்பார்வையில் பொது நூலகம் சகல வசதிகளையும் கொண்டு இயங்கியது. கொழும்பு பொது நூலகஉயர் அதிகாரியாக இருந்த அல்ஹாஜ் எஸ்.எம்.கமால்தீன் அவர்களை இங்கு வரவழைத்து காத்தான்குடிப் பொது நூலகத்தைக் காண்பித்து அவர்களது ஆலோசனையைப் பெற்று அஷ்ஷஹீத் அவர்கள் நூலகத்தை அபிவிருத்தி செய்தார்கள்.

காத்தான்குடி வரலாறு நூலாக்கப்பட வேண்டும் என்பதிலே அஷ்ஷஹீத் அவர்கள் அதிக ஆர்வங் காட்டினார்கள். இதற்கான ஆலோசனைக் கூட்டங்களை ஜாமிஅதுல் பலாஹில் நடத்தினார்கள். காத்தான்குடி வராலாற்றை மட்டுமல்ல, இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வரலாறு, இலங்கை அறபுக் கல்லூரிகளின் வரலாறு, ஜாமிஅதுல் பலாஹ் வரலாறு ஆகியனவும் எழுதப்பட்டு நூலாக்கப்படவேண்டுமென்று அஷ்ஷஹீத் அவர்கள் விரும்பினார்கள். அதன் பேரில் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு சட்டத்தரணி அல்ஹாஜ் ஏ.எல்.அப்துல் ஜவாத் பி.ஏ அவர்களாலும், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வரலாறு ஓய்வு நிலைக் கல்வி அதிகாரி அல்ஹாஜ் எம்.எச்.ஏ.எம். இஸ்மாயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களாலும் காத்தான்குடி வரலாறு பன்னூலாசிரியர் அல்ஹாஜ் எம்.எம்.எம்.மஹ்ரூப் கரீம் எம்.ஏ அவர்களாலும், இலங்கை அறபுக் கல்லூரிகளின் வரலாறு மௌலவி எம்.எச்.எம்.புஹாரி பலாஹி அவர்களாலும், ஜாமிஅதுல் பலாஹ் வரலாறு கவிஞர் எம்.எஸ்.எஸ்.ஹமீத் (மருதமைந்தன்) அவர்களாலும் எழுதப்பட்டன. இவை அஷ்ஷஹீத் அவர்கள் உயிருடன் இருக்கும் பொழுதே தட்டச்சில் தொகுக்கப்பட்டுவிட்டன. பெறுமதி மிக்க இந்த ஐந்து வரலாறுகளும் அடங்கிய பாரிய நூலை பஜ்ருல் பலாஹ் எனும் பெயரில் வெளியிடுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே அஷ்ஷஹீத் அவர்களது மரணம் நிகழ்ந்தது. அதனால் இம்முயற்சி தடைப்பட்டுவிட்டது.

அஷ்ஷஹீத் அவர்களது முயற்சியாலும், ஊக்குவிப்பாலும் காத்தான்குடி அறிஞர்களது நூல்கள் பல வெளியிடப்பட்டன. வெளியீட்டு விழாக்கள் பெரும்பாலும் ஜாமிஅதுல் பலாஹில் அஷ்ஷஹீத் அவர்களது பங்குபற்றுதலுடன் நடைபெற்றன.

அஷ்ஷஹீத் அவர்களது ஏற்பாட்டில் மீலாத் விழாக்கள் காத்தான்குடியிலும், மட்டக்களப்பிலும் நடத்தப்பட்டன. இவ்விழாக்கள் இஸ்லாமிய சமய விழாக்களாக மட்டுமில்லாமல் இலக்கிய விழாக்களாகவும் காட்சியளித்தன. ஏனெனில் இலங்கையிலும், இந்தியாவிலும் புகழ் பூத்து விளங்கிய பல இலக்கியவாதிகள் இவ்விழாக்களில் பிரதம பேச்சாளர்களாகக் கலந்து கொண்டு இலக்கிய நடையில் சொற்பெருக்காற்றினர். இந்தியாவைச் சேர்ந்த 'சொற்கொண்டல்' சீ.கஸ்ஸாலி, இறையருட் கவிமணி பேராசிரியர் கா.அப்துல் கபூர், பெருங் கவிஞர் கா.முகம்மது பாரூக், இந்தியப் பேரறிஞர் அப்துல் வஹாப் ஸாஹிப், மணிமொழி மௌலானா கலீலூர் றஹ்மான் ஹஸ்ரத் போன்றவர்களும் இப்பேச்சாளர்களிற் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களது இன்சுவை இலக்கியப் பேருரைகளைக் கேட்ட பலர் நமது பகுதியில் பேச்சாளர்களாக உருவானார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கையில் நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமிய இலக்கிய மாநாடுகளில் அஷ்ஷஹீத் அவர்கள் கலந்துகொண்டார்கள். தமது பொதுப் பணிகள், அரசியற் செய்பாடுகளுக்கு மத்தியிலும் கொழும்பில் பல தினங்கள் நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமிய இலக்கிய மாநாட்டில் "இஸ்லாமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் எனப்படுவது யாது?" என்ற மகுடத்தில் இடம்பெற்ற ஓர் ஆய்வரங்கில் பங்குகொண்டு, "இஸ்லாமிய கொள்கைக்கு விரோதமான இலக்கியங்கள் முஸ்லிம்களால் படைக்கப்பட்டாலும் அவை இஸ்லாமிய இலக்கியங்களாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது" என்று உரத்துக் குரல் கொடுத்தார்கள். இக்கருத்தை அம்மாநாடு ஏற்றுக் கொண்டு ஒரு தீர்மானமாக நிறைவேற்றியது.

அழகு தமிழில் அறிவு பூர்வமான கருத்துக்களைப் பேசும் சிறந்த பேச்சாளரான அஷ்ஷஹீத் அவர்கள் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கினார்கள். அவ்வப்போது பத்திரிகைகளில் உணர்ச்சி ததும்பும் கட்டுரைகளை எழுதினார்கள். அவற்றில் தொலைக்காட்சியினால் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்படும் தாக்கம் (29.11.1982 – தினகரன்), மத்திய கிழக்குத் தொழிலுக்காக உலமாக்கள் வெளியேற்றம்................ தீனின் பணிகளை மேற்கொள்ள ஆளில்லாத ஆபத்து உருவாகிறது (தினகரன் - ஆலமுல் இஸ்லாம்), முஸ்லிம்களின் சமூக அபிவிருத்தியும், அரபு நாடுகளின் உதவியும் (15.01.1982 – தினகரன்), வெளிநாட்டில் வேலை பெற்றுச் செல்லும் முஸ்லிம் பெண்கள் (30.11.1982 – தினகரன்), முஸ்லிம் சமூகத்தினருக்குப் பிரச்சினைகள் இல்லையா?(13.11.1982 – தினபதி) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இக்கட்டுரைகள் அஷ்ஷஹீத் அவர்களது எழுத்தாற்றலுக்கும், சமூக உணர்வுக்கும் தகுந்த சான்றுகளாகும்.

காத்தான்குடிக் கவிஞர் அப்துல் காதர் லெப்பை அவர்களையும், அவரது புதல்வர் கலாநிதி ஏ.ஸீ.எல்.அமீர் அலி அவர்களையும் அஷ்ஷஹீத் அவர்கள் பெரிதும் நேசித்தார்கள். கவிஞர் அப்துல் காதர் லெப்பை அவர்களது நூலொன்றைக் காத்தான்குடியில் வெளியிட விரும்பி பொருத்தமான நூலொன்றைத் தெரிவு செய்து தருமாறு அமீர் அலியைக் கேட்டுக் கொண்டார்கள். கவிஞரின் மனைவியும் தனது தாயுமான, பாத்தும்மா அவர்களின் வரலாற்றைக் கூறும் "பாத்தும்மா சரிதை" எனும் கவிதை நூலை அமீர் அலி தெரிவு செய்து கொடுத்தார். ஜாமிஅதுல் பலாஹின் அனுசரணையுடன் அஷ்ஷஹீத் அவர்கள் அந்நூலை வெளியிட ஏற்பாடு செய்தார்கள். அஷ்ஷஹீத் அவர்களது இளம்பிறை அச்சகத்திலேயே அந்நூல் அச்சிடப்பட்டது. அதன் வெளியீட்டு விழா 19.02.1988 இல் காத்தான்குடி பொதுநூலக முன்றலில் - தற்போது ஹிஸ்புல்லாஹ் கலாசார மண்டபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருக்கும் இடத்தில் அஷ்ஷஹீத் அவர்களது தலைமையில் நடைபெற்றது. இவ்விழாதான் அஷ்ஷஹீத் அவர்கள் இறுதியாகக் கலந்து கொண்ட பொது நிகழ்வாகும். இது நடைபெற்று சில தினங்களில் அவர்கள் காலமானார்கள்.

இவ்விழா பற்றி கவிஞர் அப்துல் காதர் லெப்பையின் புதல்வர் கலாநிதி ஏ.ஸீ.எல்.அமீர் அலி அவர்களுக்கு அஷ்ஷஹீத் அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள். அக்கடிதம் அஷ்ஷஹீத் அவர்கள் படுகொலை செய்யப்பட்ட 06.03.1988ல் எழுதப்பட்டது. ஆனால் அக்கடிதத்தில் 07.03.1988 என்று தனது கையால் திகதியிட்டிருந்தார்கள். அத்தினத்தில் அவர்கள் உயிருடனிருக்கவில்லை. அக்கடிதம் வருமாறு:

அன்புள்ள அமீரலி,

அஸ்ஸலாமு அலைக்கும் (வறஹ்)

தங்களின் அருமைத் தாயார் மர்ஹூமா பாத்தும்மா அவர்களின் - தங்கள் தந்தையார் கவிஞர் திலகம் மர்ஹூம் அப்துல் காதர் லெப்பை அவர்களால் இயற்றப்பட்ட சரித்திரக் கவிதை நூலின் பத்துப் பிரதிகளும் பெற்றிருப்பீர்கள்.

இக்கவிதை நூலின் கோலாகலமான — ஆனால் எளிமையான — வெளியீடு காத்தான்குடிப் பொதுநூலக அரங்கில் 19.02.1988ல் முன்னாள் பட்டின சபைத் தலைவர் ஏ. அஹ்மத் லெப்பை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

தங்கள் மாமா ஜனாப் ஏ.எல்.எம். இஸ்மாயில் (முன்னாள் பட்டின ஆட்சிமன்றத் தலைவர்) சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு முதலாவது பிரதியை வெளியிட்டு வைத்தார்கள். அம்முதல் நூலை மெத்தைப் பள்ளிவாயல் பிரதம நம்பிக்கைப் பொறுப்பாளரும், உங்கள் குடும்ப நண்பருமான அல்ஹாஜ் ஆ.ம.அஹ்மத் மீராசாகிபு அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

நூல் ஆய்வரங்கில், 'எண்வரலாறு' நூலாசிரியர் ஜனாப் எம்.எம்.எம். மஹ்ரூப் கரீம், கவிமணி மௌலவி எம்.எச்.எம். புஹாரி (பலாஹீ), மத்திய மகா வித்தியாலய முதல்வர் ஜனாப் எம்.ஐ. சின்ன லெப்பை, ப.நோ.கூ. சங்கத் தலைவர் ஜனாப் ஏ.கே.அபூபக்கர் முதலானோர் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் சாச்சா அப்துல் காதர் அதிபர் அவர்களும் விழாவில் பங்கு கொண்டார்கள்.

நமது பலநூறு இளைய தலைமுறையினருக்கு மறைந்த கவிஞர் அவர்கள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது ஒரு சிறப்பு அம்சமாக அமைந்தது.

நூல் வெளியீட்டு விழா நடைபெற்ற பிற்பகல் வேளை இலக்கிய விருந்து படைக்கப்பட்ட ஓர் இரம்மியப் பொழுதாக அமைந்தது. அல்ஹம்துலில்லாஹ்".

இக்கடிதம் ஜாமிஅதுல் பலாஹின் செயலாளரால் அனுப்பப்படுவதற்காக அஷ்ஷஹீத் அவர்களால் எழுதப்பட்டது.

அஷ்ஷஹீத் அவர்கள் ஓர் இலக்கியவாதியாக விளங்கினார்கள். அழகுத் தமிழில் இலக்கிய நயம் சொட்ட சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். ஆழிய கருத்துக்கள் பொதிந்த ஆக்கங்களைப் பத்திரிகைகளில் எழுதினார்கள். இலக்கிய வாதிகளை நேசித்தார்கள். அவர்களை ஊக்குவித்தார்கள். எழுத்தாளர்களது நூல்களைக் குறைந்த செலவில் தனது இளம்பிறை அச்சகத்தில் அச்சிட்டுக் கொடுத்தார்கள். அவற்றுக்கு வெளியீட்டு விழாக்களை நடத்தி நூலாசிரியர்களைக் கௌரவித்தார்கள்.

இவ்வாறு அஷ்ஷஹீத் அவர்களது இலக்கியத்துறைப் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

## அஷ்ஷஹீத் ஒரு தேசியத் தலைவர்

அஷ்ஷஹீத் அவர்கள் காத்தான்குடியில் பிறந்தவர். அங்கேயே வாழ்ந்து பல்துறைப் பணிகள் செய்தவர். அரசியலில் தீவிர பங்கெடுத்துக் கொண்டாலும் உள்ளூர் அரசியல்வாதியாகவே இருந்தவர். காத்தான்குடி பட்டின ஆட்சிமன்ற உறுப்பினராகவும், அதன் தலைவராகவும் பதவி வகித்தவர். எனினும் தேசிய ரீதியில் எந்தப் பதவியும் வகிக்காதவர். பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் வாய்ப்பைப் பெறாதவர். பல சந்தர்ப்பங்களில் சமாதான நீதவான் (ஜே.பி) பதவிக்கு சில அரசியல் தலைவர்களால் இவர்களது பெயர் சிபாரிசு செய்யப்பட்டும் அதை மறுத்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் அவர் தேசிய ரீதியில் பிரபலம் பெற்றிருந்தார். இலங்கை அரசியல், சமூக, சமயத் தலைவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டார். அவர்களிற் பலரது நெருங்கிய நண்பராக இருந்தார்.

முஸ்லிம்களின் தனித்துவக் கட்சியான சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸைத் தோற்றுவித்தவர் என்ற வகையில் முழு நாட்டிலும் பிரபலம் பெற்றிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பள்ளிவாயல்கள் சம்மேளனம், கிழக்கிலங்கை முஸ்லிம் மஜ்லிஸ் ஆகியவற்றைத் தோற்றுவித்து இது தொடர்பான பணிகளுக்காக கிழக்கிலங்கையிலுள்ள பிரதான இடங்களுக்குப் பயணித்து கூட்டங்களில் உணர்ச்சி ததும்ப உரையாற்றிய வகையில் கிழக்கு மாகாணம் முழுவதிலும் புகழ்ந்து பேசப்பட்டார்.

இதனால்தான் அவரது பரிதாப மரணத்தின் போது முழு நாடும் அதிர்ந்து போனது. தேசியப் பத்திரிகைகள் எல்லாம் அவரது மரணச் செய்தியை தமது தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்தன. “கிழக்கின் மூத்த அரசியல்வாதி அகமது லெப்பை படுகொலை” என்று தினகரனின் தலைப்புச் செய்தி அமைந்திருந்தது. நாடு முழுவதிலுமிருந்து சகல இனத்தவர்களதும் அனுதாபச் செய்திகள் வந்து குவிந்தன.

அவர்களது மரணச் செய்தியை இலங்கை வானொலி மிகவும் முக்கியத்துவம் கொடுத்து ஒலிபரப்பியது. அத்துடன் அவர்களது நினைவுதின நிகழ்ச்சியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை தொடர்ந்து வழங்கிவருகிறது.

## அஷ்ஷஹீத் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட முக்கிய பிரமுகர்கள்.

அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை ஹாஜியார் அவர்கள் தமது சகல பணிகளின் போதும் ஊரிலுள்ள முக்கிய பிரமுகர்களைத் தம்முடன் இணைத்துக் கொண்டார்கள். அமைச்சர்கள், அதிகாரிகளைச் சந்திக்கும் போதும், உயர்மட்ட மாநாடுகளிற் பங்குகொள்ளும் போதும், கருத்தரங்குகளுக்குச் செல்லும் போதும் அவர்களையும் அழைத்துச் செல்வார்கள். இவர்களிற் பலர் தற்போது உயிருடன் இல்லை. அஷ்ஷஹீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது வெற்றிகரமான பணிகளுக்கு மிகவும் உந்து சக்தியாகத் திகழ்ந்த இந்தப் பெருமக்களும் நினைவு கூரத் தக்கவர்கள். இவர்களிற் பின்வருவோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

சங்கைக்குரிய ஷைகுல் பலாஹ் அப்துல்லாஹ் றஹ்மானீ (ஜாமிஅதுல் பலாஹ் அதிபர்), மர்ஹூம் எஸ்.எம்.எம். முஸ்தபா ஜே.பி. (முன்னாள் காதி நீதிபதி), மர்ஹூம் எம்.அப்துல் மஜீத் ஹாஜியார் (முன்னாள் தலைவர், சித்தீகியா மகளிர் அறபுக் கல்லூரி), மர்ஹூம் ஏ.எம்.கலந்தர் லெப்பை (ஜின்னா) ஹாஜியார் (முன்னாள் தலைவர், 1ம் குறிச்சி மீரா ஜும்ஆப் பள்ளிவாயல்), மர்ஹூம் ஏ.எல்.எம். இஸ்மாயில் (ராசா) ஹாஜியார் (முன்னாள் தலைவர், ஜாமிஅதுல் பலாஹ்), மர்ஹூம் கே.எம்.எம். ஹஸன் மௌலவி, மர்ஹூம் எம்.ஐ. இராசாத்தம்பி (முன்னாள் அதிபர்), மர்ஹூம் எஸ்.எல்.ஏ.பாவா ஹாஜியார், மர்ஹூம் ஆ.ம. அகமது மீராசாகிபு ஹாஜியார், மர்ஹூம் எச்.எம்.எம்.அலி (முன்னாள் அதிபர்), மர்ஹூம் ரீ.எல்.அகமது லெப்பை (முன்னாள் அதிபர்), மர்ஹூம் ஏ.எம்.கலந்தர் லெப்பை (எம்.ஆர்.எம்), மர்ஹூம் எம்.சம்சுதீன் ஹாஜியார் (கரீம் பிறதர்ஸ்), தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்ற அல்ஹாஜ் எம்.ஐ.ஏ.முகிதீன் ஜே.பி. (தலைவர், ஜாமிஅதுல் பலாஹ்), அல்ஹாஜ் எம்.பீ. அப்துல் மஜீது ஜே.பி. (முன்னாள் பட்டின சபை ஏழாம் வட்டார உறுப்பினர்), அல்ஹாஜ் எம்.பீ.எம். மீராசாகிபு (முன்னாள் காதி நீதிபதி) போன்ற மூத்த தலைவர்கள் நமதூர் வரலாற்றில் தடம் பதித்தவர்கள்.

அஷ்ஷஹீத் அவர்களது பாசறையில் வளர்ந்து பொதுப் பணிகளிற் பயிற்சி பெற்ற இவர்களெல்லாம் தியாகத்துடன் பணி புரிந்த பெருமக்களாவர். இவர்களிற் பலர் மரணித்துவிட்டார்கள். சிலர் தற்போதும் வாழ்ந்து பொதுப்பணிகள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

மேற் குறித்த மூத்த தலைவர்களோடு பல இளைஞர்களும் இணைந்து அஷ்ஷஹீத் அவர்களுக்கு உறுதுணையாகச் செயற்பட்டனர். மர்ஹூம் எம்.கே.எம்.அலியார், மர்ஹூம் ஏ.கே.அபூபக்கர் போன்றவர்களும் இவர்களுள் அடங்குவர்.

அஷ்ஷஹீத் அவர்கள் தமது பொதுப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் போது படித்தவர்கள், பட்டதாரிகளையும் தம்முடன் சேர்த்துக் கொண்டார்கள். இவர்களில் சட்டத்தரணி ஏ.எல்.அப்துல் ஜவாத் பி.ஏ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ஹாஜ் எம்.ஐ.சின்னலெப்பை பி.ஏ போன்றவர்களைக் குறிப்பிடலாம். சட்டத்தரணி அல்ஹாஜ் ஏ.எல். ஜவாத் பி.ஏ அவர்கள், அஷ்ஷஹீத் அவர்களது பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கின்றார்கள். அஷ்ஷஹீதின் சகோதரரான இவர்கள், காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் பிரதித் தலைவர் பதவியைத் தொடர்ந்து வகித்து தன்னிகரற்ற பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். சம்மேளனத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் நெறிப்படுத்தி ஊரை வழிநடத்திச் செல்கிறார்கள்..

இவர்களோடு இணைந்து பணி செய்த தற்போதும் செய்து கொண்டிருக்கின்ற மிகப் பலர் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். பள்ளிவாயல்களின் நிருவாகிகள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், உலமாக்கள், நிறுவனங்களின் உறுப்பினர்கள், சம்மேளனத்தின் முக்கியஸ்தர்கள், அஷ்ஷஹீத் அவர்களது கடிதங்கள், அறிக்கைகளைத் தயாரித்து உதவிய உத்தியோகத்தர்கள் என்று பலரை இங்கே குறிப்பிடலாம். அவர்களது பட்டியல் மிக நீண்டது. அவர்களையெல்லாம் பெயர்குறிப்பிட்டு எழுதுவதற்கு இந்நூல் இடம்தராது என்பதால், இத்துடன் சுருக்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டுள்ளோம்.

## அஷ்ஷஹீத் அவர்களிடம் காணப்பட்ட சிறப்பியல்புகள்.

அஷ்ஷஹீத் அவர்கள் பொது வாழ்க்கையிலும், சொந்த வாழ்க்கையிலும் மிகவும் புனிதத் தன்மையுடன் நடந்து கொண்டார்கள். தூய உள்ளம், கறைபடியாத கரங்கள், பிரதிபலன் பாராது பிறர்க்குப் பணி செய்யும் மனப்பாங்கு, நேர்மை, இறைபக்தி, சமூக உணர்வு, அநீதிக்கு எதிராகக் குரல்கொடுக்கும் துணிவு போன்ற பல்வேறு நற்பண்புகளின் உறைவிடமாக அவர்கள் விளங்கினார்கள்.

அவர்களிடம் காணப்பட்ட சிறப்பியல்புகள் எல்லோருக்கும் முன்மாதிரியானவை. அவற்றில் சில வருமாறு:-

01. நேர முகாமைத்துவம் அவர்களால் சீராகப் பேணப்பட்டது. எப்போதும் நேரத்திற்கு இயங்குவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. சகல விவகாரங்களையும் மசூராச் செய்தே மேற்கொள்வார்கள். முக்கியமான கட்டங்களில் உலமாக்களைக் கொண்டு துஆச் செய்து கருமங்களைத் தொடங்குவார்கள்.

03. பர்ழான தொழுகைகளைப் போலவே சுன்னத்தான தொழுகைகளையும் கிரமமாக நிறைவேற்றுவார்கள்.

04. ஐவேளைத் தொழுகைகளையும் ஜமாஅத்துடன் நிறைவேற்றுவார்கள்.

05. எப்போதும் வுழுவுடன் இருப்பதில் கூடிய கவனஞ்செலுத்தினார்கள்.

06. கூட்டங்களையும், ஆலோசனைகளையும் கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஆளுமையைக் கொண்டிருந்தார்கள்.

07. பிறரிடம் ஏதாவது பிழையைக் கண்டால் அல்லது அவர்களுக்குப் பிடிக்காத ஒரு செயலைக் கண்டால் நேருக்கு நேராகக் கண்டிப்பார்கள்.

08. திறமைசாலிகளைக் கௌரவித்து ஊக்குவிப்பார்கள்.

09. தான தருமங்களைத் தாராளமாகச் செய்வார்கள்.

10. பொதுப் பணிகளுக்காகப் பலருடன் சேர்ந்து பயணித்து ஊர் திரும்பும் போது ஊரின் எல்லையை அடைவதற்கு முன்னரே பயணச் செலவில் தன்னுடைய பங்கை பொறுப்பாளிகளிடம் கொடுத்து விடுவார்கள்.

11. தான் செய்த உதவிகளுக்காகப் பிறர் ஏதாவது சன்மானம் வழங்க முனைந்தால் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவ்வாறு முனைவோரைக் கடிந்து கொள்வார்கள்.

12. அவரது அபிமானிகள் ஏதாவது உணவுப் பொருட்களை வீட்டுக்குக் கொண்டுவந்து கொடுத்தால் உடனடியாகவே அதற்குரிய பணத்தைக் கொடுத்துவிடுவார்கள்.

13. பட்டம், பதவி, புகழ் எவற்றையும் அவர்கள் ஒருபோதும் விரும்பியதில்லை. பல சந்தர்ப்பங்களில் ஜே.பி. பட்டம் கிடைக்கவிருந்தது. மறுத்துவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. காத்தான்குடியிலிருந்து மட்டக்களப்பிலுள்ள தனது வர்த்தக நிலையத்துக்கு வாடகை வாகனத்தில்தான் தினமும் பயணிப்பார்கள். வாகனத்தில் ஏறியவுடனேயே தனது பணத்தை நடத்துனரிடம் கொடுத்துவிடுவார்கள். வாகனத்தில் பயணிக்கும் எவராவது தனக்குரிய பணத்தையும் கொடுத்து விடுவார்கள் என்பதற்காக இப்படிச் செய்தார்கள்.

15. பெரும்பாலும் வீதியில் நடந்தே செல்வார்கள். நிமிர்ந்து பார்க்காது குனிந்த வண்ணம் செல்வார்கள். நிமிர்ந்து பார்த்துச் சென்றால் சந்திப்போருடனெல்லாம் நின்று பேசிச் செல்ல வேண்டியேற்படும். அது அனாவசியமான தாமதத்தை ஏற்படுத்தி தனது பொதுப்பணிகளுக்கு இடைஞ்சலாயிருக்கும் என்பதாலேயே இவ்வாறு செய்தார்கள்.

16. மஷூராச் செய்து ஒரு முடிவை எடுத்துவிட்டால் அந்த மஷூராவுக்கு மாற்றமாக நடக்க மாட்டார்கள்.

## அஷ்ஷஹீத் அவர்களது வாழ்வின் இறுதி நாட்கள்

1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06ம் திகதி அது இதயத்தைப் பிழிந்த ஒரு கரிநாள். அன்றுதான் அஷ்ஷஹீத் அவர்களை நமது சமூகம் இழந்து துக்கத்தில் துவண்டது. துயரில் உழன்றது.

1988ஆம் ஆண்டு துயரத்தோடுதான் பிறந்தது. 1987 டிசம்பர் 30ஆம் திகதி முதல் 1988 ஜனவரி 8 ஆம் திகதி வரையான பத்து நாட்கள் காத்தான்குடியின் கரிநாட்கள். எல்.டி.டி.ஈ யினரால் முற்றுகையிடப்பட்ட படு மோசமான தினங்கள். அந்தப் பத்துத் தினங்களும் காத்தான்குடி மக்கள் சொல்லொணாத் துயரில் உழன்று சோகத்தில் மூழ்கிக் கிடந்தனர். காத்தான்குடியை விட்டு எவரும் வெளியேற முடியாது. வெளியிலிருந்து யாரும் உள் நுழைய முடியாது. அந்தளவு பயங்கரவாதிகளின் பிடிக்குள் காத்தான்குடி சிக்குண்டு கிடந்தது. எல்.டி.டி.ஈ ஐச் சேர்ந்தவர் என்று கருதப்பட்ட காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவர் காத்தான்குடியில் கொலை செய்யப்பட்டதனால் ஆத்திரமடைந்த எல்.டி.டிஈ யினர் இவ்வாறு காத்தான்குடியை முற்றுகையிட்டனர்.

இந்தப் பத்துத் தினங்களும் அஷ்ஷஹீத் அவர்களுக்குக் கடும் பிஸியான நாட்கள். இரவு பகலாக அவர்கள் இயங்கிக் கொண்டிருந்தார்கள். மக்கள் துயர் துடைக்கப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988 ஜனவரி முதலாம் திகதி, காத்தான்குடி மீரா பாலிகா மகா வித்தியாலயத்தில் அஷ்ஷஹீத் அவர்களது தலைமையில் ஊர்ப்பிரமுகர்கள் இந்திய அமைதிகாக்கும் படையினருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். எல்.டி.டி.ஈ பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து காத்தான்குடி மக்களை மீட்டெடுப்பது பற்றி அங்கு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

1988 ஜனவரி இரண்டாம் திகதி அமைச்சர் அல்ஹாஜ் எம்.எச்.முகம்மத், சம்மாந்துறை நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் மஜீத், கல்முனை நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர். மன்சூர், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அஹ்மத் றிஸ்வி சின்னலெப்பை ஆகியோர் மட்டக்களப்புக்கு வந்து மன்றேசா இராணுவ முகாமில் இந்திய அமைதிகாக்கும் படை அதிகாரிகளுடன் காத்தான்குடி நிலைவரம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் அஷ்ஷஹீத் அஹமது லெப்பை ஹாஜியார் அவர்கள் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார்கள்.

மூன்றாந் திகதி இரவு அஷ்ஷஹீத் தலைமையில் காத்தான்குடிப் பிரமுகர்கள் எல்.டி.டி.ஈ யினருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

நான்காம் திகதி காத்தான்குடி முதலாங் குறிச்சி ஸாவியாத் தைக்காவில் காத்தான்குடி இளைஞர்களை அஷ்ஷஹீத் தலைமையில் பிரமுகர்கள் சந்தித்துப் பேசினர். அன்றிரவு எல்.டி.டி.ஈ யினருடனான சந்திப்பும் இடம்பெற்றது. இதிலும் அஷ்ஷஹீத் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

ஐந்தாந்திகதி கர்பலாக் கிராமத்திலுள்ள வீடுகள் எரிக்கப்பட்டன. காத்தான்குடி முதலாங்குறிச்சியில் முஸ்லிம் ஒருவர் கொலை செய்யப்பட்டார். ஊரில் பதற்றம் அதிகரித்தது. இச்சந்தர்ப்பத்தில் அஷ்ஷஹீத் அவர்கள் மும்முரமாகச் செயற்பட்டுக்கொண்டிருந்தார்கள். எல்.டி.டி.ஈ யினருடன் கடிதத் தொடர்பை மேற்கொண்டார்கள். இவ்வேளையிலும் காத்தான்குடி தீன் வீதியிலிருந்த சில குடிசைகள் எரிக்கப்பட்டன.

அஷ்ஷஹீத் அவர்கள் எல்.டி.டி.ஈ யினருடன் கடிதமூலம் தொடர்பு கொண்டார்கள். முற்றுகையைத் தளர்த்துமாறு கேட்டுக் கொண்டார்கள். இதன் பயனாக இன்று போராளிகள் சமாதானத்துக்கு இணங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் திகதி காத்தான்குடிக்கு அயலிலுள்ள மஞ்சந்தொடுவாயில் இந்திய அமைதி காக்கும் படையினர் முகாம் அமைத்தனர். அவர்கள் ஆரையம்பதியில் முற்றுகையிட்டுப் பலரைக் கைது செய்தனர். மஞ்சந்தொடுவாய் இராணுவ முகாமில் சமாதானக் குழுக்களின் கூட்டம் நடைபெற்றது. அஷ்ஷஹீத் அவர்கள் இக்கூட்டத்திற் கலந்து கொண்டு தமது மக்களது துன்ப துயரங்களை எடுத்துக் கூறினார்கள்.

ஏழாம் திகதி பின்னேரம் மெத்தைப் பள்ளியில் பிரமாண்டமான கூட்டம் நடைபெற்றது. பெருந் திரளான மக்கள் கலந்து கொண்டார்கள். அஷ்ஷஹீத் அவர்கள் இக்கூட்டத்தில் ஊர் நிலைமைகளை விளக்கி, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் பேசினார்கள். தனது செயற்பாடுகளுக்கு சகல மக்களதும் பூரண ஒத்துழைப்பைக் கோரினார்கள். அங்கு திரண்டிருந்த மக்கள் ஒரே குரலில் ஒத்துழைப்புத் தருவதாக ஏகோபித்துக் கூறினர். அஷ்ஷஹீத் அவர்கள் தமது பணிகளைத் தொடர்ந்தார்கள்.

எட்டாந் திகதி வெள்ளிக் கிழமை போராளிகளின் முற்றுகையிலிருந்து காத்தான்குடி விடுபட்டது. காத்தான்குடி பிரதான வீதியில் இரண்டொரு வாகனங்கள் காத்தான்குடியூடாகப் போக்குவரத்துச் செய்தன. மக்கள் நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர். இந்தப் பத்துத் தினங்களும் அஷ்ஷஹீத் அவர்கள் இயந்திரம் போல் இயங்கினார்கள். தனது முழுத் திறமையையும் செல்வாக்கையும் பாவித்துக் காத்தான்குடி மக்களுக்குப் பெருந்துணை புரிந்தார்கள்.

1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆறாந் திகதி ஞாயிற்றுக் கிழமை அஷ்ஷஹீத் அவர்கள் அதிகாலை முதல் தமது வீட்டில் அன்றாட அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். காலை 6.30 தொடக்கம் தன்னைச் சந்திக்க வருவோருடன் கலந்துரையாடி அவர்கள் தேவைகளைக் கவனித்தார்கள்.

அன்று காலை 10.00 மணிக்கெல்லாம் ஜாமிஅதுல் பலாஹுக்கு வந்துவிட்டார்கள். ஜாமிஅதுல் பலாஹில் ஓர் அறையில் அமர்ந்துதான் தனது பொதுப் பணிகளைக் கவனிப்பார்கள். கடிதங்கள், அறிக்கைகள் தயாரிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் அந்த அறையில் அமர்ந்திருந்து கடிதங்கள் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டார்கள். ழுஹ்ருத் தொழுகையை ஜாமிஆவில் நிறைவேற்றிவிட்டு தொடர்ந்தும் எழுதிக் கொண்டிருந்தார்கள். அக்கடிதங்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதப்பட்டவை. காத்தான்குடியின் முக்கிய தேவைகள் பிரச்சினைகள் சம்பந்தமாக அரசியல் தலைவர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்கள். அவற்றை எழுதி முடித்துவிட்டு பிற்பகல் ஒன்றரை மணியளவில் வீட்டுக்குச் சென்றார்கள்.

அன்று அஸ்ர் தொழுகையின் பின் மெத்தைப் பள்ளியில் அப்பள்ளியின் நம்பிக்கையாளர் சபைக் கூட்டம் நடைபெற்றது. அதில் அஷ்ஷஹீத் அவர்கள் கலந்து கொண்டார்கள். மஃரிபுத் தொழுகையை மெத்தைப் பள்ளியில் நிறைவேற்றினார்கள்.

அங்கிருந்து ஜாமிஅதுல் பலாஹுக்கு வந்தார்கள். அங்கு மிக முக்கியமான ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது பயங்கரமான காலகட்டம் ஆதலால் அடிக்கடி கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றன. அன்றும் காத்தான்குடியின் முக்கிய பிரமுகர் ஒருவர் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டிருந்தார். அது சம்பந்தமாக ஆலோசிக்கும் கூட்டமே பலாஹில் நடைபெறவிருந்தது. கூட்டத்துக்கு அழைக்கப்பட்டவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். பிரமுகர் கடத்தப்பட்ட விடயம் அக்கூட்டத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டது.

கடத்தப்பட்ட பிரமுகரை விடுதலை செய்யுமாறு கோரும் உருக்கமான கடிதத்தை அஷ்ஷஹீத் எழுதி அதனை தட்டச்சுச் செய்ய அல்ஹாஜ் மஹ்ரூப் கரீம் அவர்களிடம் கொடுக்கிறார்கள். அறபியில் பிஸ்மி குறிப்பிடப்பட்டு தமிழில் தயாரிக்கப்பட்டு சங்கைக்குரிய ஷைகுல் பலாஹ் அவர்களின் துஆவுடன் ஆரையம்பதி பிரசைகள் குழுவுக்கு கடிதம் அனுப்பப்படுகிறது.

பின்னர் ஜாமிஅதுல் பலாஹில் இஷாத் தொழுகை நடைபெறுகிறது. அதில் அஷ்ஷஹீத் அவர்கள் கலந்து கொள்கிறார்கள். சுன்னத்துத் தொழுகையையும் நிறைவேற்றுகிறார்கள்.

இஷாத் தொழுகையின் பின் கூட்டம் தொடர்கிறது. 1985 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைகள், கடத்தல்கள் பற்றிய விபரங்களை அப்போதைய வெளிவிவகார அமைச்சர் அல்ஹாஜ் ஏ.ஸீ.எஸ்.ஹமீத் அவர்களுக்கு அனுப்ப வேண்டும் என்ற விபரத்தை அஷ்ஷஹீத் அவர்கள் அக்கூட்டத்தில் தெரிவிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அன்று அவர்கள் கடைசியாக எழுதிய கடிதங்களை ஜாமிஅதுல் பலாஹ் அலுவலகத்தில் ஒப்படைக்கிறார்கள். அவை :-

01) அப்போதைய வெளிநாட்டு அமைச்சர் அல்ஹாஜ் ஏ.ஸீ.எஸ்.ஹமீத் அவர்களுக்கு காத்தான்குடியின் முக்கிய தேவைகள் குறித்த கடிதம்

02) பாத்தும்மா சரிதை நூல் வெளியீட்டு விழா பற்றி கலாநிதி ஏ.ஸீ.எல்.அமீர் அலி அவர்களுக்கு எழுதிய கடிதம்.

03) இந்திய செஞ்சிலுவைச் சங்கத்துக்கு இந்திய வைத்திய அதிகாரிகள் மூலம் காத்தான்குடி மக்களுக்கு இலவச வைத்திய சிகிச்சை வழங்கியமைக்கு நன்றி தெரிவிக்கும் கடிதம்.

04) காத்தான்குடியின் இருண்ட பத்து நாட்களின் போது பல்வேறு உதவிகள் புரிந்தமைக்காக பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் ஹலீம் இஸ்ஹாக் அவர்களுக்கு எழுதிய நன்றிக் கடிதம் ஆகியவையாகும்.

அத்துடன் கூட்டத்தை முடித்துக் கொண்டு ஜாமிஅதுல் பலாஹிலிருந்து வீட்டுக்குச் செல்கிறார்கள். செல்லும் வழியில் காத்தான்குடி 4ம் குறிச்சியும் 3ம் குறிச்சியும் இணையும் சந்தியில் அவர்களது உயிர் பறிக்கப்படுகிறது. வீதியில் சரிந்து ஷஹீதாகிறார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி றாஜிஊன்)

அந்த இரவு இரத்த ராத்திரி. மக்கள் இரத்தம் உறைந்த இராத்திரி. எல்லார் உள்ளங்களும் உடைந்த இரவு. ஊரே அஸ்தமித்துப் போகிறது.

மறுநாள் 07.03.1988 திங்கட் கிழமை மிகுந்த சோகத்துடன் விடிகிறது. முழு நாட்டுக்கும் இச்சோகச் செய்தி பரவுகிறது. ஊடகங்களிலெல்லாம் அஷ்ஷஹீத் அவர்களின் மறைவுச் செய்தியே தலைப்புச் செய்தியாகிறது. குறிப்பாக சவூதி அரேபிய "அறபு நியூஸ்" ஆங்கிலப் பத்திரிகை, ஐலண்ட் ஆங்கிலப் பத்திரிகை, வீரகேசரி, தினகரன், தினபதி போன்ற தமிழ்ப் பத்திரிகைகளிலும் மரணச் செய்தி பரசுரமாகியிருந்ததது.

அன்று கிழக்கில் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. காத்தான்குடியில் பாடசாலைகள், சந்தைகள், கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. மு.ப.10.00 மணிக்கு கிழ்ரிய்யாத் தைக்காவில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாஸா நல்லடக்கம் பற்றிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. பிபகல் 1.00 மணி தொடக்கம் ஜனாஸா கிழ்ரிய்யாத் தைக்காவில் வைக்கப்பட்டிருந்தது. அஸ்ர் தொழுகைக்கு மெத்தைப் பள்ளிக்குக் கொண்டு செல்லப்பட்டு அஸ்ர் தொழுகையின் பின் கத்முல் குர்ஆன் நிகழ்ச்சி நடைபெற்றது. மெத்தைப் பள்ளி சனங்களால் நிரம்பி வழிந்தது. அனேக நிறுவனங்கள் சார்பில் பல பிரமுகர்களால் அனுதாப உரைகள் நிகழ்த்தப்பட்டன. மஃரிபுத் தொழுகை வரை இவ்வுரைகள் இடம்பெற்றன. மஃரிபுத் தொழுகையின் பின் ஜனாஸாத் தொழுகை நடைபெற்றது. அஷ்ஷஹீத் அவர்களின் புதல்வர் மௌலவி ஏ.எல்.எம். மக்பூல் பலாஹி அவர்கள் ஜனாஸாத் தொழுகையை நடத்தினார்கள். சுமார் பி.ப. 7.30 மணியளவில் மெத்தைப் பள்ளி மையவாடியில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.

சமூக உணர்வு கொண்ட ஒரு பெருந் தலைவரை காத்தான்குடி மட்டுமல்ல இலங்கை முஸ்லிம் சமூகமும் இழந்தது. அந்த இழப்பை ஈடு செய்ய முடியாமல் இன்றுவரை அது தவித்துக் கொண்டிருக்கிறது. அஷ்ஷஹீத் அவர்கள் மரணித்து 25 வருடங்கள் கடந்துவிட்டன. எனினும் அவர்கள் மக்கள் மனங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது மறுமைப் பேறுகளுக்காக மனமுருகிப் பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நமது தலைவர் அவர்கள் தமது வாழ்வின் இறுதிப் பகுதியில் காத்தான்குடியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்துகிறார்கள்.



1980இல் மட்டக்களப்பு நகர மண்டபத்தில், கிழக்குப் பல்கலைக்கழம் திறப்பது தொடர்பான கலந்துரையாடலில் நமது தலைவர் அவர்கள் உரை நிகழ்த்துகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை ஹாஜியார் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு, காத்தான்குடிப் பிரதேசத்தில் மிகச்சிறப்பாகப் பணியாற்றிவரும் பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன அலுவலகத்தின் கம்பீரத் தோற்றம்.



நமது பெருந்தலைவர் அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை ஹாஜியாரின் நேரடிக் கண்காணிப்பில் செயற்பட்டு, அவர்களது சமூகப் பணிகளின் கேந்திர நிலையமாக விளங்கி இன்றும் சமயப் பணிகளை அதிசிறப்பாகச் செய்து உலமாக்களையும், ஹாபிழ்களையும் முழு நாட்டுக்கும் வழங்கிக் கொண்டிருக்கும் ஜாமிஅதுல் பலாஹ் அறபுக் கல்லூரியின் கவின்மிகு தோற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தமா நகரின் காவலன் மகாத்மாவாக மரணித்தார்...

**(அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை அவர்களின் மகனும் முன்னாள் நகர பிதாவுமாகிய அல்ஹாஜ் மர்சூக் அஹ்மத் லெவ்வை அவர்கள் தனது தந்தையின் குண நல இயல்புகள் வாழ்க்கைச் சம்பவங்கள் தொடர்பாக இந்நூலுக்கு தொகுத்து வழங்கிய ஆக்கம்)**

அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை மூன்று நிலைகளிலும் உயர்ந்து நின்றார்கள். ஒரு மனிதன் வாழ்க்கையில் ஏற்படும் எல்லாவற்றையும் சமாளிக்கின்ற தன்னம்பிக்கை, திறமை, நிதானம் ஆகியவற்றுடன் வாழ்க்கைப் பாதையில் கம்பீரமாக நடைபோட வேண்டுமாக இருந்தால் இந்த மூன்று நிலைகளிலும் உயர்ந்து நிற்க வேண்டும். அதாவது

1. உடல் அளவில் உயர்ந்து நிற்க வேண்டும்.
2. மன அளவில் உயர்ந்து நிற்க வேண்டும்.
3. ஆன்மீக அளவில் உயர்ந்து நிற்க வேண்டும்.

அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை அவர்கள் உடல் அளவில் எப்போதும் உயர்ந்தே நின்றார். கூனிக்குறுகி ஒருபோதும் நிற்க மாட்டார். அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை எப்போதும் மன அளவில் உயர்ந்தே நிற்பார். எப்போதும் முதல் தரமாகவே சிந்திப்பார். இரண்டாந்தர எண்ணங்களுக்கு இடமளிக்கவே மாட்டார். அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை ஆன்மீக அளவில் உயர்ந்து நின்றார். ஒழுக்கத்தால் ஆன்மீக அளவில் உயரமாக இல்லாத எவரும் மற்றவர்களின் மதிப்பீட்டில் மாத்திரமல்ல தங்களுடைய மனசாட்சிப்படியுங் கூட உயர்ந்து நிற்க முடியாது.

அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை ஒரு சுயநலமற்ற தலைவராக இருந்தார். எந்த சந்தர்ப்பத்திலும் அவரிடத்தில் சுயநலத்தைக் காண முடியாது. அவரிடம் இருந்த சுயநலமற்ற தன்மை என்ற பண்போடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது நாட்டில் உள்ள எந்த முஸ்லீம் தலைவர்களும் அவருக்கு நிகராக மாட்டார்கள். தனக்கு முன்னால் தன்னுடைய சொந்த வேலைகளும், பொது வேலைகளும் இருந்தால் எப்போதும் பொது வேலைக்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கின்ற ஒரு ஒப்பற்ற தலைவராக இருந்தார். அதனை மிக மனத் தூய்மையோடு (இஹ்லாஸ்) செய்வார். மறந்துபோயும் வாழ்க்கையில் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநலத்தை சூடிக்கொள்ளவில்லை. பொதுநலனைத்தான் பொருந்திக்கொண்டார். பொது வேலையில் ஈடுபடாத, பொழுது ஒரு பொழுதே இல்லையென்ற கொள்கையோடு இருந்தார்.

தான் மரணிக்கின்ற காலப்பகுதியில் ஊர் முழுவதுமாக ஏற்றுக்கொண்ட தலைவராக காணப்பட்டார். கீரைக் கடைக்கும் எதிர்க்கடை இருக்கும் என்பது போல ஊரிலே சில பகுதியினர் அவரை எதிர்த்து வந்தார்கள். அதில் முக்கியமானவர் மௌலவீ அப்துல் றஊப் மிஸ்பாஹியும் அவரது ஆதரவாளர்களும். ஆனால் 1987 ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையிடம் வட கிழக்கு மாகாணம் ஒப்படைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் இந்திய அமைதி காக்கும் படை காத்தான்குடியால் நடைபயணமாக சென்றுகொண்டு இருக்கும் போது ஒரு இந்திய சிப்பாய் விடுதலைப் புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த இந்திய அமைதி காக்கும் படை காத்தான்குடி ஆறாம் குறிச்சி பிரதான வீதியில் நின்ற மக்களையெல்லாம் சுற்றி வளைத்து அவர்களை நிலத்திலே படுக்க வைத்து அவர்களையெல்லாம் சுட்டுக்கொல்வதற்கு எத்தனித்துக்கொண்டிருந்த பொழுது அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை பெரிய ஹஸரத் மௌலானா மௌலவி அப்துல்லா ரஹ்மானியுடன் கொலை நடந்த, கொலை செய்ய எத்தனிக்கின்ற அந்த பதற்றமான ஸ்தலத்திற்கு நேரடியாக தனது உயிரையும் துச்சம் என மதித்து சென்றார்கள். அங்கு இந்திய படையிடம் "நீங்கள் பணயமாக வைத்திருப்பது அப்பாவி பொதுமக்கள் இவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும்" என வாதிட்டு இவர்களை விடுவிப்பதாக இருந்தால் இந்திய சிப்பாயை கொன்றவனை தங்களுக்கு தரவேண்டும் என்ற இந்திய இராணுவத்தின் நிபந்தனையை ஏற்று அதற்கு உத்தரவாதத்தினை வழங்கி அந்த உத்தரவாதத்தின் பெயரில் அம்மக்களை விடுவித்தார்கள். இவ்வாறு பணயமாக பிடிக்கப்பட்டிருந்தவர்களில் அதிகமானவர்கள் மௌலவீ அப்துல் றஊப் மிஸ்பாகியின் உறவினர்களும், ஆதரவாளர்களுமாவார்கள். இதன் பின்னர் மௌலவீ அப்துல் றஊப் மிஸ்பாகியின் ஆதரவாளர்களும் அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பையை ஊரின் தலைவர் தான் என ஏகமாக ஏற்றுக் கொண்டார்கள். இவரை எதிர்த்த மௌலவீ அப்துல் றஊப் மிஸ்பாகியின் ஆதரவாளர்களும் இவரை ஊரின் தலைவர் ஆக ஏற்றுக்கொண்ட பின்னர் இவருக்கு இந்த ஊரிலே இருந்த சொற்ப எதிர்ப்பும் இல்லாமலாகி ஊரின் ஒட்டுமொத்த தலைவனாக மதிக்கப்பட்டார். எம்.எல்.ஏ.அஸிஸ் ஜி.எஸ்.ஒ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈரான் அஸீஸ்) சொன்னார் "தான் ஒரு முறை மௌலவீ அப்துல் றஊப் மிஸ்பாகி அவர்களை சந்தித்த போது அவர் சொன்னார் ஒரு சிறந்த தலைவனிடத்தில் இரண்டு முக்கியமான பேணுதல்கள் இருக்க வேண்டும்.

1. நிதி சம்பந்தமான பேணுதல்
2. பெண்கள் சம்பந்தமான பேணுதல்

இந்த இரு பேணுதல்களும் அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வையிடம் இருந்தன எனவே அவர் ஒரு சிறந்த தலைவர் தான். அவருக்கும் எனக்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா "முர்தத்" பட்டம் வழங்கியதில் தான் கருத்து முரண்பாடு இருந்ததே ஒழிய வேறு ஒன்றுமில்லை" என மௌலவீ அப்துல் றஊப் மிஸ்பாகி கூறியதாக ஈரான் அஸீஸ் கூறினார்.

அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை மரணித்த பின் ஆரையம்பதியை சேர்ந்த ஒரு பிரமுகர் என்னை சந்தித்த போது 6ம் குறிச்சி பிரதான வீதியில் இந்திய அமைதி காக்கும் படை மக்களை சுட்டுக்கொல்வதற்காக பணயம் வைத்திருந்த சம்பவத்தை நினைவு படுத்தி கூறும் பொழுது அவர் கூறினார். "அஹ்மத் லெவ்வை சாதாரணமாக ஊரிலே இருக்கமாட்டார் சில நேரங்களில் பொதுப்பணிக்காக கொழும்பு சென்றிருப்பார். ஆனால் இந்திய அமைதி காக்கும் படை மக்களை பணயம் வைத்த அன்று அஹ்மத் லெவ்வை ஊரிலே இருந்தது ஆரையம்பதி மக்கள் செய்த பெரும் பேறாகும். அன்று அவர் வந்து இந்திய இராணுவத்தின் நடவடிக்கையைத் தடுத்திராவிட்டால் ஆரையம்பதியில் அரைவாசிப்பகுதியை அழித்திருப்பார்கள். நாங்கள் அஹ்மத் லெவ்வையை ஒரு யேசுநாதரை பார்ப்பது போலதான் பார்கின்றோம்" என்றார். அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை தனது வாழ்க்கையில் ஒரு கனவானாகவே (Gentleman) வாழ்ந்து வந்தார். அவரது கனவான்தனத்திற்கு ஒரு சம்பவத்தை ஞாபகப்படுத்தலாம் என நினைக்கின்றேன். அது 1970 ஆம் ஆண்டு அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை காத்தான்குடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு தலைவராக இருந்த காலம். ஒரு நாள் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு தலைவர் என்ற ரீதியில் சங்கத்திலே தனது கடமையை மேற்கொண்டிருந்த போது அன்று சங்கத்திற்கு வந்த கடிதங்களை பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அன்று வந்த கடிதங்கள் சுமார் பத்து இருக்கும். அதிலே நான்கு கடிதங்களை வாசித்துவிட்டு ஐந்தாவது கடிதத்தை வாசிக்கும் போது அந்த கடிதமானது அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வையை பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்தின் தலைவர் பதவியில் இருந்து நீக்கி உதவி கூட்டுறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணையாளரால் அனுப்பப்பட்ட கடிதமாகும். தான் தலைவர் பதவி நீக்கப்பட்ட அந்த கடிதத்தை படித்ததும் மிகுதி இருந்த ஐந்து கடிதங்களையும் வாசிக்காமல் உடனடியாக தலைவர் ஆசனத்தில் இருந்து எழுந்து சங்கத்தை விட்டே சென்றுவிட்டார். தான் பதவி நீக்கப்பட்ட செய்தியை அறிந்த மறுகணமே அச்சங்கத்தைவிட்டு சென்ற ஒரு கனவான்தான் அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை. அவர் பதவி நீக்கப்பட்டதிற்குரிய காரணம் உண்மையில் என்னவென்றால் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு தலைவராக நியமிக்கப்பட இருப்பவருக்கு அச்சமயத்தில் அச்சங்கத்தில் எந்த கடன் நிலுவையும் இருக்க கூடாது. ஆனால் அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை தலைவர் பதவிக்கு வருமுன் அச்சங்கத்தில் விவசாய கடன் எடுத்த நிலுவை இருந்தது. தான் தலைவர் பதவியை ஏற்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் சங்க ஊழியர் MM. இஸ்மாயில் என்பவரிடம் கடன் நிலுவை பணம் முழுவதையும் கொடுத்து சங்கத்தில் அப்பணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளுமாறு பணித்துள்ளார். ஆனால் அப்பணத்தை பெற்ற MM. இஸ்மாயில் உடனடியாக அப்பணத்தை செலுத்தாமல் நான்கு நாட்களுக்கு பின்னரே செலுத்தி உள்ளார். ஆனால் அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை தான் அப்பணத்தை கொடுத்த அன்றே MM. இஸ்மாயில் செலுத்தி இருப்பார் என நம்பி இருந்தார். ஆனால் நடந்ததோ அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை தலைவர் பதவியை பொறுப்பேற்று இரு நாட்களின் பின்னரே அப்பணம் உத்தியோகபூர்வமாக செலுத்தப்பட்டு இருந்தது. தலைவர் பதவியேற்கும் போது கடன் நிலுவை இருந்ததை யாரோ எதிரி சுட்டிக்காட்டியதை தொடர்ந்து உதவிக் கூட்டுறவு ஆணையாளரினால் பதவி நீக்கப்பட்டார். இது MM. இஸ்மாயிலின் கவனயீனத்தினால் ஏற்பட்ட தவறாகும்.

ஒருமுறை அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை மெத்தைப்பள்ளிவாயலுக்கு செயலாளராக இருந்த போது ஒரு முறைப்பாடு பள்ளிவாயலுக்கு வந்தது. மெத்தைப்பள்ளிவாயலின் முஅத்தினாராக கடமையாற்றிய மஹ்மூது லெவ்வை முஅத்தினாருக்கும் (ஊசி மோதினார்) சம்சுதீன் காக்கா என்பவருக்கும் (தாண்டவன்வெளி சந்தியில் கடை வைத்திருந்தவர்) ஒரு பிரச்சினை. வன்செயல் காலம் என்ற படியால் மெத்தைப்பள்ளிவாயலின் காட்டுத்தேங்காய் மரப்பக்கமுள்ள கதவு அதிகாலை நாலு மணிக்கும் மற்ற இரு கதவுகளையும் காலை ஆறு மணிக்கும் பாதுகாப்பு காரணங்களுக்காக திறப்பது வழக்கமாக இருந்தது. மெத்தைப்பள்ளிவாயலின் பின்புற கதவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை நாலு மணிக்கு திறக்கவேண்டும் என சம்சுதீன் காக்கா, மஹ்மூது லெவ்வை முஅத்தினாருடன் தொடர்ச்சியாக பிரச்சினை செய்து வந்தார். அவர் நான்கு மணிக்கு தஹஜ்ஜத் தொழுவதற்கு பள்ளிக்கு வருவதற்கு கதவு திறக்காமல் இருப்பது இடைஞ்சலாக இருப்பதுதான் முஅத்தினாருடன் பிரச்சினைபடக் காரணம். சம்சுதீன் காக்காவின் தொல்லை தாங்க முடியாமல் மஹ்மூது லெவ்வை முஅத்தினார் பள்ளி நிர்வாகத்திடம் முறைப்பாடொன்றை கொடுத்தார். அன்று வழக்கமாக ஞாயிற்றுக்கிழமை காலை மெத்தைப்பள்ளிவாயலின் செயலாளராக இருந்த அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வையும் ஏனைய நிர்வாகிகளும் மற்ற முறைப்பாடுகளையெல்லாம் விசாரித்து தீர்வு கண்டார்கள். ஊசி மோதினாரின் முறைப்பாட்டை கடைசியாக எடுத்த அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை அப்பிரச்சினையை தான் விசாரிக்காமல் AM. அசனார் மரைக்கார் போன்ற நிர்வாகிகளிடம் விசாரிக்கும் படி கூறிவிட்டு தனக்கு வேறு வேலை இருப்பதாக சென்றுவிட்டார். மஹ்மூது லெவ்வை முஅத்தினாருக்கும் (ஊசி மோதினார்) சம்சுதீன் காக்காவுக்கும் உள்ள பிரச்சினையை விசாரித்த ஏனைய நிர்வாகிகள் மெத்தைப்பள்ளியின் பின் கதவின் சாவியில் ஒன்றை சம்சுதீன் காக்காவிடம் கொடுப்பது என்றும் அவர் அதிகாலை பள்ளிவாயலுக்கு வரும் போது மோதினாருடன் பிரச்சினைப்படாமல் கதவை திறந்து பூட்டிக்கொள்வதென்றும் பிரச்சினை சுமூகமாக தீர்க்கப்பட்டது. அன்று பின்னேரம் AM.அசனார் மரைக்காரைக் கண்ட அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை "மோதினாரின் பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்பட்டது?" என வினவியதோடு தீர்வு கண்ட முறையையும் அறிந்து சந்தோசப்பட்டதோடு தான் ஏன் அந்த முறைப்பாட்டை விசாரிக்க இருக்கவில்லை என்பதையும் பின்வருமாறு விளங்கப்படுத்தினார். "சம்சுதீன் காக்கா என்பவர் என்னுடைய தந்தையுடைய கடையில் ஊழியாராக இருந்தவர். அவர் கடையில் இருந்து சந்தைக்கு பொருட்கள் வாங்க செல்லும் போது சிறுவனான என்னை தூக்கி தோளிலே போட்டுக்கொண்டு செல்வார். என்னை தோளிலே தூக்கிச்சென்ற அவரை நான் எவ்வாறு விசாரிப்பது? என்றுதான் அதனை விசாரிக்க உங்களிடம் விட்டுச்சென்றேன்" என்று அசனார் மரைக்காரிடம் அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை விளங்கப்படுத்தினார். அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வையிடம் இருந்த மரியாதையை என்னவென்று சொல்வது! பெருமானாரிடம் அவரது சிறிய தந்தையான அபூதாலிப் மீது அவர் இஸ்லாத்தை தழுவாதிருந்தும் கூட பெரும் மரியாதை இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தான்குடி மக்கள் வங்கி கொள்ளையிடப்பட்டு எமது மக்கள் தங்களின் கோடிக்கணக்கான பெறுமதிமிக்க நகைகளை இழந்து அல்லலுற்றார்கள். இவ்வாறு வடகிழக்கிலே உள்ள பல வங்கிகள் கொள்ளையடிக்கப்பட்டன. "நகை இழந்தோர் சங்கம்" என்று ஒரு சங்கத்தை ஸ்தாபித்து அதன் மூலம் போராடி எந்தவொரு அதிகாரமிக்க பதவியும் அரசியலில் இல்லாத நிலையில் சாதாரண ஒரு மகனாக இருந்து எமது மக்களுக்கு நட்டஈட்டை அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை பெற்றுக்கொடுத்தார். வேறு எந்த கொள்ளையிடப்பட்ட வங்கிகளும் இவ்வாறு நட்டஈட்டை வழங்கவில்லை. இவ்வழிமுறையைப் பின்பற்றி முஸ்லிம்கள் மாத்திரமல்ல தமிழர்களும் நட்டஈட்டைப் பெற்று பயன்பெற்றனர். அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வையின் இந்த நடவடிக்கையைப் பார்த்து அக்கரைப்பற்று வங்கியில் கொள்ளை அடிக்கப்பட்ட நகைகளுக்கு நட்டஈட்டைப்பெற அக்கரைப்பற்றை சேர்ந்தவர்களும் நகை இழந்தோர் சங்கத்தை ஸ்தாபித்தார்கள். அச்சங்கத்தை ஆரம்பித்துவிட்டு அவர்கள் அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வைக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். "எமது சங்கத்திற்கு நீங்கள் வரவேண்டும் எங்களது நட்டஈட்டைப் பெறுவதற்கு நீங்கள் உதவி செய்யவேண்டும் நாங்கள் எமது பிரதேசத்தை சேர்ந்த வேறு அரசியல் வாதிகளின் உதவியை நாடவில்லை" என அக்கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார்கள். இவர்கள் இக்கடிதத்தை தபாலில் சேர்த்த மறுநாள் அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை சுட்டுக்கொல்லப்பட்டார். பின்னர் அக்கரைப்பற்று நகை இழந்தோர் சங்கம் அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வையின் மரண செய்தியை கேட்டு மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்து அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வையின் பிள்ளைகளாகிய எங்களுக்கு அனுதாப செய்தியை கடிதம் மூலம் அனுப்பி இருந்தார்கள். அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வையிடம் சந்திப்பதற்கு நேரம் கேட்டு எழுதிய கடிதமும் அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வையின் மரணச்செய்தியை கேட்டு அதற்கு அனுப்பிய அனுதாப கடிதமும் இந்த இரு கடிதங்களும் அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வையின் மரணத்தின் பின்னர் ஒரே நாளில் எங்களுக்கு கிடைக்கப்பெற்றன என்பது இங்கு குறிப்பிட வேண்டிய முக்கிய விடயமாகும்.

அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை எப்போதும் கொள்கைப் பற்றுள்ளவாராக இருந்து வந்தார் தான் ஆடை உடுத்துவதில் கூட அவரிடம் ஒரு கொள்கை இருந்தது. எப்போதும் வெள்ளை சாரம் தான் அணிவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் 65 x 35 துணியிலே சாரம் தைத்து அதைத்தான் அணிவார். முழுக்கை சேர்ட்தான் போடுவார். சேர்ட் பல நிறத்தில் இருக்கும். ஆடைகளை தானோ அல்லது தனது மனைவியைக் கொண்டோ துவைக்கமாட்டார். வண்ணானைக் கொண்டு கழுவி எப்போதும் சலவை செய்த ஆடைகளையே அணிவார். கலவர காலங்களில் கூட முஸ்லிம்கள் தமிழ் பகுதிக்கோ தமிழர்கள் முஸ்லிம் பகுதிக்கோ செல்ல முடியாத சூழ்நிலையில் வண்ணான் ஊருக்குள் வரமுடியாது. இந்த சூழ்நிலையில் வண்ணானை ஊரின் எல்லைக்கு அழைத்து சலவை செய்த ஆடையை அவனிடம் பெற்று சலவை செய்ய வேண்டிய அழுக்கடைந்த ஆடையை அவனிடம் கொடுப்பதற்கு ஏற்பாடுகளை செய்து அந்த நெருக்கடியான கால கட்டத்திலும் சலவை செய்த ஆடைகளை அணிவார்.

அரசியல் என்பது உலகாயுதம். அரசியலில் நேர்மை என்பது ஆத்மீகம். அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை அரசியலையும் அல்லாஹ்வுக்கு பொருத்தமான ஆன்மீகமாகவே செய்து வந்தார். அவரின் நெஞ்சின் உரத்திற்கும் நேர்மைத் திறனுக்கும் முன்னே உண்மையும் நேர்மையும் அவரிடம் கைகட்டி நின்று பாடம் கேட்கும். அவர் வாழ்வில் பறித்துண்ணும் பழக்கம் கொஞ்சமும் இருந்ததில்லை.

அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை காற்றை சுவாசிக்கவில்லை. காத்தான்குடியைத்தான் சுவாசித்தார். “தான் காத்தான்குடி மீது வைத்திருக்கும் பற்றை ஒரு தராசிலும் இந்த ஊரில் உள்ள மற்றவர்கள் எல்லோரும் காத்தான்குடி மீது வைத்திருக்கும் பற்றை ஒரு தராசிலும் வைத்து நிறுத்தால் தன்னுடைய ஊர்ப்பற்றை வைத்த தராசுதான் கதிக்கும்” என அடிக்கடி கூறுவார். அந்தளவு இந்த ஊரை நேசித்தார். சுவாசித்தார். ஊரை மாத்திரமல்ல மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் தேவைகளையும் கவனித்து வந்தார். இந்திய அமைதி காக்கும் படை இருந்த காலகட்டத்தில் விடுதலைப்புலிகள் ஓட்டமாவடி பாலத்தில் வைத்து இந்திய இராணுவத்தை கொன்றழித்தனர். இதனால் ஆத்திரமடைந்த இந்திய இராணுவம் ஓட்டமாவடி பசாரயே தீக்கிரையாக்கி அழித்தது. பயத்தின் காரணமாக ஓட்டமாவடி மக்கள் ஓடி ஒழித்தார்கள். ஆனால் அந்த இடத்திற்கு சென்ற அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை ஓடி ஒழிந்திருந்த ஓட்டமாவடி மக்களை அழைத்து இந்திய இலங்கை அரசிடம் எமது பக்க நியாயங்களை எடுத்துக்காட்டி களையிழந்து வெறிச்சோடிப்போயிருந்த கடைத்தெருவை மீண்டும் புதுப்பொலிவுடன் இயங்க வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட ரீதியாக மாத்திரமல்ல மாகாண ரீதியாக கிழக்கிழங்கை முஸ்லிம் மஜ்லிஸை அமைத்து மாகாண ரீதியாக முஸ்லிம்களின் ஒற்றுமையைப் பேணியதுடன் கிழக்கு மாகாணத்திலே ஒரு உயர்ந்த முஸ்லிம் தலைவராக மிளிர்ந்தார்.

மாகாண ரீதியாக மட்டுமல்ல தேசிய ரீதியாகவும் முஸ்லிம் சமுதாயத்திற்கு ஆற்றிய சேவைகளுள் மிக முக்கியமானதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் கோங்கிரஸ் கட்சியின் உதயத்தை குறிப்பிடலாம். முஸ்லிம்கள் தங்களது அரசியல் அபிலாசைகளை அடைவதாக இருந்தால் முஸ்லிம்களுக்கு ஒரு தனிக்கட்சி வேண்டும் என்று குரல் கொடுத்து, தேசிய பத்திரிகைகளில் அது சம்பந்தமான கட்டுரைகளை தொடர்ச்சியாக எழுதி வந்து ஈற்றிலே தனது தலைமையிலேயே காத்தான்குடியில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் கோங்கிரசை உருவாக்கினார். இக்கட்சியை தேசிய ரீதியாக வளர்தெடுத்தவர் மறைந்த மாமனிதர் எம்.எச்.எம்.அஸ்ரப் ஆகும். எந்த வித பதவிகளையும் தான் பொறுப்பேற்காது சகல பதவிகளையும் மற்றவர்களுக்காக தானம் கொடுத்து விட்டு தான் அத்தனை நிறுவனங்களிலும் உயிர் மூச்சாக இருந்து தொழிற்பட்டவர் தான் எமது தலைவர் அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை.

தன்னுடைய ஒவ்வொரு நடவடிக்கைகயிலும் இஸ்லாமிய மார்க்கக் கோட்பாடு மீறப்படாமல் பார்த்துக் கொள்வார். உலமாக்காளின் ஆலோசனைகளைக் கேட்பார். மார்க்க அனுஸ்ட்டானங்களில் மிகப் பேணுதலாக இருந்து அல்லாஹ்விடத்தில் மிக நெருக்கமானவராக இருந்தார். இவ்வாறான ஒரு மனிதரை கயவர்கள் ஈவு இரக்கமின்றி சுட்டுக்கொன்றார்கள். அவர் அந்நியர்களால் சுட்டுக்கொல்லப்படவில்லை. முஸ்லிம் என்று சொல்லப்படுகின்ற எமது ஊர் சகோதர்களினால் தான் சுட்டுக் கொல்லப்பட்டார். **1988**ஆம் ஆண்டு மார்ச் மாதம் **06**ஆம் திகதி இரவு **9.20** மணிக்கு அவரது உயிர் பறித்தெடுக்கப்பட்டது. துப்பாக்கிக்குண்டுக்கு இரக்கமில்லை என்பதை நிருபிக்க அவரது உடல் தான் கிடைத்ததா?. பொது வாழ்கைக்காகவே வாழ்ந்த ஒர் உயிர் ஊரின் பொது இடத்தில் வைத்தே பறித்தெடுக்கப்பட்டது. இவர் கொல்லப்பட்ட போது இவரின் உடலில் இருந்து இரத்தம் ஆறாக பெருக்கெடுத்திருந்தது. துணிவு கொண்ட ஒருவரின் உடலில் இருந்து இரத்தம் இவ்வாறுதான் வெளியேறும். ஜிஹாதின் போது சஹாபாக்களின் இரத்தம் இவ்வாறுதான் வெளியேறியது. கோழையின் உடலில் இருந்து இவ்வாறு இரத்தம் பெரிதாக வெளியேறாது. அவரது உயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியும் போது வுளூ உடனேயே மௌத்தானார். வுளூவுடன் ஒருவர் 'மௌத்' ஆகினால் அவரது றூஹை வரவேற்க ஜிப்ரில் (அலை) அவர்களே நேரடியாக வருவதாக கூறப்படுகின்றது. இவ்வாறு அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமான அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வையை கொன்றவர்களை அல்லாஹ் மிக நீண்ட நாட்கள் வாழ வைக்கவில்லை. குறுகிய காலத்திலேயே அல்லாஹ் அழித்துவிட்டான். அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை மரணித்து மூன்று மாதங்களில் இருந்து ஒன்பது மாதத்திற்குள் அவரின் கொலையில் சம்பந்த பட்டவர்களில் 6 பேர் கொல்லப்பட்டார்கள். இந்த 6 பேரையும் கொல்வதில் ஜே.வி.பி சம்பந்தப்பட்டது, விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்டார்கள், இலங்கை பொலிஸார்கள் சம்பந்தப்பட்டனர். இந்த 6 பேரும் வேறு வேறு சம்பவங்களில் இவ்வாறு கொல்லப்பட்டனர். அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பது பழமொழி. ஆனால் அல்லாஹ்வோடு மிக நெருக்கமாக இருந்த அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பையை கொலை செய்தவர்களை அழிப்பதற்கு அல்லாஹ் வெகுகாலம் காத்திருக்கவில்லை. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்ற பழமொழிக்கு மாற்றமாக அரசன் அன்று கொல்வான் அல்லாஹ்வும் அன்றே கொல்வான் என்ற புதுமொழிக்கு வித்திட்டவர் அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை. சில வருடங்களின் பின்னர் இவரின் கொலையில் சம்பந்தப்பட்ட எஞ்சியிருந்தவர்களில் மூன்று பேர் சிறுநீரகம் செயலிழந்து (Kidney Failure) மரணித்தார்கள்.

அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை மரணித்தவுடன் ஒரு துண்டுப் பிரசுரத்தை மெத்தைப்பள்ளி பசார் வாலிப முன்னணியினர் வெளியிட்டிருந்தனர். அது ஒரு கவிதை. அதில் ஒரு வரி இவ்வாறு அமைந்திருந்தது.

**"காத்த நகர் தலைவணங்கா காவலனே**
**காத்திருக்கோம் அவன் நீதி இறங்க வேண்டும்"**

அல்லாஹ் எங்களை மிக நீண்ட நாட்கள் அவனுடைய நீதி இறங்குவதற்கு காத்திருக்க வைக்கவில்லை. வெறும் 9 மாதங்கள் தான் காத்திருக்க வைத்தான் அதற்குள் அவன் நீதி இறங்கி விட்டது.

ஒரு முஸ்லிம் என்றால் இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்று ஒருவரைச் சுட்டிக்காட்டி கதைப்பதாக இருந்தால் அது அஷ்ஷஹீத் அஹ்மத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெவ்வையாகத்தான் இருக்கும். ஒரு முன்மாதிரியான முஸ்லிம் (Model Muslim) என்றால் அது அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை தான். ஒரு முஸ்லிம் என்றால் இவ்வாறுதான் இருப்பான் என்று நாங்கள் ஒரு வரைவிலக்கணம் அமைத்தால் அந்த வரைவிலக்கணத்திற்கு 100% பொருத்தமானவராக அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வை இருந்தார். அதாவது தன்மாதிரித் தலைமைகளுக்கு முன்மாதிரித் தலைவராக திகழ்ந்தார்.

அஷ்ஷஹீத் அஹ்மத் லெவ்வையின் நண்பரான முன்னாள் காதி நீதிபதி மஃறுப் கரீம் சேர் "அஹ்மத் லெவ்வை குறைகள் குறைவான தலைவர்" என்று அடிக்கடி கூறுவார். அதாவது அவரிடத்தில் நிறைகள் தான் நிரம்பவுமாக இருந்தன. அவரிடத்தில் குறைகள் ரொம்ப குறைவாகவே இருந்தது. குறைகளே இல்லை என்று சொல்லும் அளவுக்கு இருந்தது.

ஒரு மனிதனின் இறப்பிற்கு ஒரு பிள்ளை அழுதால் அவன் சிறந்த தந்தையாக இருந்துள்ளான். ஒரு மனிதனின் இறப்பிற்கு ஒரு குடும்பம் அழுதால் அவன் சிறந்த குடும்பத் தலைவனாக இருந்துள்ளான். ஒரு மனிதனின் இறப்பிற்கு ஒரு ஊரே அழுதது என்றால் அவன் சிறந்த தலைவனாக இருந்துள்ளான் என்று அர்த்தம்.

ஒரு ஜனாசாவுக்கு இந்த அளவு ஆண்கள் அதிகமாக அழுததை நான் வாழ்கையிலேயே கண்டதில்லை. நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும், தாடி வைத்த அவரின் நீண்ட உருவத்தையும் காண்கின்ற அவரது எதிரியின் உள்ளமும் அவருக்கான கண்ணியத்தை பிரசவிக்குமே. தன்னலமும் உனக்கு இல்லை. தலைமையிலும் வெறியில்லை. வீட்டுக்கு ஒரு மையித்து வீழ்ந்தது போல் வாடியதே உள்ளமெல்லாம். சொத்துக்கள் சேர்த்ததில்லை. சுகங்கள் சுகித்ததில்லை. புத்திரர் வாழ்க்கைக்கு என்று பொருளொன்றும் தேடவில்லை. ஊரின் நலனே அவர் உயிர். சத்தியம் தான் அவர் பயணம் செய்த பாதை. சத்தியத்தை தவிர அவருக்கு வேறு ஒன்றும் தெரியாது. நேர்மை தான் அவர் அமர்ந்திருந்த நிழல். யாரும் சொல்லாதீர்கள் அஹ்மத் லெவ்வை மரணித்துவிட்டார் என்று.

**- மர்சூக் அஹ்மத் லெவ்வை -**
**முன்னாள் நகர பிதா, காத்தான்குடி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரிய மௌலான கபுறடி சதுக்கத்தில் அஷ்ஷஹீத் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அரசியற் கூட்டமொன்றில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட பிரதி நீதி அமைச்சர் முஸ்தபா அவர்கள் உரையாற்றுவதையும், எமது தலைவர் அவர்கள் அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



காத்தான்குடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்தபோது ஜாமிஉல்ழாபிரீன் மார்க்கட் சதுக்கத்தில் திறக்கப்பட்ட மொடல்ஷொப் திறப்புவிழாவின்போது நமது தலைவர் உரையாற்றுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1982ம் ஆண்டில் திரு.அனுர பாண்டார நாயக்க அவர்களின் மட்டக்களப்பு விஜயத்தின்போது மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் அஷ்ஷஹீத் அவர்களுக்கு ஆதரவாளர்கள் மலர்மாலை சூடுகின்றனர்.



இலங்கையில் இஸ்ரேல் தூதரகம் திறப்பது தொடர்பான தீர்மானம் மேற்கொண்டபோது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து காத்தான்குடி "புறாக்" மாணவர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்டனக் கூட்டத்தில் அஷ்ஷஹீத் அவர்கள் உரையாற்றுகிறார்கள். இலங்கையில் நடைபெற்ற முதலாவது எதிர்ப்பு கண்டனக்கூட்டம் இதுவாகும். ஜனாப் SLA. கபூர் அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தியாவுக்கான தற்போதைய உதவி உயர்ஸ்தானிகர் அவர்கள் அமீர் அஜ்வத் SLOAS அவர்கள் நிற்பதையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலைத் தொகுப்பதற்குத் தகவல் வழங்கியுதவிய பெருமக்கள் :

01. அல்ஹாஜ் ஏ.எல். அப்துல் ஜவாத் பி.ஏ., எல்எல்.பீ.
அஷ்ஷஹீத் அவர்களின் சகோதரர், காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனப் பிரதித் தலைவர்.
(விடயம் : அஷ்ஷஹீத் அவர்களது குடும்பம், பிறப்பு)

02. அல்ஹாஜ் எம்.பீ. அப்துல் மஜீத் ஜே.பி.
காத்தான்குடி பட்டின ஆட்சி மன்ற முன்னாள் உப தலைவர். முன்னாள் ஏழாம் வட்டார உறுப்பினர்.
(விடயம்: அஷ்ஷஹீத் அவர்களது அரசியல், சமூகப் பணிகள்)

03. அல்ஹாஜ் எஸ்.எம்.பி. முகைதீன் பி.ஏ., ஜே.பி.
ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர், தலைவர், ஜாமிஅதுஸ் ஸித்தீகியா மகளிர் அறபுக் கல்லூரி, காத்தான்குடி.
(விடயம் : குத்பாக்களை ஒன்றுபடுத்தியமை)

04. அல்ஹாஜ் எம்.ஐ.ஏ. முகிதீன் ஜே.பி.
அஷ்ஷஹீதின் நெருங்கிய நண்பர். அவர்களுடன் கூட்டாக வர்த்தகம் செய்தவர். (காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹின் தற்போதைய தலைவர், காத்தான்குடி முஸ்லிம் சிறுவர் இல்லச் செயலாளர்)

05. அல்ஹாஜ் மௌலவி ஏ.எம். அப்துல் காதர் (பலாஹி) ஜே.பி.
அஷ்ஷஹீத் அவர்களது அலுவலக உதவியாளர், அவர்களது கடிதங்கள், அறிக்கைகளைச் சிறப்பாகத் தயாரித்தும், தட்டச்சுச் செய்தும் வழங்கியவர். மட்டக்களப்பு மாவட்ட சர்வ சமயப் பேரவையின் முன்னாள் தலைவர்)
(விடயம் : அஷ்ஷஹீதின் சமய, சமூக, கல்விப் பணிகள், அவர்களது குணப் பண்புகள், பிரசுரங்கள், அறிக்கைகள், கடிதங்கள், பத்திரிகை நறுக்குகள்)

06. ஜனாப் எஸ்.எல்.ஏ. கபூர் பி.கொம்.
மட்/மம/மெத்தைப்பள்ளி வித்தியாலய அதிபர். அஷ்ஷஹீத் நூல் வெளியீட்டுக் குழுச் செயலாளர்
(விடயம் : அஷ்ஷஹீத் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட நிறுவனங்கள், அவர்களோடு இணைந்து பணி செய்தவர்கள், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசும் அஷ்ஷஹீதும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. அல்ஹாஜ் எம்.ரீ.எம். காலித் ஜே.பி
காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர், காத்தான்குடி
ஜாமிஉல் லாபிரீன் ஜும்ஆப் பள்ளி உப தலைவர்.
(விடயம்: 1965 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலும், அஷ்ஷஹீதும், காத்தான்குடி அரசினர் வைத்தியசாலையின் தோற்றமும், வைத்திய அதிகாரியும்)

08. அல்ஹாஜ் எம்.எச்.ஏ. பஷீர் ஜே.பி
ப.மு.நி.சம்மேளன நிறைவேற்றுக் குழு உறுப்பினர். காத்தான்குடி விஷேட தேவையுடையோர் நிலையத் தலைவர்
(விடயம் : அஷ்ஷஹீதின் சமூக நலத் தொண்டு, சம்மேளனத்தின் தோற்றம் )

09. அல்ஹாஜ் எம்.ஐ.எம். முஸ்தபா ஜே.பி.
இளங்கவிஞர், அஷ்ஷஹீத் பெயர் தாங்கிய நிறுவனங்களின் உறுப்பினர்
(விடயம் : அஷ்ஷஹீதின் சமூகப் பணிகள் இடம்பெற்ற காலகட்டங்கள்)

10. அல்ஹாஜ் ஏ.எம். ஸாதிகீன்
ப.மு.நி.சம்மேளன உப செயலாளர்
(விடயம் : காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளம் - ஓர் அறிமுகம்)

11. அஷ்ஷஹீத் அவர்களது நினைவாக 16.06.1989 இல் வெளியிடப்பட்ட நினைவு மலரில் இடம்பெற்ற கட்டுரைகளில் இருந்தும் தகவல்கள் பெறப்பட்டன. அவற்றை எழுதியோர்.

1- அல்ஹாஜ் எம்.எம்.எம். மஹ்ரூப் கரீம் எம்.ஏ.
2- மர்ஹூம் எம்.எஸ்.ஏ.அஸீஸ், மட்டக்களப்பு
3- மர்ஹூம் கே.எம்.எம். ஷா (பிரபல எழுத்தாளர் "பித்தன்")
4- டாக்டர் எம்.எல்.நஜ்முத்தீன்
5- திரு டீ.எஸ்.கே. வணசிங்க, மட்டக்களப்பு
6- அல்ஹாஜ் எம்.எஸ்.எம்.ஏ. கரீம் (ஓய்வு பெற்ற அதிபர்)
7- மர்ஹூம் மௌலவி எம்.எம்.எஸ். முகம்மத்
8- ஜனாப் எஸ்.அமீர் அலி (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)
9- மரஹூம் ஏ.எம்.முகிதீன் (அஷ்ஷஹீதின் சகோதரர்)

**இவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்ஷஹீத் அல்ஹாஜ் ஏ.அஹ்மத் லெப்பை வரலாற்று நூல் வெளியீட்டுக் குழு

01. அல்ஹாஜ் ஏ.எல். அப்துல் ஜவாத் பி.ஏ. எல்.எல்.பி (ஆலோசகர்)
02. அல்ஹாஜ் மௌலவி எம்.எச்.எம். புஹாரி (பலாஹீ) (தலைவர்)
03. ஜனாப் எஸ்.எல்.ஏ. கபூர் - அதிபர் - (செயலாளர்)
04. அல்ஹாஜ் எஸ்.எம்.எம். சுபைர் பி.ஏ,
பிரதேச கல்விப் பணிப்பாளர் (பொருளாளர்)
05. அல்ஹாஜ் எம்.ஐ.ஏ. முகிதீன் ஜே.பி.
06. அல்ஹாஜ் எம்.எச்.ஏ. பஷீர் ஜே.பி.
07. அல்ஹாஜ் மௌலவி ஏ.எம். அப்துல் காதர் ஜே.பி.
08. அல்ஹாஜ் மர்சூக் அகமது லெப்பை ஜே.பி. முன்னாள் நகர பிதா
09. அல்ஹாஜ் எம்.ரீ.எம். காலித் ஜே.பி. முன்னாள் காழி நீதி பதி
10. அல்ஹாஜ் எம்.ஐ.எம். உசனார். பி.ஏ.
11. அல்ஹாஜ் எம்.எச். முகம்மத் ஜே.பி.
12. அல்ஹாஜ் எம்.ஐ.எம். முஸ்தபா
13. அல்ஹாஜ் மௌலவி எஸ்.எச்.எம். றமீஸ் (ஜமாலீ) பீ.ஏ, ஜே.பி.
14. அல்ஹாஜ் எம்.ஐ.எம். சுபைர்
தலைவர், மீரா பெரிய ஜும்ஆ மஸ்ஜித், காத்தான்குடி - 01
15. ஜனாப் எம்.ஐ.எம். தையூப் ஜே.பி.
தலைவர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், காத்தான்குடி - 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைவதற்கு முப்பத்தாறு மணிகளுக்கு முன்னர் மாதலைவர் மொழிந்தவை.

- நான் பிறந்த இந்த மண்ணிடம் பட்ட எனது பிறவிக்கடனைத் தீர்ப்பதற்காக என்னாலான மிகப் பெரும் பணிகளை என் இறுதி மூச்சு வரை செய்து கிடப்பேன்.

- பொழுது புலர்ந்தால் பொது நோக்கோடு எவரையும் சந்திக்காதவரை அந்தப் பொழுது எனக்குப் பூரணமான பொழுதல்ல.

- என்னை எதிர்ப்பவர்களை நான் என்றும் எதிர்க்க எண்ணுவதில்லை; என் மண்ணை எதிர்ப்பவர்களை நான் எதிர்க்கத் தவறுவதுமில்லை; தயங்குவதுமில்லை.

- இந்த மண்ணில் எந்த உயிரும் வீணாக இரத்தம் சிந்துவதை என்னால் அனுமதிக்க ஒண்ணாது.

- ஆயுதத்தால் வெல்லவொண்ணாத அனைத்தையும் இறைவேத வழிநின்று வென்றெடுப்பேன். என்றும் அதையே என் வழியாக்குவேன்.

- எனது சமூகம் ஏனைய சமூகங்களாடு இணக்கமாகவும் இறுக்கமாகவும் வாழ்தல் வேண்டும். அது தனது கலாசாரத்தையும் உரிமைகளையும் பாதிக்காத வகையில் அமைதல் வேண்டும்.

- எனது எண்ணக் கருவினை எதிர்பார்த்து இந்த மண்ணைக்காத்திட ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் காத்து நிக்கின்றனர் என்பதனை நான் உணர்வேன். அவர்களுக்கு நான் சொல்லுவது, எதையும் சாத்வீகமான முறையில் போராடி வென்றெடுக்க வேண்டும் என்பதுதான்.

ISBN 9789554114302

9 789554 114302

Dotline Offset Printers - Kattankudy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org